**உண்மையான மக்களாட்சி**

"மிக அதிகமானவர்களுக்கு மிக அதிக நன்மை பயப்பதுதான், உண்மையான மக்களாட்சி"

–மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்
புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள்

**சாதனை**

"சாதிக்க நினைத்தவர்கள் எந்த தடைகள் வந்தாலும், அதனை உடைத்தெறிந்து தமது பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பார்கள்"

–**எடப்பாடி கே. பழனிசாமி**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019 – 2020

மானியக் கோரிக்கை எண். 41 – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மானியக் கோரிக்கை எண். 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2019-2020

### 1. முன்னுரை

மன்னராட்சி காலங்களில் இருந்து ஆட்சியாளர்களின் பிரதான நிதி ஆதாரமாக நில வருவாய் இருந்த காலந்தொட்டே, நில வருவாயை வசூல் செய்யும் துறையாக வருவாய்த்துறை செயல்பட்டு வந்தது. காலப்போக்கில், வருவாய்த்துறை அரசாங்கத்தின் முக்கிய நிருவாகத்துறையாக உருவெடுத்தது. 1786-இல் வருவாய் வாரியம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, அனைத்து மாகாணம் மற்றும் மாவட்டங்களில், பொது நிருவாகத்திற்கான மையத்துறையாக வருவாய்த்துறை விளங்கியது. இந்நிலையில், 1980-ஆம் ஆண்டு வருவாய் வாரியம் கலைக்கப்பட்டு, அதன் செயல்பாடுகள் புதிதாக உருவாக்கப்பட்ட 3 ஆணையரகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. பின்னர், தேவையின் அடிப்படையில் தற்போது 5 ஆணையரகங்கள் செயல்பட்டு வருகின்றன. காலப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சிக்கேற்ப, இத்துறை பன்முகத்தன்மை கொண்ட துறையாக தற்போது சிறப்பாக உருப்பெற்று, பேரிடர் காலங்களில் மக்களை பாதுகாக்கும் முக்கிய பணியினை மேற்கொள்கின்ற துறையாக வளர்ச்சியடைந்துள்ளது.

வருவாய்த்துறையானது தனது பன்முகத் தன்மையினால், விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கும் அரசின் முகமாகச்

செயல்பட்டு வருகிறது. இத்துறை மக்களின் அன்றாட வாழ்வில் எல்லா நிலைகளிலும் இரண்டறக் கலந்துள்ளது. இன்றளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற பெரும்பான்மையான துறைகள் வருவாய்த் துறையிலிருந்தே உருவாக்கப்பட்டதால் அத்துறைகள் யாவும் வருவாய்த்துறையின் சேவைகளை சார்ந்தே உள்ளன.

இத்துறை அரசின் உடமைகளான நிலம், நீர்நிலை, கனிமம் மற்றும் புதையல் ஆகியவற்றிற்கு பாதுகாவலாக இருந்து வருகிறது. விவசாயிகள் விவசாய கடன் பெறவும், மாணவர்கள் கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி கற்பதில் சலுகைகள் பெறவும், வேலைவாய்ப்பற்றவர்கள், சமூகத்தில் பின் தங்கியவர்கள், தொழில் முனைவோர் மற்றும் தொழிற்சாலைகள் பயன்பெறும் வகையில் பல்வேறு விதமான சான்றிதழ்களை, குறிப்பாக சாதி, பிறப்பு, இறப்பு, வாரிசு, வருமானம், பட்டா மாறுதல் சான்றிதழ் மற்றும் பல்வேறு உரிமங்கள் ஆகியவற்றை வழங்கி வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையம் நடத்தும் தேர்தல்களிலும் வருவாய்த்துறை மிக முக்கிய பங்காற்றுகிறது.

மேலும், வருவாய்த்துறை இயற்கை இடர்ப்பாடுகளின் போதும், மனிதர்களால் ஏற்படும் பேரிடர்களின் போதும்

அனைவரின் எதிர்பார்ப்பிற்கேற்ப முன்னின்று செயல்பட்டு வருகிறது. பேரிடர் காலங்களில் எளிதில் சென்றடைய மற்றும் நெருங்க முடியாத இடங்களில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மற்றும் உரிய நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் முதன்மையான துறையாக செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், நில நிருவாக ஆணையரகம், நிலச் சீர்திருத்த ஆணையரகம், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகம் ஆகிய ஐந்து ஆணையரகங்கள்/ இயக்குநரகம் செயல்பட்டு வருகிறது.

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், வருவாய் நிருவாக ஆணையர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இவ்வாணையரகம், பொது நிருவாகம், பேரிடர் மேலாண்மை, மக்கள் குறை தீர்த்தல், சமூக பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துதல், நலிந்தோர் உதவி, சான்றுகள் வழங்குதல், தேசிய மக்கள் தொகை பதிவேடு தயாரித்தல், வெடிபொருள்

உரிமம், துப்பாக்கி உரிமம், பொது கட்டடங்கள் உரிமம் உள்ளிட்ட பிற உரிமங்கள் வழங்குதல் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை விநியோகித்தல் ஆகிய பணிகளை கவனித்து வருகிறது. வருவாய் நிருவாக ஆணையர் மாநில நிவாரண ஆணையராகவும் செயல்படுகிறார். இவ்வாணையரகம், பேரிடர் காலங்களில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களை பாதுகாத்தல், மீட்பு மற்றும் நிவாரணம் வழங்கல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது. மேலும், அனைத்து, மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைக் குழுக்களின் பணிகளையும் கண்காணிக்கிறது. இதோடு மட்டுமின்றி, 2017-ஆம் ஆண்டு முதல் நீர்நிலைகளைத் தூர்வாருதல் மற்றும் வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி கண்காணித்தல், டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பான பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைக்கும் பணிகளையும் மேற்கொள்கிறது.

நில நிருவாக ஆணையரகம், நில நிருவாக ஆணையர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இவ்வாணையரகத்தால், நில எடுப்பு, நில உரிமை மாற்றம், பிற துறைகளுக்கு நில மாற்றம் செய்தல், நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படை மற்றும் நிலப்

பட்டாக்கள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இவ்வாணையரகம் நில ஆக்கிரமணங்களை அகற்றுவதன் மூலம், அரசு நிலங்களின் பாதுகாவலனாக செயல்படுகிறது.

நிலச்சீர்திருத்த ஆணையரகம், நிலச்சீர்திருத்த ஆணையர் தலைமையின்கீழ் செயல்படுகிறது. இவ்வாணையரகத்தின் மூலம் தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நிலஉச்சவரம்பு நிர்ணய) சட்டம், தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோக) விதிகள், தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (உபரிநிலங்களுக்கு தொகை வழங்குதல்) விதிகள், குத்தகைச் சட்டங்கள், குறைந்தபட்ச ஊதியச்சட்டம் மற்றும் தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்கும் அவர்களது குடும்ப நபர்களுக்கும் சமூக பாதுகாப்பு வழங்கும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாடு பூமிதான யக்ஞ சட்டம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (நீக்கறவுச் சட்டம்) சம்பந்தமான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம் தற்போது நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையர் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978/ நீக்கறவுச் சட்டம், 1999 தொடர்பான பணிகள் 'அறியாக்கிரயம் பெற்றோர்' திட்டத்தின் கீழ் கிரயங்களை வரன்முறைப்படுத்துதல் ஆகியவை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி முதன்மைச் சட்டம், 1966/ திருத்தச்சட்டம், 1991 சட்டக் கூறுகளின் கீழ் மாநிலத்தில் 24 மாவட்டங்களில் நகர்ப்புறங்களாக அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் வரிவிதிப்பு செய்யும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் இயக்குநரகம், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் இயக்குநர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இவ்வியக்குநரகம் பல்வேறு வகையான நிலஅளவை பணிகளை மேற்கொள்ளுதல், நில ஆவணங்களை பராமரித்தல், நில உரிமைக்கேற்ப புலங்களில் உட்பிரிவுகளை மேற்கொள்ளுதல், நில ஆவணங்களை கணினிப்படுத்தி இணையவழியில் பராமரித்தல் மற்றும் இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினை செயல்படுத்துதல் போன்ற நிலம் தொடர்பான பலதரப்பட்ட பணிகளையும் நிலவரித்திட்ட பணிகளையும் செயல்படுத்தி மேற்பார்வை செய்கிறது.

மேற்காணும் ஆணையரகங்களின் ஒட்டுமொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 61,437 ஆகும்.

**அட்டவணை -1.1**

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் கீழ் இயங்கும் ஐந்து ஆணையரகங்களின் பணியாளர் விவரம்

| ஆணையரகம்/ இயக்குநரகத்தின் பெயர் | முதலாம் நிலை அலுவலர் | இரண்டாம் நிலை அலுவலர் | மூன்றாம் நிலை அலுவலர் | நான்காம் நிலை அலுவலர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை | 5 | 3,959 | 24,680 | 23,435 | 52,079 |
| நில நிர்வாகம் | 6 | 25 | 98 | 22 | 151 |
| நில சீர்திருத்தம் | 2 | 38 | 123 | 51 | 214 |
| நில அளவை மற்றும் நிலவரி திட்டம் | 13 | 314 | 6,943 | 1,513 | 8,783 |
| நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி | 1 | 37 | 104 | 68 | 210 |
| **மொத்தம்** | 27 | 4,373 | 31,948 | 25,089 | 61,437 |

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியருக்கு நிர்வாகத்தில் உதவி புரிய மாவட்ட வருவாய் அலுவலர்கள், சார் ஆட்சியர்கள்/வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், நில அளவை/ உதவி இயக்குநர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள், நில அளவை ஆய்வாளர்கள்/ துணை ஆய்வாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

## 2 வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை

வருவாய் நிருவாக ஆணையர்/ மாநில நிவாரண ஆணையரின் தலைமையில் சமூக பாதுகாப்புத்திட்ட இயக்குநர், பேரிடர் மேலாண்மை இயக்குநர், இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்) மற்றும் இதர அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாணையரகத்தின் பணிகளில் அடங்குபவை

1. பொது வருவாய் நிருவாகம்
2. நில வருவாய் வசூல்
3. சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களை செயல்படுத்துதல்
4. துயர் துடைப்புத் திட்டங்கள்
5. பொது மக்கள் குறை தீர்க்கும் பணிகள்
6. பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு
7. கீழ்க்கண்ட சட்டங்களை அமல்படுத்துதல் மற்றும் செயலாக்கம் செய்தல்
    - அ) வருவாய் வசூல் சட்டம் 1864
    - ஆ) புதைப்பொருள் சட்டம் 1878
    - இ) தமிழ்நாடு வெடிபொருள் சட்டம் 1884
    - ஈ) தமிழ்நாடு அடகு பிடிப்போர் சட்டம் 1943
    - உ) பொதுக் கட்டிட உரிமம் சட்டம் 1965
    - ஊ) தமிழ்நாடு பிறப்பு /இறப்பு பதிவுச்சட்டம் 1969
    - எ) தமிழ்நாடு அதிக வட்டிக்கு கடன் கொடுப்பதை தடுத்தல் சட்டம் 2003 மற்றும்

இத்துறை மாவட்ட நிலை முதல் கிராம நிலை வரை களப்பணியாளர்களைக் கொண்டுள்ளது.

## 2.1 மாவட்ட நிருவாகம்

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்கள் (புதிதாக உருவாக்கப்படவுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டம் நீங்கலாக) மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின் கீழ் இயங்குகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர்/ மாவட்ட நடுவரின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட அளவிலான பல துறைகளைச் சார்ந்த மாவட்ட நிலை அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## 2.2 வருவாய் கோட்ட நிருவாகம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் நிருவாகம் செம்மையாக செயல்பட கோட்டங்களாக பிரிக்கப்பட்டு, சார் ஆட்சியர்/ கோட்டாட்சியர் தலைமையில் இயங்கி வருகின்றன. வருவாய் நிருவாகம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, நில நிருவாக மேற்பார்வை, கிராம நிருவாகம் போன்ற பொறுப்புகளை வருவாய்க் கோட்டாட்சியர்கள் நிர்வகித்து கண்காணித்து வருகின்றனர். தற்போது மாநிலத்தில் மொத்தம் 87 கோட்டங்கள் உள்ளன.

## 2.3 வருவாய் வட்ட நிருவாகம்

வட்ட நிருவாகம், வட்டாட்சியரின் தலைமையில் இயங்கி வருகிறது. பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மாணவ/

மாணவியர்களுக்குத் தேவையான பட்டா, சிட்டா, அடங்கல், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ் போன்ற பல்வேறு சான்றிதழ்கள் வழங்குவதற்கு துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் உதவி புரிகின்றனர். தற்போது மாநிலத்தில் மொத்தம் 305 வருவாய் வட்டங்கள் உள்ளன.

## 2.4 குறுவட்ட நிருவாகம்

ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள சில வருவாய் கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பிர்க்கா என்று அழைக்கப்படும் குறுவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. வருவாய் ஆய்வாளர் குறுவட்டத்திற்கு தலைவர் ஆவார். இவர் நிலவரி வசூல் பணியிலும், கிராம நிருவாக அலுவலர்களின் பணியினை மேற்பார்வையிடுவதிலும் முக்கிய பங்காற்றி வருகிறார். தற்போது மாநிலத்தில் மொத்தம் 1190 குறுவட்டங்கள் உள்ளன.

## 2.5 கிராம நிருவாகம்

வருவாய் நிருவாகத்தின் அடித்தளமாக கிராம நிருவாகம் இயங்கி வருகிறது. கிராம நிருவாகம், கிராம நிருவாக அலுவலர் தலைமையில் இயங்கி வருகிறது. கிராம நிருவாக அலுவலர்கள், கிராம கணக்குகளை பராமரித்தல், நிலவரி வசூல் செய்தல், அரசு நிலங்களை பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பு ஆவார்கள். பொதுமக்களுக்கு பேரிடர் காலங்களில் தகவல் அளித்தல் மற்றும் உயர் அலுவலர்களுக்கு அசம்பாவித நிகழ்வுகள் /சட்டம் ஒழுங்கு

குறித்த இனங்கள் தொடர்பான தகவல் அளித்தல் ஆகிய பணிகளில் கிராம நிருவாக அலுவலர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். தமிழ்நாட்டில் மொத்தம் 16,688 வருவாய் கிராமங்கள் உள்ளன.

**2.6 வருவாய் நிருவாக பணியாளரமைப்பு**

வருவாய் நிருவாகத்துறை துணை ஆட்சியர் பணிநிலை முதல் கிராம உதவியாளர் நிலைவரை தற்போது 52,074 பணியாளர்களை கொண்டுள்ளது. பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

**அட்டவணை-2.1**

**வருவாய் நிருவாகத்தில் உள்ள பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை ஆட்சியர் | 452 |
| 2. | வட்டாட்சியர் | 1,870 |
| 3. | துணை வட்டாட்சியர், கண்காணிப்பாளர் /சுத்த நகல் கண்காணிப்பாளர்கள் | 2,037 |
| 4. | முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் | 7,286 |
| 5. | இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் | 3,127 |
| 6. | தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர் | 1,565 |
| 7. | ஓட்டுநர்/ பதிவுரு உதவியாளர் / பதிவுரு எழுத்தர் /நகல் எடுப்பவர், / காவலர்/ மசால்சி/ தோட்டக்காரர்/ துப்புரவு பணியாளர்கள் | 2,752 |

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 8. | அலுவலக உதவியாளர் | 3,780 |
| 9. | கிராம நிருவாக அலுவலர் | 12,702 |
| 10. | கிராம உதவியாளர் | 16,503 |
| | **மொத்தம்** | **52,074** |

## 2.7 ஆட்சி எல்லைகளை மறுசீரமைத்தல் மற்றும் புதிய நிருவாக அலகுகள் உருவாக்குதல்.

பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை விரைந்து அளிக்கும் பொருட்டு, புதிய வருவாய் வட்டங்கள் மற்றும் வருவாய் கோட்டங்கள் அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி உருவாக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், 2011-2012-ஆம் ஆண்டில் 1 வருவாய் கோட்டமும், 2012–2013-ஆம் ஆண்டில் 9 வருவாய் வட்டங்களும், 2013–2014-ஆம் ஆண்டில் 2 வருவாய் கோட்டங்களும், 25 வருவாய் வட்டங்களும், 2014–2015-ஆம் ஆண்டில் 1 வருவாய் கோட்டமும், 8 வருவாய் வட்டங்களும், 2015–2016-ஆம் ஆண்டில் 5 வருவாய் கோட்டங்களும், 23 வருவாய் வட்டங்களும், 2017–2018-ஆம் ஆண்டில் 6 வருவாய் வட்டங்களும், 2018-2019-ஆம் ஆண்டில் 2 வருவாய் கோட்டங்கள், 14 வருவாய் வட்டங்கள், 1 குறுவட்டம் மற்றும் 6 வருவாய் கிராமங்களும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு முதல் 2019–ஆம் ஆண்டு வரை மொத்தம் 11 வருவாய் கோட்டங்களும், 85 வருவாய்

வட்டங்களும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. ஜனவரி 8, 2019 அன்று சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தைப் பிரித்து கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

**அட்டவணை-2.2**

**மாவட்ட வாரியாக உள்ள வருவாய் கோட்டங்கள், வருவாய் வட்டங்கள், குறு வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை விவரங்கள்**

| வ. எண் | மாவட்டம் | வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை | வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை | குறுவட்டங்களின் எண்ணிக்கை | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | 2 | 4 | 15 | 175 |
| 2. | சென்னை | 3 | 16 | 40 | 122 |
| 3. | கோயம்புத்தூர் | 3 | 11 | 38 | 295 |
| 4. | கடலூர் | 3 | 10 | 32 | 883 |
| 5. | தருமபுரி | 2 | 7 | 23 | 470 |
| 6. | திண்டுக்கல் | 3 | 10 | 40 | 359 |
| 7. | ஈரோடு | 2 | 10 | 34 | 375 |
| 8. | காஞ்சிபுரம் | 4 | 11 | 68 | 1,112 |
| 9. | கன்னியாகுமரி | 2 | 6 | 18 | 188 |
| 10. | கரூர் | 2 | 7 | 20 | 174 |
| 11. | கிருஷ்ணகிரி | 2 | 8 | 30 | 642 |
| 12. | மதுரை | 4 | 11 | 51 | 604 |

| வ. எண் | மாவட்டம் | வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை | வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை | குறுவட்டங்களின் எண்ணிக்கை | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 13. | நாகப்பட்டினம் | 2 | 8 | 31 | 523 |
| 14. | நாமக்கல் | 2 | 8 | 32 | 391 |
| 15. | பெரம்பலூர் | 1 | 4 | 11 | 152 |
| 16. | புதுக்கோட்டை | 3 | 12 | 45 | 757 |
| 17. | இராமநாதபுரம் | 2 | 9 | 38 | 400 |
| 18. | சேலம் | 4 | 13 | 44 | 631 |
| 19. | சிவகங்கை | 2 | 9 | 39 | 521 |
| 20. | தஞ்சாவூர் | 3 | 9 | 50 | 754 |
| 21. | நீலகிரி | 3 | 6 | 15 | 54 |
| 22. | தேனி | 2 | 5 | 17 | 99 |
| 23. | தூத்துக்குடி | 3 | 10 | 41 | 468 |
| 24. | திருச்சிராப்பள்ளி | 4 | 11 | 43 | 502 |
| 25. | திருநெல்வேலி | 3 | 16 | 60 | 559 |
| 26. | திருப்பூர் | 3 | 9 | 33 | 350 |
| 27. | திருவள்ளூர் | 3 | 9 | 54 | 664 |
| 28. | திருவண்ணாமலை | 3 | 12 | 52 | 1,064 |
| 29. | திருவாரூர் | 2 | 8 | 28 | 500 |
| 30. | வேலூர் | 3 | 13 | 53 | 841 |
| 31. | விழுப்புரம் | 4 | 13 | 56 | 1,459 |
| 32. | விருதுநகர் | 3 | 10 | 39 | 600 |
| | **மொத்தம்** | **87** | **305** | **1,190** | **16,688** |

## 2.8 வருவாய் கட்டடங்கள்

பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையிலும் அலுவலக சூழலை மேம்படுத்தும் பொருட்டும், மாவட்ட ஆட்சியர் நிலை முதல் கிராம நிருவாக அலுவலர் நிலை வரை அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் விதமாக அலுவலக மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்ட அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

2018–2019-ஆம் ஆண்டில் 12 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 13.75 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், 2018–2019-ஆம் ஆண்டில் 22 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.43.45 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது தவிர, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் தலைவாசல் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு 2018-2019-ம் ஆண்டில் ரூ.13.25 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடத்திற்கான

சுற்றுச்சுவர் மற்றும் அணுகுசாலை அமைப்பதற்கு ரூ.25.45 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 2.9 நிலவருவாய்

அரசாணை (நிலை) எண்.544, வருவாய்த் துறை (வ.நி.1(1)), நாள் 20.10.2010-ன்படி தமிழ்நாட்டில் உள்ள நிலங்களுக்கு அவற்றின் வகைபாட்டிற்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு நிலவரி தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 2.3**

| வ. எண். | விவரம் | தொகை / ஏக்கர் |
|---|---|---|
| 1. | புஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.2/- |
| 2. | நஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.5/- |
| 3. | ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து, அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை | ரூ.5/- |
| 4. | பட்டா ஒன்றுக்கு குறைபட்ச கேட்புத் தொகை | ரூ.1/- |

வருவாய்த் தீர்வாய நிகழ்வின்போது ஒவ்வொரு கிராமத்தின் ஆண்டு வருவாய் கணக்குகள் இறுதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டிலும், ஜூலை 1-ஆம் தேதி முதல் ஜூன் 30-ஆம் தேதி வரை நிலவரி வசூலிக்கப்படுகிறது.

## 2.10 இ-அடங்கல்

ஒவ்வொரு கிராமத்திலும், கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் ஒரு முக்கிய பதிவேடாக அடங்கல் விளங்குகிறது. மேலும், விவசாயிகளால் பருவ வாரியாக பயிர் செய்யப்படும் பயிர்களின் விவரம், விளைச்சல், நீர் ஆதாரம் போன்ற பல்வேறு புள்ளி விவரங்கள் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன. இப்புள்ளி விவரங்கள் ஜி-அறிக்கை தயாரிக்க உதவுகிறது. வறட்சி மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அடங்கல் முக்கிய ஆவணமாக விளங்குகிறது. 1428-ஆம் பசலி ஆண்டு வரை அடங்கல் பதிவேடானது கிராம நிருவாக அலுவலர்களால் கையினால் எழுதப்பட்டு வந்தது. இது பணிச்சுமை மிக்கதாகவும், காலம் பிடிக்கக்கூடிய பணியாகவும் இருந்தது.

கிராம நிருவாக அலுவலர்களால் கையினால் எழுதி பராமரிக்கப்பட்டு வந்த முறையை எளிமைப்படுத்திடவும், சாகுபடி விவரங்களை துல்லியமாக பெற்றிடவும் அடங்கல் பதிவேட்டினை மின்னனு பதிவிற்கு மாற்றம் செய்யும் இ-அடங்கல் திட்டத்தினை செயல்முறைபடுத்த அரசாணை (நிலை) எண்.258, வருவாய்

மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 17.08.2017-ன்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இணையதள இ-அடங்கல் செயலி 26.10.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் இ-அடங்கல் கைப்பேசி செயலி 05.03.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

கிராம நிருவாக அலுவலர்களால் இதுவரை தயாரிக்கப்பட்டு வந்த அடங்கல் பதிவேட்டில் விவசாயிகள் தங்கள் சாகுபடி விவரங்களை பதிவு செய்யும் நடைமுறை இல்லை. எனவே, விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தங்கள் சாகுபடி விவரத்தினை தாங்களே இ-அடங்கலில் பதிவிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. கிராம நிருவாக அலுவலர் மற்றும் விவசாயிகளால் செய்யப்படும் சாகுபடி பதிவுகளுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பின், அப்பதிவு தானாகவே அடுத்த உயர்நிலை அலுவலருக்கு குறியீடு செய்யப்பட்டு, அவரது ஆய்வுக்குபின் திருத்தம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை மற்றும் புள்ளியியல் துறையை சேர்ந்த

அலுவலர்களும் தங்களின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பயிர்சாகுபடி விவரங்களை இச்செயலியில் பதிவு செய்ய தனி சாளர வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இ-அடங்கல் முறையில் தானாகவே சாகுபடி பயிர்பரப்பு ஒத்திசைவு செய்ய வழி வகை செய்யப்பட்டுள்ளதால், பதிவேடு முறை குறைகள்/ வேறுபாடுகள் களையப்படுகிறது.

இ-அடங்கல் முறையில் விவசாயிகள் எவ்வித கட்டணமுமின்றி பதிவுகளை பார்வையிடவும், ரூ.100/- கட்டணம் செலுத்தி வீட்டிலோ (அல்லது) இ-சேவை மையத்திலோ மின்னனு அடங்கல் பதிவுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளவும் இயலும்.

**இ-அடங்கல் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம்**

- துறை அலுவலர்களின் பொறுப்பு மற்றும் திறனை மேம்படுத்துவதோடு உயர் அலுவலர்கள் எளிதில் கண்காணிக்கவும் வழி வகுக்கும்.
- துல்லியமான புள்ளி விவரங்கள் மூலம் நம்பகத்தன்மையை அதிகரிக்கவும், பயிர் பதிவு வேறுபாட்டினை வருவாய் ஆய்வாளர்கள்/ துணை வட்டாட்சியர்கள் களையவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இந்த துல்லியமான புள்ளிவிவரங்கள் மாநில/ தேசிய அளவில் தரமான கொள்கை முடிவுகளை எடுக்க உதவியாக இருக்கும்.
- விவசாயிகளுக்கு அதிகாரமளித்து தங்களின் பயிர் விவரங்களை பதிவு செய்ய வாய்ப்பளித்துள்ளதன் மூலம் வெளிப்படைத் தன்மையினை அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- மின்னனு அடங்கலில் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம், வருவாய்த் தீர்வாயத்தின்போது கிராம நிர்வாக அலுவலர்களால் பராமரிக்கப்படும் பல்வேறு கணக்குகளையும் பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

## 2.11 வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தில் தகவல் மேலாண்மை அமைப்பு (MIS)

வருவாய் நிருவாகத்தின் பல்வேறு செயல்பாடுகளை திறம்பட கண்காணிப்பதற்கும், நிருவகிப்பதற்கும், பல்வேறு அமைப்பு முறைகளிலிருந்து தகவல்களை சேகரிக்கவும், தகவல்களை பகுப்பாய்வு செய்யவும், நிருவாகம் சார்ந்த முடிவெடுக்கும் முயற்சிகளுக்கு உதவும் அறிக்கையை உருவாக்கவும், தகவல் மேலாண்மை அமைப்பு மிகவும் அவசியமான ஒன்றாகும். முறையான கண்காணிப்பு, மறு ஆய்வு


மற்றும் முடிவெடுக்கும் செயல்பாடுகளுக்கு கிராம அளவில் இருந்து மாவட்ட அளவு வரை வருவாய் நிருவாகத்தில் உள்ள முக்கிய பொருண்மைகள் தொடர்பாக பதிவு செய்யப்படும் தகவல்களை அவ்வப்போதே இத்தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தகவல் மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்பட்டவுடன், தகவல்களை துவக்க நிலையில் மட்டும் உள்ளீடு செய்யப்படுவதால் ஒரே தகவல் ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் உயர்மட்டங்களில் உள்ளீடு செய்யப்படுவது தவிர்க்கப்படும். தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் உருவாக்கப்படும் தேவையான அறிக்கைகள் ஒவ்வொரு மட்டத்திலும் உறுதிப்படுத்த படுவதால் உயர் மட்டத்தில் உள்ள அலுவலர்கள் அதனை கண்காணித்து பகுப்பாய்வு செய்ய உதவுகிறது. இந்த முறையில் தகவல் உள்ளீடு ஒரு முறை மட்டும் செய்யப்படுவதால் ஒவ்வொரு நிலையிலும் நேரம் சேமிக்கப்படுகிறது. தகவல் மேலாண்மை அமைப்பு மூலம் பெறப்படும் அறிக்கைகள் எந்த நேரத்திலும் ஆய்வுக் கூட்டங்களின்போது பயன்படுத்தவும், முடிவெடுக்கும் முடிவுகளை மேம்படுத்தவும் இது உதவுகிறது. இதன் மூலம் நிர்வாகத்தின் செயல்பாடுகள் மேலும் மேம்படுத்தப்படுகிறது.

## 2.12 சமூக பாதுகாப்பு த் திட்டம்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதைக் கடந்த ஆதரவற்ற மற்றும் திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது, அனைத்து சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், பெரும்பான்மையான மக்களுக்கு குறிப்பாக முதியோர்களுக்கும், மாற்றுத் திறனுடையவர்களுக்கும் சென்றடைய ஏதுவாக இத்திட்டத்திற்கான விதிமுறைகள் வெகுவாக தளர்த்தப்பட்டுள்ளது. 2019-2020-ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ.4,060.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2019 அன்று உள்ள பதிவுகளின்படி 29.50 இலட்சம் பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

## 31.03.2019- ஆம் நாளின்படி சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் திட்டவாரியாக பயனாளிகளின் எண்ணிக்கை



## அட்டவணை 2.4

## மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்கீடு

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வயது | மத்திய அரசின் பங்கீடு | மாநில அரசின் பங்கீடு |
|---|---|---|---|---|
| | | | ரூபாயில் | |
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 வயது முதல் 79 வயது வரை | 200 | 800 |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | 500 | 500 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 வயது முதல் 79 வயது வரை | 300 | 700 |
| 3. | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 40 வயது முதல் 79 வயது வரை | 300 | 700 |
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | - | 1,000 |
| 5. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | - | 1,000 |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவயது | - | 1,000 |
| 7. | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | - | 1,000 |
| 8. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | - | 1,000 |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதிய திட்டம் | 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | - | 1,000 |

## 2.13 நிதிநிலை

நிலுவையிலுள்ள உதவித் தொகை பெறத் தகுதியுடைய நபர்கள் பயன்பெற வேண்டுமென்ற உயரிய நோக்கில் தமிழக அரசு பயனாளிகளுக்கான உச்சவரம்பு எண்ணிக்கையை 29.20 இலட்சத்திலிருந்து 29.80 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளது. மேலும், 2019-2020 நிதியாண்டிற்கு ரூ.4060.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.14 தகுதி வரம்பு

பயனாளிகளின் நலனை கருத்திற் கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி, ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளை தளர்த்தி, வயது வந்த மகன்/ மகள் இருந்தாலும், அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வரும் பட்சத்தில் அவர்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்தால் ஓய்வூதியம் பெறும் வகையில் திருத்திய அரசாணை ஏப்ரல் 2015-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மேலும், அவர்களின் வருமான உச்சவரம்பு ரூ.5,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு தற்பொழுது ரூ.50,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.27, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22.02.2016-ன்படி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல்

வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும் ஊனத்தின் தன்மை 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைத்தும் உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.41, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 28.05.2018 வாயிலாக சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற மாற்றுத் திறனாளிகளுக்கான ஆண்டு வருமானம் ரூபாய் 3 இலட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**அட்டவணை 2.5**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | நிபந்தனைகள் | |
|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | தகுதி | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். |
| | | வருமானம் | வறுமைக் கோட்டிற்குக் கீழ் |
| | | வயது | 60 மற்றும் அதற்கு மேல் |
| 2. | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | தகுதி | ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும் |
| | | வருமானம் | வறுமைக் கோட்டிற்குக் கீழ் |
| | | வயது | 40 மற்றும் அதற்கு மேல் |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | நிபந்தனைகள் | |
|---|---|---|---|
| 3. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ஊனம் நிலை | 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் |
| | | வருமானம் | வறுமைக் கோட்டிற்கு கீழ் |
| | | வயது | 18 வயது மற்றும் அதற்கு மேல் |

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெற கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**அட்டவணை 2.6**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள் | |
|---|---|---|---|
| 1 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | தகுதி | வேலையற்றவராக இருத்தல் வேண்டும். |
| | | வருமானம் | தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| | | வயது | 18 மற்றும் அதற்கு மேல் |
| | | ஊனம் நிலை | 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல். |
| 2 | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | தகுதி | ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். |
| | | வயது | 18 மற்றும் அதற்கு மேல் |
| | | அசையா சொத்து | ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 3 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | தகுதி | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். |
| | | வயது | 60 மற்றும் அதற்கு மேல் நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். |
| | | அசையா சொத்து | ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள் | |
|---|---|---|---|
| 4 | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | தகுதி | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். |
| | | வயது | 30 மற்றும் அதற்கு மேல் சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவரக இருத்தல் வேண்டும். அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |
| | | அசையா சொத்து | ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 5 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | தகுதி | ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும். |
| | | வயது | 50 மற்றும் அதற்கு மேல் |
| | | அசையா சொத்து | ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

80 வயதைக் கடந்து ஓய்வூதியம் பெற்று வரும் 1.94 இலட்சம் பயனாளிகளின் சிரமத்தினை போக்கும் வகையில், அப்பயனாளிகளின் வீட்டிற்கே சென்று இந்திய அஞ்சல் துறையின் மின் பண அஞ்சல் (eMO) மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென, ஆண்டுக்கு ரூ.4.40 கோடி கூடுதலாக செலவிடப்படுகிறது.

## 2.15 ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் இதர பயன்கள்

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின் போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ்

ஓய்வூதியம் பெறும் 29.50 இலட்சம் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

### 2.16 ஓய்வூதியதாரர்களுக்கு அரிசி வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்கண்டவாறு விலையில்லா சன்ன ரக அரிசி வழங்கப்படுகிறது.

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்ன ரக அரிசி வழங்கப்படுகிறது.

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்ன ரக அரிசி வழங்கப்படுகிறது.

### 2.17 நிவாரணத் திட்டங்கள்

#### 2.17.1 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் வருவாய் ஈட்டும் பிரதான நபர் இயற்கை மரணம் அடைந்து விட்டால், அக்குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், இறந்த நபரின் குடும்பத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த தொகையை ரூ.10,000/-லிருந்து ரூ.20,000/-ஆக உயர்த்தி 30.12.2015 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.17.2 விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத்தில் உள்ள நபர்கள் இயற்கை மரணம் எய்தினால் ரூ.2 இலட்சமும், விபத்தினால் இறந்தால் ரூ.4 இலட்சமும் மற்றும் விபத்தினால் நிரந்தர ஊனம் ஏற்படுமாயின் ரூ.1 இலட்சமும் வழங்கும் விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2019-2020-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

### 2.18 பொங்கல் பண்டிகைக்காக வழங்கப்படும் விலையில்லா வேட்டி / சேலை வழங்கும் திட்டம்

தமிழக அரசு, கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்காக விலையில்லா வேட்டி/ சேலை வழங்குதல் ஆகிய இரு நோக்கங்களுக்காக 1983-ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களால் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 2004-ஆம் ஆண்டு முதல் அரிசி அட்டைப் பெற்றுள்ள

அனைவருக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2012-ஆம் ஆண்டு முதல், இத்திட்டத்தின் பெயரான இலவச வேட்டி / சேலை வழங்கும் திட்டம் என்பதை மாற்றி, "விலையில்லா வேட்டி / சேலை வழங்கும் திட்டம்" என பெயரிடப்பட்டு தொடர்ந்து இத்திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு விலையில்லா வேட்டிகளும், சேலைகளும் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூ.484.25 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1.56 கோடி விலையில்லா வேட்டிகளும், 1.56 கோடி விலையில்லா சேலைகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 2019–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி சேலை விநியோகம் தொடங்கி வைக்கப்பட்டது

### 2.18.1 தகுதி

விலையில்லா வேட்டி/ சேலை, அரிசி அட்டைதாரர்கள், கிராம கைவினைஞர்கள், மீனவர்கள், நிலமற்ற ஏழை விவசாயிகள், விவசாயம் சார்ந்த கூலி வேலை செய்பவர்கள், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் இச்சேவை தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.19 குறைதீர்வு முறைகள்

தமிழ்நாடு அரசு, பல்வேறு நலத் திட்டங்களை உயரிய நோக்கத்தில் நடைமுறைப்படுத்தி வந்தாலும், இத்திட்டங்களை மேலும் சீரிய முறையில் நடைமுறைப்படுத்த வாய்ப்புள்ளது.. பொதுமக்களின் குறைதீர்வு நடைமுறையை செம்மைப்படுத்த ஏதுவாக பல்வேறு கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகள் மூலமாகவும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையிலும் தமிழ்நாடு அரசு குறைதீர்வு நடைமுறைகளை முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருகின்றது. மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அனைத்துத் துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து, குறைத்தீர்க்கும் முகாம் நடத்தி மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால், அரசின் சேவைகள் மிக

எளிதாகவும், விரைவாகவும் மக்களைச் சென்றடைய வழிவகை செய்யப்படுகிறது.

### 2.19.1 மக்கள் குறைதீர்க்கும் நாள்

ஒவ்வொரு திங்கட்கிழமையும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்கள், தங்களின் தலைமை இடங்களில் இருந்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று, அவர்களின் குறைகளை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ், மனுக்கள் பெறப்பட்ட நாள், தீர்வு செய்யப்பட்ட விவரம் மற்றும் நிலுவையில் உள்ள மனுக்கள் ஆகிய விவரங்கள் இதற்கென உருவாக்கப்பட்ட ஒரு மென்பொருள் மூலம் பதிவு செய்யப்படுகின்றன. இதன் மூலம், மனுக்களின் தற்போதைய நிலைமையை இணையதளம் மூலம் பொதுமக்கள் அறிந்து கொள்ளலாம்.

### 2.19.2 மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள்

அரசாணை (நிலை) எண்.300, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 21.08.2018-இன்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம், ஒவ்வொரு மாதமும் வருவாய்க் கோட்ட நிலை அலுவலர்களாலும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சித்தலைவர்களாலும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வருவாய் நிருவாக ஆணையராலும் நடத்தப்பட்டு வருகிறது.

### 2.19.3 வட்ட அலுவலகங்களில் ஆன்லைன் மனு கண்காணிப்பு அமைப்பு (Taluk Online Petition Monitoring System)

அரசாணை (நிலை) எண்.29, வருவாய்த் [வநி.3(2)] துறை, நாள்.13.01.2016-ன்படி அனைத்து வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களில் பெறப்படும் பொதுமக்களின் குறைதீர்வு மனுக்களின் நிலையினை அறியவும், அம்மனுக்களுக்கு தீர்வு காணவும், மாநில அளவில் வலைத்தளம் அடிப்படையிலான பயன்பாட்டு மென்பொருள் (TOPMS) அனைத்து வட்டங்களிலும் தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நடைமுறை, இணையதளம் மற்றும் குறுஞ்செய்தி மூலம் வட்ட அலுவலகங்களில் பெறப்படும் மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மனுதாரர்கள் அறிய வழிவகை செய்கிறது. 01.04.2018 முதல் 31.03.2019 வரையில் 7,34,060 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 6,28,511 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது.

### 2.20 மக்கள் தொடர்பு முகாம் திட்டம்

அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் மாவட்டத்தில் உள்ள கடைக்கோடி கிராமங்களில் வாழும் அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற அரசின் உயரிய குறிக்கோளுக்கிணங்க, மனுநீதிநாள் முகாம் திட்டமானது தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது புதன்

கிழமைகளில் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில், சுகாதாரத்துறை, வேளாண்துறை, தோட்டக்கலைதுறை, கால்நடைத்துறை, சமுகநலத்துறை மற்றும் பிற துறைகளில் மாவட்ட நிலை அலுவலர்கள் ஒரு குழுவாக சென்று மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல் இதர அரசு சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இம்முகாம்களை மேலும் பயனுள்ளதாக செயல்படுத்த, அரசாணை (நிலை) எண் 244, வருவாய் [வநி.3(2)] துறை, நாள்.08.08.2011-ன்படி, 1) தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), 2) வருவாய் கோட்ட அலுவலர், 3) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் 4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு மனுக்களைப் பெறுவதற்காக, மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை அன்று அனுப்பி வைக்கப்படுகிறது. பெறப்பட்ட மனுக்கள், தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அதன் மீதான இறுதி ஆணைகள் மக்கள் தொடர்பு முகாம் நாளன்று பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. அம்முகாம்களிலேயே முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், வீட்டுமனைப்

பட்டா மற்றும் பட்டா மாறுதல் ஆணைகள் மற்றும் இதர அரசு நலத்திட்ட உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முகாம் நாளன்று அரசுத்துறை அலுவலர்களால் தங்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து எளிதில் அறிந்து கொண்டு மக்கள் பயன் அடையும் வகையில் கண்காட்சி, விளக்கப்படங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு செய்யப்படுகின்றது.

**2.21 அம்மா திட்டம்**

அம்மா திட்டம் அனைத்து கிராமங்களிலும், அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்கும் உன்னதமான திட்டமாக அரசாணை (நிலை) எண்.70, வருவாய்த் [வநி.3(2)] துறை, நாள் 04.03.2013-ன்படி, முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், கடந்த 24.02.2013 முதல், வருவாய்த் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் மிகச்சிறந்த ஆளுமைக்கான விருது (Best Practices Award for improvement of Quality Delivery System Ensuring Good Governance) அம்மா திட்டத்திற்கு, முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால், அரசின் பல்வேறு

துறைகளை ஒருங்கிணைத்து கிராமங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு மக்களின் குறைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

மேலும், செப்டம்பர் 2016 முதல், இம்முகாம்களில் மக்கள் கூடுதலாக பயன்பெறும் வகையில் மருத்துவ முகாம்கள், கால்நடை மருத்துவ முகாம்கள், பிரதம மந்திரியின் பசல்பீமா யோஜனா (பயிர் காப்பீடு) திட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் சேர்த்தல், ஆதார் பதிவுகள் மற்றும் தனிநபர் பயன்பெறும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்தும் அம்மா திட்ட முகாம்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அம்மா திட்ட முகாம்களில் பெறப்பட்ட மனுக்களின் விவரங்கள் கீழ்வருமாறு:--

**அட்டவணை 2.7**

**சாதனைகள்**

| வருடம் | முகாம் நடத்தப்பட்டது | பெறப்பட்ட மனுக்கள் | தீர்வு காணப்பட்ட மனுக்கள் | நடவடிக்கையில் உள்ளவை |
|---|---|---|---|---|
| 2012-2013 | 2,620 | 1,50,112 | 1,50,112 | 0 |
| 2013-2014 | 14,989 | 40,91,672 | 40,91,672 | 0 |
| 2014-2015 | 7,455 | 4,15,699 | 4,15,699 | 0 |
| 2015-2016 | 8,274 | 5,30,458 | 5,30,458 | 0 |
| 2016-2017 | 11,022 | 6,63,793 | 6,63,793 | 0 |
| 2017–2018 | 9,824 | 3,08,244 | 3,08,244 | 0 |
| 2018-2019 | 6,185 | 1,81,206 | 1,77,816 | 3,390 |
| மொத்தம் | 60,369 | 63,41,184 | 63,37,794 | 3,390 |

## 2.22 நிதி

அம்மா திட்ட முகாம்கள் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து இதுவரையில் முகாம்கள் நடத்துவதற்கென 14.63 கோடி ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## 2.23 தகவல் தொழில் நுட்பம் மூலம் மேம்படுத்தப்பட்ட சேவைகள்

வருவாய்த் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில், சான்றிதழ்கள் வழங்கும் பணி மிகவும் முக்கியமான பணியாகும். சான்றிதழ்கள் வழங்கும் பணியை துரிதப்படுத்தவும், எளிமையான முறைகளைக் கொண்டு மக்கள் விரைவாக சான்றிதழ்கள் பெறவும், தமிழ்நாடு அரசு தகவல் தொழில் நுட்ப சேவைகளை வருவாய்த்துறையோடு ஒருங்கிணைந்து மின்னணு சான்றிதழ்கள் வழங்கி வருகிறது. மேற்படி, தகவல் தொழில்நுட்ப சேவைகள், உயிர் புள்ளியியல் பதிவு செய்தல் (பயோமெட்ரிக்) குறியீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.24 பள்ளிகள் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் மூலம் மாணவர்களுக்கு பள்ளி சேர்க்கை மற்றும் உதவித்தொகை பெறுவதற்கு தேவைப்படும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு

வருகின்றது. மூவகைச் சான்றிதழ் அதாவது வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை பள்ளிகள் மூலமாகவே இணையவழியில் மாணவ/ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்காணும் சான்றிதழ்கள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், 2018-2019-ஆம் கல்வி ஆண்டில், 6-ஆம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு இணையதளம் வாயிலாக அந்தந்த பள்ளிகள் மூலம் 36,470 சான்றிதழ்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.8**

| வ. எண் | ஆண்டு | சான்றிதழ் | பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் |
|---|---|---|---|
| 01 | 1.4.2018 முதல் 31.03.2019 வரை | வருமானம் | 10,227 |
| 02 | | பிறப்பிடம் | 9,427 |
| 03 | | சாதி | 16,816 |
| | | **மொத்தம்** | **36,470** |

## 2.25 மின்னணு சான்றிதழ்கள்

வருவாய்த் துறையினை நாடி வரும் பொதுமக்களுக்கு விரைவான சேவையினை அளித்திடும் வகையில், தகவல் தொழில் நுட்பத்துறை மற்றும் தேசிய தகவல் மையத்தின் தொழில் நுட்ப உதவியோடு அனைத்து மாவட்டங்களிலும் மின் ஆளுமைத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாநிலமெங்கும் உள்ள 12,072 பொது சேவை மையங்களில் (Common Service Centres) சாதி, வருமானம், இருப்பிடம், முதல் தலைமுறை பட்டதாரி மற்றும் ஆதரவற்ற பெண்கள் போன்ற ஐந்து வகையான சான்றிதழ்களை மின்னணு முறையில் பெறுவதற்கான விண்ணப்பங்களை அளிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை (நிலை) எண். 260, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி 3(2)] துறை, நாள் 17.08.2017-இன்படி, கூடுதலாக கீழ்கண்ட 15 சேவைகள் மின்னாளுமை திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

1) விவசாய வருமான சான்றிதழ்
2) சிறு/ குறு விவசாயி சான்றிதழ்
3) கலப்புத் திருமணச் சான்றிதழ்

4) விதவைச் சான்றிதழ்

5) வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்

6) குடிபெயர்வு சான்றிதழ்

7) இயற்கை இடர்பாடுகளினால் மாணவர்கள் பள்ளி (ம) கல்லூரி சான்றிதழ்களை இழந்தமையை உறுதி செய்யும் சான்றிதழ்

8) ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ்

9) திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ்

10) வாரிசு சான்றிதழ்

11) வசிப்பிடச் சான்றிதழ்

12) சொத்து மதிப்பு சான்றிதழ்

13) அடகு வணிகர் உரிமம் சான்றிதழ்

14) கடன் கொடுப்போர் உரிமம் மற்றும்

15) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ்

மேற்கண்ட சேவைகளை இ-சேவை மையம் வழியாக இணையதளம் மூலம் பெறும் திட்டம் 01.03.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது. 01.04.2018 முதல் 31.03.2019 வரை 73,44,112 சான்றிதழ்கள் மின்னாளுமைத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

**2.26 தேசிய மக்கள் தொகை பதிவேடு – உயிர் புள்ளியியல் பதிவு செய்தல்**

இந்திய நாட்டில் வசிப்பவர்களுக்கு எங்கும், எப்பொழுதும் அங்கீகரிக்கப்பட்ட தனித்துவ அடையாள அட்டை அளிக்கும் வகையில் தேசிய மக்கள் தொகை பதிவேடு – உயிர்ப்புள்ளியியல் பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதில், புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரைப் படல அமைப்பு (உயிர்ப்புள்ளியியல்) ஆகியவை (5 வயது மற்றும் அதற்கு மேற்ப்பட்டவர்களுக்கு) பல்வேறு கட்டங்களாக பதிவு செய்யப்பட்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இப்பணி, 30.09.2016 வரை பாரத மின்னணுக் கழகம் (பெங்களூரு) நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டது. தற்போது 01.10.2016 முதல் அரசாணை (நிலை) எண்.10, தகவல் தொலை தொடர்பு துறை, நாள் 1.10.2016-இன்படி தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் இப்பணி முன்னேற்றமானது மாநிலம் முழுவதும் கண்காணிக்கப்படுகிறது.

தமிழகத்தில் இதுவரை 7,92,54,381 நபர்களுக்கு உயிர்ப் புள்ளியியல் கணக்கெடுப்பு பதிவு பணி முடிக்கப்பட்டு, அவர்களில் 7,68,68,475 நபர்களுக்கு தனித்துவ அடையாள எண் (ஆதார் எண்) வழங்கப்பட்டுள்ளது. அதாவது, 96.99 சதவிகித நபர்களுக்கு ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 0-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உயிர்ப்புள்ளியியல் கணக்கெடுப்புப் பணி 10.03.2017 முதல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.27 மக்கள் தொகை கணக்கெடுப்பு**

இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872-இல் தொடங்கப்பட்டு, 1881-ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுக்கு ஒருமுறை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 15-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-இல் நடைபெற்றது. 2021-இல் நடைபெற இருப்பது இந்தியாவின் 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பும் சுதந்திர இந்தியாவின் 8-வது மக்கள் தொகை கணக்கெடுப்புமாகும். 2021-ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகள் மத்திய அரசு பல்வேறு அமைச்சகங்களுடன் கலந்தாலோசித்து இப்பணி துவங்குவதற்கான ஆயத்த பணிகளை

முடித்துள்ளது. தமிழ்நாட்டில் இக்கணக்கெடுப்புப் பணி தொடர்பாக தக்க ஆலோசனைகள் வழங்குவதற்கு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரை தொழில்நுட்பம் சார்ந்த அறிவுரை வழங்கும் குழுவில் (Technical Advisory Committee) உறுப்பினராக சேர்த்து அரசாணை எண் 62, பொது (சட்ட அலுவலர்கள்) துறை, நாள் 18.1.2019-இல் ஆணை வெளியிட்டுள்ளது.

2021-ஆம் ஆண்டு மக்கள் தொகை மாதிரி கணக்கெடுப்பு நடத்துவதற்காக சிவகங்கை மாவட்டத்திலுள்ள இளையாங்குடி கிராமத்தில் 90 கணக்கெடுப்பு வட்டாரங்களும், நீலகிரி மாவட்டத்திலுள்ள குன்னூர் கிராமத்தில் 64 கணக்கெடுப்பு வட்டாரங்களும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகர் நகராட்சியில் 139 கணக்கெடுப்பு வட்டாரங்களும் தேர்தெடுக்கப்பட்டுள்ளன.

## 2.3 பேரிடர் மேலாண்மை

தமிழ்நாடு, கடந்த காலங்களில், குறிப்பாக 2004-ஆம் ஆண்டில் ஆழிப் பேரலை, 2011-ல் தானே புயல், 2016-இல் வார்தா புயல், 2017-இல் ஒகி புயல், 2018-இல் கஜா புயல், 2015-இல் முன்னெப்பொழுதும் கண்டிராத பெரு வெள்ளம், 2017-இல் இடைவிடாத மழை மற்றும் 2016 பருவ காலத்தில் மழை பொய்த்ததால், 2017-இல் நிலவிய கடுமையான வறட்சி, 2018 வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால், 2019-இல் நீரியல் வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களை எதிர்கொண்டது. மேலும், தமிழகத்தின் புவியியல் அமைப்பானது மின்னல், காட்டுத்தீ, கடல் அரிப்பு போன்ற பேரிடர்களும் தமிழகத்தில் இயல்பாகவே ஏற்பட வழிவகுக்கிறது. இப்பேரிடர் மேலாண்மையானது, மிகவும் சிக்கலானதாகவும், ஆயத்த நிலை, மீட்பு, சீரமைப்பு மற்றும் அபாய தணிப்பு ஆகிய அனைத்து நிலைகளிலும் கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது.

பேரிடர் குறித்தான முன்னெச்சரிக்கை, மீட்பு, நிவாரணம், மறுவாழ்வு மற்றும் அபாய தணிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்வதில் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் மிக முக்கிய பங்காற்றி வருகிறது.

மேலும், பேரிடர் அபாய குறைப்பு கொள்கைகளை வகுப்பதும் செயல்படுத்துவதும் இதன் பொறுப்பாகும். பேரிடர் தணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற துறைகளுக்கு வழி காட்டுதல், பல்வேறு பேரிடர்களால் ஏற்படும் அபாயங்களை குறைத்திட, பேரிடர் அபாய குறைப்பு பிரச்சனைகளை வளர்ச்சி பணிகளாக பிரதானப்படுத்துதல் போன்ற பணிகளை இவ்வாணையரகம் மேற்கொள்கிறது.

### 2.3.1 பேரிடர் குறைப்பு ஆளுமை

தேசிய, மாநில, மாவட்ட மற்றும் ஊரக அளவில் பேரிடர் மேலாண்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள வரையறுக்கப்பட்ட அமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகள் குறித்து பேரிடர் மேலாண்மை சட்டம், 2005 வழங்குகிறது. இந்த சட்டத்தின்படி தேசிய அளவில், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) உருவாக்கப்பட்டுள்ளது. மாநில அளவில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (TNSDMA) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் (DDMAs) அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளை மையமாகக் கொண்டு செயல்படும்

அணுகுமுறையிலிருந்து, பேரிடர் அபாயம் குறித்த மதிப்பீடு, அபாய தகவல் தொடர்பு, பேரிடர் முன்னெச்சரிக்கை, தணிப்பு மற்றும் திறன்மிகு உடனடி அவசரகால மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதும் சென்டாய் கூட்டமைப்பில் உள்ளடக்கிய இலக்குகளை அடைவதற்கு முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு மாற்றிட இவ்வமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.3.2 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

மாநில அளவில் பேரிடர் மேலாண்மை சார்ந்த பணிகளை மேற்கொள்வது மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பொறுப்பாகும். இவ்வாணையத்தின் செயல்பாடுகளை மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு அபாய குறைப்பு முகமை, மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் பிற துறைகள் உறுதுணையாக உள்ளன.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:-

- மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
- அரசு தலைமைச் செயலாளர், பதவி வழி உறுப்பினர்

- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர்
- நிதித் துறை செயலாளர்
- உள்துறை செயலாளர்
- உயர் கல்வித் துறை செயலாளர்
- பள்ளிக் கல்வித் துறை செயலாளர்
- மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்
- அண்ணா பல்கலைக்கழக பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையத்தின் இயக்குநர், சென்னை
- இந்திய தொழில்நுட்ப கழகத்தின் கட்டட பொறியியல் துறையின் தலைவர், மெட்ராஸ்.

இவ்வாணையமானது, கொள்கை உருவாக்கத்திற்கான வழிகாட்டுதல், மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து முக்கிய செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

### 2.3.3 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டம் 2018 – 2030

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், சென்டாய் கூட்டமைப்பின் காலத்துடன் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

மாநிலத்தின் சுற்றுசூழல் நிலைக்கேற்ப முறையான அணுகுமுறை, ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் பேரிடர் அபாயங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் மாநிலத்தின் வளர்ச்சியை குறிக்கோளாக கொண்டு பாதுகாப்பான, பேரிடர்களின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையிலான தமிழகத்தை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018-2030 ஆனது சென்டாய் கூட்டமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பேரிடர் அபாய குறைப்பு, நீடித்த நிலையான குறிக்கோள், பருவ மாற்ற ஒப்பந்தமான பாரிஸ் உடன்படிக்கை மற்றும் பிரதமரின் 10 அம்ச நிகழ்ச்சி நிரலினை முதன்மையாக கொண்டுள்ளது. இத்திட்டமானது, பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 (பிரிவு 23, உட்பிரிவு 4) மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டமானது, மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள், அரசு துறைகள், சிவில் சமூகங்கள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களிடம் பெறப்பட்ட விரிவான அறிக்கையின்படி உருவாக்கப்பட்டுள்ளது.

இயற்கை மற்றும் நீர் வளங்களை உள்ளடக்கிய நீர் பிடிப்பு பகுதிகளை கருத்தில் கொள்வது, ஆற்றுப்படுகைகளின் விரிவான மேலாண்மை, சுற்றுசூழல் பாதிக்கப்பட்டுள்ள இடங்களையும், விவசாய வளங்களையும் நிலையான மேம்பாட்டு திட்டத்தின் மூலம் பாதுகாப்பது, பேரிடர் குறைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் வளர்ச்சியை மேம்படுத்துவது, பேரிடர்களால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகியவை இத்திட்டத்தின் முக்கியத்துவங்களாகும்.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டத்தில் பின்வரும் 14 இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன:-

1. வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் பொது மக்கள் பேரிடர்களை எதிர்கொள்ளும் வகையில் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு அல்லாத விரிவானதொரு வெள்ளத் தடுப்பு திட்டத்தினை குறிப்பாக திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உருவாக்குதல்.
2. சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் நகர்புற வெள்ள அபாயத்தை குறைத்தல்.
3. பருவநிலை மாற்றங்கள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ள டெல்டா பாசன விவசாயிகளின் திறனை மேம்படுத்துதல்.

4. நிலத்தடி நீரினை மிக அதிகமாக / அதிகமாக பயன்படுத்தும் வட்டாரங்களில் உள்ள நீர்த்தேக்கங்களை மீள நிரப்பி பாதுக்காப்பான இனத்திற்கு கொண்டு செல்லுதல்.
5. சுற்றுசூழல் ரீதியாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய குறிப்பாக பள்ளிக்கரணை, எண்ணூர் மற்றும் மன்னார் வளைகுடா போன்ற பகுதிகளிலுள்ள ஈரமான மற்றும் சதுப்பு நிலங்களை மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல்.
6. கடல் நீர் ஊடுருவல் மூலம் பாதிக்கப்படும் இடங்களை மீட்டெடுத்தல் மற்றும் கடல் நீர் ஊடுருவலை தடுக்கும் வகையில் குறிப்பாக சென்னை, திருவள்ளூர் மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
7. கடலோர மாவட்டங்களில், வெள்ளம் மற்றும் புயல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள உயிரி கேடயங்களை மேம்படுத்துதல்.
8. நீர் நிலைகளை மீட்டெடுத்தல் மற்றும் வலுப்படுத்துதல், வெள்ளம் மற்றும் வறட்சியை சமாளிப்பதற்கு நீர் நிலைகளை தூர்வாரி நீர் நிலைகளின் கொள்ளளவை மேம்படுத்துதல்.
9. மழை குறைவாக பெறும் மாவட்டங்களான இராமநாதபுரம், திண்டுக்கல், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தருமபுரி, நாமக்கல் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் நிலையான விவசாய முறைகளை மேம்படுத்துதல்.

10. பொதுவாக ஏற்படக்கூடிய நிலச்சரிவுகள், காட்டு தீ போன்ற பேரிடர்களால் நீலகிரி, கோயம்பத்தூர், ஈரோடு, தேனி, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், திண்டுக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்படும் அபாயங்களை குறைக்க தனி கவனம் செலுத்துதல்.
11. பலதரப்பட்ட பங்கேற்பாளர்கள் பங்கு பெறுவதை அதிகரித்தல், குறிப்பாக சமூக பங்கேற்பினை மேம்படுத்துதல்.
12. கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகளை வலுப்படுத்தி மனிதனால் ஏற்படும் பேரிடர் மற்றும் இயற்கை பேரழிவுகளின் ஆபத்துக்களை குறைத்தல்.
13. குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் வெள்ள அபாயம் மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் இழப்புகளையும் கடல் ஊடுருவலையும் குறைக்க நீர் பாசன மற்றும் வடிகால்களுக்கு ஏற்ப நீரியல் உட்கட்டமைப்பை உருவாக்குதல்.
14. இரசாயனம், உயிரியியல், கதிரியக்கம், அணுசக்தி (CBRN) ஆகியவற்றாலும் மனிதர்களாலும் ஏற்படும் பேரிடர்களை நிர்வகிப்பதற்கான திறனை உருவாக்குதல்.

மேற்படி இலக்குகளை எட்டுவதற்காக கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொலைநோக்கு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நீண்ட கால தணிப்பு நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

### 2.3.4 மாநில செயலாக்கக் குழு

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவும் வகையில் தலைமைச் செயலாளரை தலைவராகவும், நிதித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, உள்துறை ஆகியவற்றின் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில செயலாக்கக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி, குழுவின் கூட்டத்தில் மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்வார். மாநில அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதும், பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியை கையாள்வது குறித்து மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவதும், மாநில செயலாக்க குழுவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இக்குழு, பேரிடர் காலங்களில் உடனடியாக நிவாரண பணிகள் மேற்கொள்வதற்கும், உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கும் மற்றும் மீட்பு பணிகளுக்கு தேவையான தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கும் நிதி வழங்கிட அதிகாரம் பெற்றுள்ளது.

### 2.3.5 மாநில ஆலோசனைக் குழு

மாநில ஆலோசனைக் குழு, கூடுதல் தலைமை செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரை தலைவராகக் கொண்டும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை கூடுதல் தலைமை செயலாளரை இணைத் தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான குழு பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கியதாகும். இக்குழு, பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

### 2.3.6 பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு (IRS)

பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பானது பேரிடர் காலங்களில், அரசு, தனியார் துறை மற்றும் அரசு சாரா அமைப்புகள் என அனைத்து நிலைகளிலும் உள்ள அமைப்புகளை ஒருங்கிணைத்து வழிநடத்துகிறது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு (IRS) ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் மூலம் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு குறித்து பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

இவ்வமைப்பின் தலைமை பொறுப்பாளராக மாநில தலைமைச் செயலாளரும், இன்சிடன்ட் கமாண்டராக வருவாய் நிருவாக ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையரும் செயல்படுவார்கள். மாநில அளவில் இன்சிடன்ட் கமாண்டருக்கு உதவி புரிய துணை இன்சிடன்ட் கமாண்டராக, இயக்குநர், பேரிடர் மேலாண்மை செயல்படுவார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் இன்சிடன்ட் கமாண்டராக செயல்படுவார்.

### 2.3.7 தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை

தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை (முன்னர் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் 09.01.2014 அன்று உருவாக்கப்பட்டது. இம்முகமையின் ஆட்சிக் குழு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்களை தலைமையாக கொண்டு நடத்தப்படுகின்றது. இம்முகமையில், கூடுதல் தலைமை செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் செயலாக்க குழுவின் தலைவராகவும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் உறுப்பினர் செயலாளராகவும் செயல்பட்டு வருகின்றனர். கூடுதல் தலைமை செயலாளர்/ வருவாய் நிருவாக

ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையரின் முழுக் கண்காணிப்பில் இயங்கும் இம்முகமையானது தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாக்க அமைப்பாக செயல்படுகிறது.

### 2.3.8 மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையமானது, மத்திய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பான திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 2.3.9 பேரிடர் அபாய மதிப்பீடு

தமிழ்நாடு எதிர்கொள்ளும் பேரிடர்கள் மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் பொது மக்கள் மீது அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆகியற்றை மதிப்பீடு செய்ய, அரசு கீழ்கண்ட அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

### 2.3.9.1 மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம் (SDMC)

இந்திய வானிலை ஆய்வு மையம், தேசிய தொலையுணர்வு மையம், தேசிய பயிர் முன்கணிப்பு மையம், மாநில நீர்வள ஆதார மையம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை வளர்ப்பு, ஊரக வளர்ச்சி, குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் மின்சாரத்துறை ஆகியவற்றின் உள்ளீடுகளை பெற்று வறட்சி ஏற்படுத்தும் காரணிகளை அறிவியல் ரீதியாக அறிந்துகொள்ள வறட்சி கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டது.

### 2.3.9.2 மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம் (DDMC)

மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஒரு அங்கமாக செயல்படும் வகையில் மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் மாவட்ட வறட்சி கண்காணிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையமானது, மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலும், அவரது கட்டுப்பாட்டின் கீழும் செயல்படும்.

### 2.3.10 புவிசார் தகவல் மையம்

தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமையில் புவிசார் தகவல் மையம் (GIS) அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

புவிசார் தகவல் மையமானது, தேசிய அவசர மேலாண்மை தரவுகள் (NDEM) வழியில் மாநில அவசர மேலாண்மை தரவுகளை (SDEM) உருவாக்கிட வழிவகுக்கும். பேரிடர் மேலாண்மையில், முடிவு ஆதார அமைப்பினை (Decision Support Systems) ஏற்படுத்தவும், மாநில அவசர மேலாண்மை தரவுகளில் பேரிடர் தொடர்பான குறிப்பிட்ட தகவல்களை பதிவேற்றம் செய்யவும், புயல் சீற்ற மாதிரியினை ஒருங்கிணைக்கவும், பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை மையம், தொலை உணர்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இந்திய தொழில் நுட்பக்கழகம், சென்னை ஆகிய நிறுவனங்களுடன் தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை கூட்டு உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஐந்து வருட காலத்திற்கான இந்த கூட்டு ஒப்பந்தம் ரூ.350.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை உள்ளடக்கியதாகும்.

### 2.3.11 ஆளில்லா வானூர்தி மூலம் வான்வழி புகைப்படவியல் ஆய்வு (UAV)

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 10.07.2017 அன்று சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசு, ரூ.694.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழகத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான வான்வழி புகைப்படவியல் ஆளில்லா வானூர்தி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம்,

மாநிலத்தில் 5,650 சதுர கி.மீ. பரப்பளவிலான நீர் வழித்தடங்களில் புகைப்படங்கள் எடுக்க வான்வெளி ஆய்வு மையம், சென்னை தொழில்நுட்ப நிறுவனம், அண்ணா பல்கலைக்கழகம் மூலம் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். கடலூர் மாவட்டத்தில் உள்ள கெடிலம், வெள்ளாறு, பெண்ணையாறு மற்றும் பரவனாறு ஆகிய 4 ஆற்றுப்படுகைகளில் 697 சதுர கி.மீ. பரப்பிலும், மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள குண்டாறு ஆற்றுப்படுகையில் முறையே 221 சதுர கி.மீ., 134 சதுர கி.மீ., 99 சதுர கி.மீ., மற்றும் 50 சதுர கி.மீ., பரப்பிலும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கொரம்பள்ளம் மற்றும் தாமிரபரணி ஆற்றுப்படுகைகளில் 363 சதுர கி.மீ. பரப்பிலும், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள காவிரி, வெண்ணாறு மற்றும் அதன் 16 கிளையாறுகளில் 918 சதுர கி.மீ., பரப்பிலும், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வெண்ணாறு மற்றும் அதன் 6 கிளையாறுகளில் 441 சதுர கி.மீ. பரப்பிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அக்னியாறு, மகாராஜா சமுத்திரம், காட்டாறு ஆற்றுப்படுகைகளில் 283 சதுர கி.மீ. பரப்பிலும் என இதுவரை 3,207.9 சதுர கி.மீ. பரப்பளவில் வான்வெளி அளவைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.3.12 பல்வகை பேரிடர்களின் அதீத தாக்கத்தினை முன்னதாக அறிந்து அவசர மீட்பு நடவடிக்கைகளை முறைப்படுத்தும் திட்டம் (TNSMART)

வானிலை முன்னறிவிப்பு தொடர்பான தகவல்களின் அடிப்படையில், பல்வேறு பேரிடர்களால் ஏற்படும் தாக்கத்தை அளவிட்டு அதனடிப்படையில் அவசரகால மீட்பு முன்னேற்பாடுகளை முறைப்படுத்தும் திட்டம் (TN-SMART) ஒன்றினை செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் ஆப்பிரிக்க மற்றும் ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு அமைப்பின் (RIMES) மூலம் செயல்படுத்தப்படும்.

TN-SMART செயலியானது (Mobile App) மூன்றடுக்கு முடிவு ஆதார அமைப்பினை கொண்டதாகும். இது, பேரிடர் மேலாண்மையின் அங்கங்களான முன்னேற்பாடு, மீட்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய 11 தொகுதிகளை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பேரிடரின் தாக்கம், பேரிடர் தொடர்பான ஆபத்துகளை செயலி மூலம் தெரிவித்தல், அபாய அழைப்புகளை பதிவு செய்து அதனை கண்காணித்தல், பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் கண்டறியப்பட்ட பாதிப்புக்குள்ளாகும் இடங்களில், இந்திய வானிலை ஆராய்ச்சித் துறையின் மழை முன்னறிவிப்பை கொண்டும், முந்தைய காலத்தில் பெய்த மழையளவு, நீர் நிலைகளில் உள்ள நீரின் அளவு ஆகியவற்றை கொண்டும் சாத்தியமான வெள்ள அபாயத்தினை இத்திட்டம் மதிப்பீடு செய்கிறது. மேலும், பேரிடர்களின் ஆபத்துகளை கணிக்கவும், அவை செயலி மூலம், களநிலை அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்யவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து வெள்ள அபாயத்தினை குறைக்கவும் இச்செயலி உதவும்.

இந்த செயலி மாறுப்பட்ட எச்சரிக்கை அமைப்பை கொண்டது. கைபேசி அமைதியான நிலையில் இருந்தாலும் எச்சரிக்கை அறிவிப்பு ஒலி எழுப்பக்கூடிய வகையில் இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த எச்சரிக்கை அறிவிப்பு ஒலி பயனர் எச்சரிக்கை செய்தியினை காணும் வரை ஒலித்துக்கொண்டிருக்கும். உரிய நேரத்தில் அளிக்கப்படும் முன்னெச்சரிக்கையால், சுனாமி, புயல் மற்றும் வெள்ளம் போன்ற பேரிடர்களால் ஏற்படும் உயிரிழப்புகள் தவிர்க்கப்படுவதை இந்த செயலி உறுதி செய்கிறது. இந்த செயலி மூலம் பொதுமக்கள்

பேரிடர் தொடர்பான புகார்களை பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள், தொடர்புடைய அலுவலர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுவதையும், அனுப்பப்பட்ட புகார் மீதான நடவடிக்கை விவரத்தையும் கண்காணிக்கலாம். பேரிடர் அபாய குறைப்பினை உறுதி செய்திட, சென்டாய் (Sendai Frame Work) கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டம் 2018–2030 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய முன்னுரிமை இனங்களை பின்பற்றி இத்திட்டத்தின் தொகுதிகள் (Modules), மாநிலத்தின் நீண்ட கால இலக்குகளை அடைவதை கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**2.3.13 சென்னை வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பு (C-FLOWS)**

கடலோர வெள்ள முன்னெச்சரிக்கை தொடர்புடைய பகுதிகளுக்கு நீரியக்க விசை சார்ந்த மாதிரியின் அடிப்படையில் தொழில் நுட்ப உதவி வழங்கவும், பல்வேறு பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளாகும் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு முன்னெச்சரிக்கை வழங்கவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கடல் அலை உயரம், மாநகராட்சிக்கு நீர்வழங்கும் நீர்நிலைகள் மற்றும் மாநகராட்சியின் வழியாக

செல்லும் அடையாறு மற்றும் கூவம் ஆறுகள் ஆகியவற்றின் நீரின் அளவு போன்ற உள்ளீடுகளை கருத்தில் கொண்டு அதிகப்படியான மழையளவினை கண்காணித்து இவ்வமைப்பு முன்னெச்சரிக்கை வழங்கும். இவ்வமைப்பானது TN-SMART அமைப்புடன் ஒருங்கிணைக்கப்படும்.

### 2.3.14 பேரிடர் அபாய தகவல் தொடர்பு

இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், மத்திய நீர்வள ஆணையம் போன்ற அமைப்புகளிடமிருந்து பெறப்படும் கனமழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்கள் குறித்தான எச்சரிக்கை தகவல்கள் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றின் மூலம் பொது மக்கள், மீட்பு மற்றும் நிவாரணம் வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபடும் முகமைகள் மற்றும் பிற பேரிடர் மேலாண்மை சார்ந்த பங்கேற்பாளர்களுக்கு தெரிவிக்கப்படும். இருப்பினும், இன்சிடன்ட் கமாண்டர் அனைத்து விதமான தகவல் தொடர்பு முறைகளையும் பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்களுக்கு தகவல்கள் சென்றடைய வழிவகை செய்வார்.

### 2.3.15 மாநில அவசர கட்டுப்பாட்டு மையம்

சென்னையில் மாநில அவசர கட்டுப்பாட்டு மையம், தகவல் தொடர்பு மையமாக வருவாய் நிருவாக ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றது. இந்திய வானிலை ஆய்வு மையம், மத்திய நீர் வள ஆணையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம் ஆகிய அமைப்புகளிலிருந்து வரும் முன்னறிவிப்புகள்/ எச்சரிக்கைகளை உயர் அதிகாரிகளின் மேற்பார்வையில் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள் மூலம் மாவட்ட நிருவாகங்களுக்கும் மற்றும் ஊடகங்கள் மூலம் பொது மக்களுக்கும் கொண்டு சேர்க்கின்றது. பேரிடர் காலங்களில், தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் மூத்த அதிகாரிகளின் துணையோடு 24 மணி நேரமும் செயல்பட்டு, முன்னெச்சரிக்கை தகவல்களை மிகத்துரிதமாக அனுப்புகின்றது. பொதுமக்கள் 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் இம்மையங்களை தொடர்பு கொள்ள முடியும். மேலும், இம்மையம் மழைப்பொழிவு, புயல், வெள்ளம், வறட்சி மற்றும் நிலநடுக்கம் குறித்த முன்னறிவிப்பு தகவல்களை தொடர்புடைய அமைப்புகளிடமிருந்து பெற்று மாவட்ட நிர்வாகம் மற்றும் பல்வேறு துறைகளுக்கு உடனுக்குடன் அனுப்புகின்றது.

பெரும் பேரிடர் காலங்களில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆகியோருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும், மக்களின் பாதுகாப்பு, மீட்பு, நிவாரணம், மறுசீரமைப்பு பற்றிய விழிப்புணர்வு குறித்தும் ஊடகங்களின் வாயிலாக மக்களுக்கு தெரிவிப்பார்கள். கஜா புயலின் போது மாநில அவசர கட்டுபாட்டு மையத்தின் மூலமாக பேரிடர் தொடர்பான எச்சரிக்கைகள் உரிய நேரத்தில் கொடுக்கப்பட்டு தாழ்வான பகுதிகளில் வசித்த 81,948 மக்களை பாதுகாப்பாக வெளியேற்றி நிவாரண முகாம்களில் தங்க வைத்ததன் மூலமாக பெருமளவிலான உயிர்ச்சேதம் குறைக்கப்பட்டது.

**2.3.16 மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையம்**

மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள், மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையின் கீழ் செயல்படுகின்றன. இம்மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள், அம்மாவட்டத்திலுள்ள வட்டார மற்றும் கிராம அளவிலான பேரிடர் தொடர்பாக தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் மறு சீரமைப்பு

பணிகளை செயல்படுத்திட, மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெறப்படும் அவசர காலச் செய்திகள், எச்சரிக்கைகளை உடனுக்குடன் மக்களுக்கு தெரிவிக்கின்றன.

இம்மையம், பேரிடர் காலங்களில், அனைத்து துறை அலுவலர்களை பணியில் அமர்த்தி வட்ட அளவிலான பேரிடர் செயல்பாடுகளான தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண பணிகளை கண்காணித்து, வரப்பெற்ற அறிக்கைகளை தொகுத்து வருவாய் நிருவாக ஆணையர்/ மாநில நிவாரண ஆணையருக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளது. 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் பொதுமக்கள் இம்மையங்களை தொடர்பு கொள்ள முடியும்.

**2.3.17 தேடுதல் மற்றும் மீட்பு சாதனங்கள்**

2017-2018 மற்றும் 2018-2019-ஆம் ஆண்டுகளில் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.69.12 கோடி மதிப்பீட்டில், உயரமான ஏணிகள், வாட்டர் பவுசர், நீர் இறைப்பான்கள், மரம் அறுப்பான்கள், ஜெனரேட்டர்கள், மீட்பு படகுகள், தீயணைப்பு மற்றும் மீட்பு ஊர்திகள் மற்றும் இதர தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவை கொள்முதல் செய்திட தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் இதர துறைகளுக்கு நிதி வழங்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**2.3.18 தகவல் தொடர்பு சாதனங்கள்**

கடலோர மாவட்ட நிருவாகங்கள் மற்றும் ஆழ்கடலில் குழுக்களாக மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு பேரிடர்கள் குறித்து எச்சரிக்கை தகவல்களைத் தெரிவிக்கும் பொருட்டு ரூ.3.10 கோடி செலவில் Satellite Phone, NavIC and NAVTEX என்ற மூன்று விதமான தொலைத்தொடர்பு சாதனங்கள் மீனவளத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளன. ஒரு குழுவிற்கு 10 முதல் 15 வரையிலான படகுகள் வீதம் 80 குழுக்களாக மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்க செல்கின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும் 2 Satellite Phone-கள், 3 NavIC கருவிகள், 2 NAVTEX கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2.3.19 மின்னல் மற்றும் இடி முன்னெச்சரிக்கை**

புனேவில் உள்ள இந்திய வானிலை மையம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் ரூ.80 இலட்சம் செலவில் மின்னல் மற்றும் இடி குறித்த முன்னெச்சரிக்கை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், 2019-2020-ஆம் ஆண்டில் 1,190 குறுவட்டங்களில் (Firka) தொலைத்தொடர்பு முறையில் (Telemetric) இயங்கிடும் மழைமானிகள் பலகட்டங்களில் நிறுவப்பட உள்ளன.

### 2.4 பேரிடர் ஆயத்தநிலை

பேரிடர் மேலாண்மையில், ஆயத்தப் பணிகளை மேற்கொள்வது என்பது ஒரு முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. வடகிழக்குப் பருவமழை காலத்தில் ஒரு புறம் கடும் புயல் மற்றும் கனமழை காரணமாக ஏற்படக்கூடிய வெள்ளப் பெருக்கு, மறுபுறம் பருவ மழை பொய்த்ததால் ஏற்படக்கூடிய வறட்சி ஆகியவற்றை எதிர்கொள்ள முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் முக்கிய நடவடிக்கைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன: -

#### 2.4.1 ஆயத்த கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள்

அ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் வடகிழக்குப் பருவமழை காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப்பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடத்துவார்கள். பின்னர் தொடர் ஆய்வு கூட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் ஆயத்த பணிகளை உன்னிப்பாக கண்காணிப்பார்கள்.

ஆ) மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்

துறை, கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையர் ஆகியோருடன் இணைந்து பாதிப்பிற்குள்ளாகும் மாவட்டங்களை பார்வையிட்டு, அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை மற்றும் ஆயத்தப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்வார்கள்.

இ) தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் அனைத்துத் துறைகள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களை அழைத்து ஆயத்த நிலை குறித்து ஆய்வு மேற்கொள்வார். குறுகிய கால இடைவெளியில் வழங்கப்படும் அறிவிப்புக்கேற்ப மத்திய படைகளை, தேடுதல், மீட்பு மற்றும் வெளியேற்றப் பணிகளில் ஈடுபடுத்திடும் வகையில் தயார் நிலையில் இருக்கும்படி அறிவுறுத்துவார்கள்.

ஈ) கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள பிற துறை அலுவலர்களுக்கு, வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள, மேற்கொள்ள வேண்டிய ஆயத்தப்பணிகள் குறித்து

விரிவான அறிவுரைகள் அடங்கிய சுற்றறிக்கைகளை வெளியிடுவார். மேலும், இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் தொடர் ஆய்வு/ அறிவுரைக் கூட்டங்கள் நடத்தப்படும். பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளில் குறித்த காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொண்டார்களா என்பதை உறுதி செய்யும் விதத்தில் "சரிபார்க்கும் பட்டியல் (Check list)" மாவட்ட நிர்வாகங்களுக்கு வழங்கப்படும்.

### 2.4.2 கண்காணிப்புமுறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட அளவில் ஆயத்தப்பணிகளை கண்காணித்திடவும், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மண்டல அளவில் ஆயத்தப் பணிகளை கண்காணித்திடவும். பல்துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுதலை நெறிப்படுத்திடவும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

### 2.4.3 பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை கண்டறிதல் மற்றும் வரைபடங்கள் உருவாக்குதல்

கடந்த கால பேரிடர் நிகழ்வுகளின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் 4,399 பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு, அவை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன: -

**அட்டவணை 2.9**

| வ. எண். | பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளின் வகைபாடு | பகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மிக அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் | 578 |
| 2 | அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் | 892 |
| 3 | மிதமான பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் | 1,206 |
| 4 | குறைவான பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் | 1,723 |
| | **மொத்தம்** | 4,399 |

ஒரு வரைபடத்திற்கு மூன்று ஊரக அல்லது நகர்புற பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள் என்ற விகிதத்தில் முறையே குறுவட்ட அல்லது வார்டு அளவில், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளின் பாதிப்பின் தன்மை குறித்த ஆய்வு, மாற்று வழி, நிவாரண மையங்கள் மற்றும் மாற்று சமுதாய முதல் நிலை மீட்பாளர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன.

### 2.4.4 பல்துறை மண்டலக் குழுக்கள்

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையை தலைமையாகக் கொண்டு, காவல், தீயணைப்பு, ஊரக வளர்ச்சி, வேளாண்மை மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் அடங்கிய 662 மண்டல குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவும் 5 - 7 பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை தீவிரமாக கண்காணிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.5 மீட்புக் குழுவினரை ஆயத்த நிலையில் வைத்திருத்தல்

பேரிடர்களால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை விரைந்து மேற்கொள்ளும் பொருட்டு மீட்பு குழுக்கள் மற்றும் நிவாரண பொருட்களை ஆயத்த நிலையில் வைக்கும் வகையிலான திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பேரிடர் ஏற்படுவதற்கு முன்பு பேரிடரால் பாதிப்புகுள்ளாகும் பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புக் குழு மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை ஆகியவற்றை ஆயத்த நிலையில் இருக்கும்படி கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அறிவுறுத்துவார்கள்.

### 2.4.6 தனியார் அமைப்புகளுடனான கூட்டாண்மை

தனியார் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தொலைத் தொடர்பு நிறுவனங்கள், எண்ணெய் நிறுவனங்கள் ஆகியவற்றின் தொடர் சேவையினை உறுதிப்படுத்திடவும், அவசர காலங்களில் தொடர்ந்து செயல்பட நிறுவன வாரியான உத்திகள் மற்றும் செயல் திட்டங்களை மேம்படுத்திடவும், மேற்கண்ட அமைப்புகளுடன் மாநில மற்றும் மாவட்ட அளவிலான கூட்டங்கள் நடத்தப்பட்டு, அவசரகால பணி 24 மணி நேரமும் நடைபெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 2.4.7 பல்வேறு வகையிலான தகவல் தொடர்புகள்

பத்திரிக்கைகள், மின்னணு செய்தி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் கம்பியில்லா தகவல் தொடர்புகள் போன்ற பல்வேறு வகையிலான தகவல் தொடர்புகள் மூலமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோரால் பேரிடர் காலங்களில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை (Do's and Don'ts) தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

### 2.4.8 சமுதாய பங்களிப்பு

#### 2.4.8.1 முதல் நிலை மீட்பாளர்கள்

அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் மக்களின் பங்களிப்பு அவசியம் என்பதை உணர்ந்த அரசு, சமுதாய பங்களிப்பினை மேம்படுத்திட, நல்ல உடல் திறன் கொண்ட நீச்சல் மற்றும் மரம் ஏறத் தெரிந்த 30,759 (9,162 பெண் உறுப்பினர்கள் உட்பட) தன்னார்வலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, 4,399 முதல் நிலை மீட்புக் குழுக்கள், மிக அதிக மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் (ஒரு பகுதிக்கு 5 முதல் 10 நபர்கள் வீதம்) ஏற்படுத்தி, அடிமட்ட அளவிலான சமுதாய பங்களிப்பை உறுதிப்படுத்தியுள்ளது. இக்குழு உறுப்பினர்களுக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்படை, மாநில பேரிடர் மீட்புப்படை மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. முதல் நிலை மீட்பு பணியாளர்கள் மற்றும் பாம்பு பிடிப்பவர்கள் அடங்கிய ஒரு நடமாடும் குழு வட்டாரம்/ வட்டம்/ கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் தேவையின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

### 2.4.8.2 முதல் நிலை கால்நடை மீட்பாளர்கள்

பேரிடர்களின் போது கால்நடைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாவதன் காரணமாக பெருமளவில் கால்நடை இழப்புகள் நிகழ்கின்றன. இதனை கருத்தில் கொண்டு, பாதிக்கப்படும் கால்நடைகளை மீட்டு, நிவாரண முகாம்களுக்கு கொண்டு செல்வதற்காக 8,624 முதல்நிலை கால்நடை மீட்பாளர்கள் மாவட்டங்களில் கண்டறியப்பட்டுள்ளனர்.

### 2.4.9 பேரிடர் மீட்பு

முன்னறிவிப்பு அடிப்படையில், பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளிலுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், பேரிடர் தாக்கும் பொழுது, தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும் வகையிலும் தமிழக அரசு கடந்த காலங்களிலிருந்தே மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்தி வருகின்றது. மேலும், மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில், பிரத்யேக தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக ரோபோடிக் எக்ஸவேட்டர், நவீன களை எடுப்பான்கள், அதிக திறன் கொண்ட நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்கள் கொள்முதல் செய்திடவும் தமிழக அரசு முடிவு செய்தது.

### 2.4.9.1 தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை

கடந்த காலங்களில் தமிழகம் எதிர்கொண்ட எதிர்பாராத இயற்கை மற்றும் மனித செயல்பாடுகளினால் ஏற்பட்ட பேரிடர்களை கருத்தில் கொண்டு, இயற்கை மற்றும் மனித செயல்பாடுகளினால் ஏற்படும் பேரிடர்களின் போது தேடல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அளவிலான ஒரு பிரத்யேக பேரிடர் மீட்புப்படையினை உருவாக்கிட வேண்டும் என தமிழக அரசு கருதியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.07.2017 அன்று சட்டசபையில் அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படையினை மேம்படுத்துவதற்காகவும், மர அறுப்பான்கள், துளையிடும் கருவிகள், சிலிண்டர்களுடன் கூடிய சுவாசக் கருவிகள், உயிர் காப்பு மிதவை கருவிகள், படகுகள், ஆக்ஸிஜன் மற்றும் அசிட்டிலின் ஆகிய வாயுக்கள் அடங்கிய சிலிண்டர்களுடன் கூடிய கட்டர், ஜெனரேட்டர்களுடன் கூடிய உயர் கோபுர விளக்குகள் என 138 வகையான உலகத்தரம் வாய்ந்த உபகரணங்கள் வழங்கிடவும், திறன் வளர்ப்பிற்காகவும் தமிழக அரசு

ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்படையானது, உள்ளூர் பூகோள விபரங்களை நன்கு அறிந்திருக்கும் நிலையில், தேடல், மீட்பு, அகற்றுதல் மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகளை கால தாமதமின்றி சிறப்பாக செயல்படுத்திட முடியும். தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படை, ஒரு பிரத்யேக தனிச்சிறப்பு வாய்ந்த அலகாக உருவாகிடும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படும்.

### 2.4.9.2 பேரிடர் உதவிப்படை

பேரிடர் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்திட கடலோர மற்றும் மலைப்பகுதிகள் அடங்கிய மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் பயிற்சி பெற்ற தன்னார்வலர்களை கொண்டு பேரிடர் உதவிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. இப்படை பல்துறை மண்டலக் குழுக்களுக்கு உதவி புரியும்.

### 2.4.9.3 பேரிடர் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

பாதுகாப்பாக வெளியேற்றப்பட்ட/ மீட்கப்பட்ட மக்களின் நம்பிக்கையினை அதிகரிக்கும் விதமாக, தமிழக அரசானது நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளில் முன்னுரிமை வழங்கி முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகளில் ஈடுபடும் படையினரின் திறன்களை

மேம்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், தமிழக அரசு பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்காக 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களை நிறுவியுள்ளது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்காக தமிழக அரசு, வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

அரசு நிறுவியுள்ள இந்நிவாரண மையங்களில் பேரிடர்களின் போது பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்படுவார்கள். இம்மையங்களில் உணவு, தண்ணீர், மருத்துவ உதவிகள் மற்றும் அத்தியாவசிய நிவாரண உதவிகள் வழங்கப்படும். வயது முதிர்ந்தோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் என பாதிப்பிற்குள்ளாகும் பிரிவினருக்கு உதவிடவும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட மனநலம் தொடர்பான ஆலோசனை மற்றும் மருத்துவ உதவிகள் நிபுணர்கள் மூலம் வழங்கப்படும்.

### 2.4.9.4 திறன் மேம்பாடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.356, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [பே.மே.-3(2)] துறை, நாள் 16.11.2017-இன்படி,

பேரிடர்களின் போது பேரிடர் மீட்பு, நிவாரண மற்றும் மறுவாழ்வு ஆகிய செயல்களில் ஈடுபடும் பல்வேறு துறை அலுவலர்களுக்கும் மற்றும் தன்னார்வலர்களுக்கும் திறன் மேம்பாடு பயிற்சி அளித்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து, 2018-ஆம் ஆண்டு மாதிரி ஒத்திகைகள், கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.71.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

### 2.4.9.5 வருடாந்திர பேரிடர் தொடர்பான மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண பயிற்சி (HADR) 2019

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் வருடாந்திர பேரிடர் தொடர்பான மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண பயிற்சியை நடத்த முப்படைகளுக்கு உத்திரவிட்டதை தொடர்ந்து, இந்திய கடற்படை, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தோடு இணைந்து சென்னையில் சூறாவளி மற்றும் நகர்புற வெள்ளம் தொடர்பான பயிற்சியினை நடத்த உத்தேசித்துள்ளது.

மாநில மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மாநில மற்றும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களை செயல்படுத்தி மற்ற மாநில ஆதாரங்களை ஒன்று திரட்டி, இந்த பயிற்சியில் கலந்து கொள்ளும். அதே போல தேசிய

பேரிடர் மேலாண்மை ஆணையம், தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் இதர தேசிய ஆதாரங்களை திரட்டி, ஒருங்கிணைத்து இந்த பயிற்சியை நடத்த உதவி புரியும்.

மூன்று நாட்கள் நடைபெறும், இந்த பயிற்சியில் வெளிநாட்டினர் பார்வையாளர்களாக பங்கேற்க உள்ளனர். மேலும், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், இராணுவம், கடற்படை, விமான படை, கடலோர காவல் படை, தீயணைப்பு மற்றும் மீட்பு படை, தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்பு படை, காவல்துறை, மீன்வளத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இந்த பயிற்சியில் கலந்து கொள்ளும்.

### 2.4.9.6 ஆப்த மித்ரா-சமூக ஆர்வலர்களுக்கான பயிற்சி திட்டம்

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தேசிய அளவில் வெள்ளத்தினால் மிகக் கடுமையாக பாதிப்பிற்குள்ளாகும் 30 மாவட்டங்களில் தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்பு குறித்த பயிற்சி வழங்க மத்திய நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் கண்டறியப்பட்டது. இத்திட்டத்தின்படி, 200 தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.9.7 ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் மற்றும் தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஆசிய பேரிடர் ஆயத்த மையம் ஒரு சர்வதேச அரசாங்க அமைப்பாகும் (2005-இல் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது). இந்திய உள்துறை அமைச்சகம் உறுப்பினராக இடம்பெற்றுள்ள இம்மையத்தின் பிராந்திய ஆலோசனைக் குழுவில் 26 நாடுகள் இடம் பெற்றுள்ளன. இம்மையம், பல அரசுகள், ஐ.நா.வின் முகமைகள், கல்வி மையங்கள், தனியார் துறைகள் ஆகியவற்றுடன் இணைந்து ஆசிய-பசிபிக் பகுதியிலுள்ள நாடுகளுக்கு பேரிடர் தொடர்பாக உதவுவதுடன், நிலையான வளர்ச்சி இலக்கை அடைய, பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை கண்டறிதல், பேரிடர் குறைப்பு, பருவ மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிதல், குறைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுகின்றது.

திறன் மேம்பாடு மற்றும் நீண்ட கால அளவில் தொழில்நுட்ப உதவிபெறும் பொருட்டு தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை, ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை, ஆசிய பேரிடர் ஆயத்த மையத்துடன் இணைந்து, சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் பிற துறைகளின் மூத்த அலுவலர்களுக்கு "வெள்ள அபாய முன்னேற்பாடு" தொடர்பான மூன்று நாள் பயிற்சி 25.09.2018 முதல் 27.09.2018 வரையும், "வடகிழக்கு பருவ மழை 2018 முன்னேற்பாடு" தொடர்பான மூன்று நாள் பயிற்சி 25.10.2018 முதல் 27.10.2018 வரையும் நடத்தப்பட்டது.

**2.4.9.8 பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு**

பேரிடர்களால், குறிப்பாக வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற பேரிடர்களால் ஏற்படும் எதிரிடையான தாக்கங்களை குறைக்கும் வகையில், அரசு, தடுப்பு மற்றும் தணிப்பு உத்தியின் ஒரு பகுதியாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டும், அதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்தும் வருகின்றது. நீண்ட கால பயனை கருத்தில் கொண்டு, 'சிறப்பான மறுசீரமைப்பு' என்ற கொள்கையின் அடிப்படையில், தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர் வடிநில மற்றும் நீர்போக்கு அணுகுமுறையின் அடிப்படையில், குறிப்பிடப்பட்ட அமைவிடங்களுக்கு ஏற்ப முழுமையான திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

### 2.4.9.9 கடலோர பேரிடர் அபாயம் குறைப்பு திட்டம்

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 15.05.2013 அன்று சட்டமன்ற பேரவையில் கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டம் (Coastal Disaster Risk Reduction Project) என்ற சிறப்புத் திட்டமானது, உலக வங்கியின் உதவியுடன் ரூ.1481.80 கோடி செலவில் 13 கடலோர மாவட்டங்களிலும் அமுல்படுத்தப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, 2014-ஆம் ஆண்டு மேற்படி திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின் கூறுகளான பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள், நீடித்த மீன்வளத்துறை பணிகள், பேரிடர் அபாய குறைப்பிற்கான திறன் வளர்ப்புப் பணிகள் மற்றும் திட்ட செயல்பாடு ஆகியவற்றின் மறு ஒதுக்கீட்டுத் தொகை ரூ.1,544.66 கோடி ஆகும்.

மேற்படி கூறுகளில் ஒன்றான பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகளின் கீழ் ரூ.310 கோடி செலவில் 488 கடலோர கிராமங்களில் பேரிடரை தாங்கக்கூடிய 14,347 வீடுகள் கட்டப்பட்டுள்ளதோடு 143 இடங்களில் அறிவிப்பு பலகைகளுடன் கூடிய முறையான இணைப்பு வழித்தடங்கள் அமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளன.

ரூ.331.03 கோடி செலவில் கடலோர மாவட்டங்களில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. நீடித்த மீன்வளத் திட்டத்தின் கீழ் ரூ.210.30 கோடி செலவில் உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தும் பொருட்டு மீன்பிடி துறைமுகங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் நவீனப்படுத்துதல், புதிய மீன் இறங்குதளம் அமைத்தல், குழாய் பனிக்கட்டி இயந்திர நிலையம் கட்டுதல் மற்றும் ஆற்று முகத்துவாரத்தை உறுதிப்படுத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.107.50 கோடி செலவில், கடலுக்குள் செல்லும் மீனவர்களது பாதுகாப்பு மற்றும் உத்தரவாதத்தினை உறுதிபடுத்தும் வகையில், கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்த GPS ரிசீவர்கள் பொருத்தப்பட்ட 17,539 எண்ணிக்கையிலான VHF கடல்சார் கையடக்க வானொலிகள் மீனவர்களுக்கு அளிக்கப்பட்டு, நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், நிலைத்த வாழ்வாதாரத்திற்கான பல்வேறு மீன்வள மேலாண்மை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 5,892 குழுக்கள் அடங்கிய 3,34,457 நபர்களுக்கு சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மை பயிற்சிகள் ரூ.15.00 கோடி செலவில்

அளிக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, ரூ.2.50 கோடி செலவில், பள்ளி மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும், பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 7 முதல் 12-ஆம் வகுப்பு பாடத்திட்டங்களிலும் மற்றும் ஆசிரியர் பயிற்சி வகுப்பு பாடத்திட்டங்களிலும் பேரிடர் மேலாண்மை குறித்த பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ரூ.7.50 கோடி செலவில் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் குறித்த மேலாண்மைத் திட்டம் (ICZMP), பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் மற்றும் தமிழ்நாடு கடற்கரை பகுதி மக்களுக்கு பயிற்சி திட்டம் ஆகியவற்றை தயாரிக்கும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் மின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் விதமாக வேளாங்கண்ணி மற்றும் கடலூர் நகராட்சிகளில் ஒரு முன்னோடி முயற்சியாக பூமிக்கு மேலுள்ள மின் இணைப்புக்களை பூமிக்கு கீழான இணைப்புகளாக மாற்றும் பணி ரூ.406.83 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. பேரிடர்கள் வருவதை முன்கூட்டியே அறிந்து, கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு பேரிடர் குறித்த தகவல்களை விரைவாக வழங்கும் பொருட்டு ரூ.50.00 கோடி செலவில் 450 இடங்களில் முன்னெச்சரிக்கை கருவி (EWS) அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.4.9.10 நீண்டகால பேரிடர் தணிப்பு நடவடிக்கைள்

பேரிடர் அபாய குறைப்பு கொள்கையின் அடிப்படையில் நிலையான நீடித்த துயர் தணிக்கும் நடவடிக்கைகளுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அரசின் நீண்ட கால நடவடிக்கைகள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

#### 2.4.9.10.1 ஏரிகள், நீர் வழித்தடங்கள் மற்றும் பாசன கால்வாய்களைத் தூர்வாருதல்

தமிழ்நாட்டில் வெள்ள தணிப்பு நடவடிக்கையான 25,855 ஏரிகள், 12,070 கி.மீ வரையிலான நீர் வழித்தடங்கள் மற்றும் கால்வாய்களை தூர்வாரும் பணியில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 25,246 ஆக்கிரமிப்புகள் நீர் நிலைகளிலிருந்து அகற்றப்பட்டன. 11,635 நிலத்தடி நீர் செரிவு கிணறுகள் உருவாக்கப்பட்டு, 10,684 செயல்பாடற்ற குழாய் கிணறுகள் நிலத்தடி நீர் செரிவு கிணறுகளாக மாற்றப்பட்டன. பாலங்கள் மற்றும் சிறு பாலங்களின் இருபுறமும் உள்ள அடைப்புகளை சுத்தம் செய்வதற்காக சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதின் விளைவாக, 10,500 பாலங்கள் மற்றும் 1,62,524 சிறு பாலங்களில் உள்ள அடைப்புகள் நீக்கப்பட்டன. 2,807 குழாய் வடிவிலான துவாரங்கள் கொண்ட சிறுபாலங்கள், பெட்டக வடிவிலான துவாரங்கள் கொண்ட சிறுபாலங்களாக மாற்றப்பட்டது. 248 பாலங்களில் கூடுதல் துவாரங்கள்

அமைக்கப்பட்டன. 5,764 நீர் ஊற்று கிணறுகள் உருவாக்கப்பட்டன. 10,773 தடுப்பணைகள் உருவாக்கப்பட்டன. 6,500 நீர் ஊடுறுவும் குளங்கள் உருவாக்கப்பட்டன.

**2.4.9.10.2 வண்டல் மண் தூர்வாருதல்**

- நீண்டகால வறட்சி தணிப்பு நடவடிக்கையாக, அரசாணை (நிலை) எண்.50, தொழில்துறை, நாள் 24.04.2017-இன்படி தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959–இல் திருத்தம் செய்யப்பட்டு, நீர்நிலைகள்/ அணைகளிலிருந்து வண்டல் மண்ணை எடுத்து விவசாயிகள் அவர்களது நிலங்களில் பயன்படுத்த அரசு அனுமதியளித்து ஆணையிட்டுள்ளது. இப்பணியானது மண் வளத்தை செழிக்கச்செய்வதோடு மட்டுமல்லாமல், நீர்நிலைகளில் நீர் கொள்ளளவினை உயர்த்துவதற்கும் வழிவகை செய்கிறது.
- இது வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையரகத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 2017-ஆம் ஆண்டிலிருந்து தொடர் முயற்சியின் காரணமாக, 31.05.2019 அன்றைய நிலவரப்படி நீர்தேக்கங்கள்/ ஏரிகளிலிருந்து 7.28 கோடி கன அடி அளவில் வண்டல் மண் எடுக்கப்பட்டு 6,49,059 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

### 2.4.9.10.3 வெள்ளத்தால் மிகவும் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

கடந்த இருபது ஆண்டுகளில், 2005, 2008, 2015 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள நகர்புற பகுதிகள் பெரும் பாதிப்புகளை சந்தித்தன. அடையாறு, கொசஸ்தலையாறு, கூவம் மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த நகர்புற பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், பொது கட்டமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஆகியவை தொடர் வெள்ளத்தால் நீரில் மூழ்குகின்றன.

சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நிகழும் தொடர் வெள்ளத்தின் காரணமாக பொதுமக்கள், தொழில் நிறுவனங்கள், போக்குவரத்து கட்டமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தணிக்கும் வகையில், நீண்ட கால நோக்கில் தீர்வு காணும் அவசியத்தை அரசு உணர்ந்து, விரிவான ஆய்வின் அடிப்படையில் மிகவும் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் கண்டறியப்பட்டு,

அதனை செயல்படுத்திட மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

மேலும், கூவம், கொசஸ்தலையாறு, அடையாறு மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள பெருகநர சென்னை மாநகராட்சி மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மிக அதிக மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் ஏற்படும் வெள்ள பாதிப்புகளுக்கு உடனடியான தீர்வு காணும் வகையில் வெள்ள தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 2018-ஆம் ஆண்டில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2019 வடகிழக்கு பருவமழையின் பாதிப்புகளைத் தணிக்கும் வகையில் மேற்கண்ட ஆற்றுப்படுகைகளில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை ஜுலை 2019 மாத இறுதிக்குள்ளாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- மழைநீர் தங்கு தடையின்றி வெளியேற உதவிடும் வகையில் தொடர்புடைய ஏரிகளுக்கு இணைப்பு கால்வாய்கள் அமைத்தல்.
- மூடிய கால்வாய்களை அமைத்தல்.

- பாசனமில்லாத ஏரிகளை, ஆழப்படுத்தி நீர்த் தேக்கங்களாக மாற்றுதல்.
- வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்துதல், உபரி நீர் கால்வாய்கள் மற்றும் சாலையோர கால்வாய்களை அகலப்படுத்துதல்.

இப்பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நகர்ப்புறங்களில் உள்ள மிக அதிக மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் வெள்ள பாதிப்பினை வெகுவாக தணிக்கும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளப் பாதிப்புகளைத் தணிக்கும் பொருட்டு ரூ.290.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

08.02.2019 அன்று சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட 2019-2020-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.284.70 கோடி நிதி ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. எனவே, அடையாறு ஆற்றுப்படுகை, பரவனாறு ஆற்றுப்படுகை, கொள்ளிடம் உப ஆற்றுப்படுகை,

ஆரணியாறு ஆற்றுப்படுகை, கோவளம் உப ஆற்றுப்படுகை மற்றும் நம்பியாறு ஆற்றுப்படுகை ஆகியவற்றில் நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி முன்மொழிவில் கீழ்கண்ட பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது:-

1. பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த நகர்புற குடியிருப்புகளின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டும், வெள்ளத் தணிப்பு மற்றும் வறட்சி தணிப்பு நடவடிக்கைகளுக்காகவும் அதிகப்படியான நீர் வரத்தினை தேக்கி வைக்க ஏதுவாக புதிய நீர் தேக்கங்கள் மற்றும் ஆற்றுப்படுகை நீர் தேக்கங்கள் உருவாக்குதல்.
2. பெரிய நீர் வழித் தடங்களின் கட்டமைப்புகளை சீரமைத்து மேம்படுத்துதல்.
3. பெரிய நீர் வழித் தடங்களில் தடைப்பட்ட இணைப்புகளை சீரமைக்கும் பொருட்டு, பெரிய நீர் வழித் தடங்களை நிலத்திற்கு அடியில் அமைத்தல்.
4. உபரி நீரை பிற உபவடி நிலங்களுக்கு கொண்டு செல்ல இணைப்பு வாய்க்கால்களை ஏற்படுத்துதல்.
5. அதிகப்படியான வெள்ள நீரினை விரைவாக கடலில் சேர்க்கும் பொருட்டு மாற்று கால்வாய்கள் ஏற்படுத்துதல்.

**2.4.10 2018-ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில், பருவமழை குறைவினால் ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்கொள்ள அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்**

- 2018-ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் 17 மாவட்டங்களில் 59% முதல் 19% வரை மழைப்பொழிவானது குறைந்து பதிவாகியுள்ளது. மேலும், 7 மாவட்டங்களில் 2018–ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது இயல்பான மழைப்பொழிவு காணப்பட்டாலும், ஆண்டு சராசரி மழைப்பொழிவு அளவுடன் ஒப்பிடுகையில் மழைப்பொழிவு குறைந்து காணப்பட்டது. மீதமுள்ள மாவட்டங்களை பொறுத்த வரையில் மாவட்ட அளவில் மழைப்பொழிவு இயல்பாக இருந்தாலும் (19% குறைவாக), மாவட்டம் முழுமையும் சீரான மழைப்பொழிவு இல்லை. 7 மாவட்டங்களில் உள்ள 38 வட்டாரங்களில் பெறப்பட்ட மழையளவு, இயல்பான பருவமழை அளவுடன் ஒப்பிடுகையில் குறைவான/ மிகவும் குறைவானதாக உள்ளது. எனவே, அரசாணை (நிலை) எண்.91, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்.07.08.2019–இன்படி தமிழகத்தின் 24 மாவட்டங்கள் மற்றும் 38 வட்டாரங்களை உள்ளடக்கிய 7 மாவட்டங்கள், நீரியல்

வறட்சி பாதித்த மாவட்டங்கள்/ வட்டாரங்களாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.116.18 கோடி மற்றும் ரூ. 37.50 கோடி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு அரசாணை (நிலை) எண். 121, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.28.05.2019 மற்றும் அரசாணை (நிலை) எண். 125, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள். 28.05.2019-இன்படி வழங்கப்பட்டுள்ளது.
- குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.20.00 கோடி மற்றும் ரூ.16.00 கோடி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அரசாணை (நிலை) எண்.30, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.05.02.2019 மற்றும் அரசாணை (நிலை) எண். 122, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.28.05.2019-இன்படி வழங்கப்பட்டுள்ளது.
- குடிநீர் வழங்கல் தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்ள மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.56.05 கோடி மற்றும் ரூ.16.32 கோடி, நகராட்சி நிருவாக

ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகள் நிருவாகம் ஆகிய துறைகளுக்கு அரசாணை (நிலை) எண். 125, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள். 28.05.2019-இன் படி வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.11 வெப்ப அலை:

- பருவ நிலை மற்றும் புவியியல் சார்ந்த பேரிடர்களான புயல், வெள்ளம், நிலநடுக்கம், சுனாமி மற்றும் வறட்சி போன்றவற்றினால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய இந்திய துணைக் கண்டத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளது. சில ஆண்டுகளாக கோடை காலம் மற்றும் பருவ மழை துவங்கும் முன்னர் வெப்பநிலை உயர்வதால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகள் வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்டுள்ளன.
- வளிமண்டல வெப்பநிலை காரணமாக மனிதர்களுக்கு ஏற்படும் உடலியல் ரீதியான அழுத்தத்தின் விளைவாக சில நேரங்களில் உயிரிழப்புகள் நிகழ்கின்றன.
- வெப்ப அலைகளினால் ஏற்படும் தாக்கத்தினை குறைக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் பிற துறைகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வெப்ப அலை செயல் திட்டம் 2019, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தால் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்ட

ஆட்சித்தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் TNSDMA இணையதள முகவரியில் (http://tnsdma.in.gov.in/app/webroot/img/document/heatWaveAction2019.pdf) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**2.4.12 பருவகால மாற்றங்களை எதிர்கொள்ளும் திட்டம்**

ஆசிய மேம்பாட்டு வங்கி மூலம் ரூ.960 கோடி நிதி பெறப்பட்டு பருவ கால மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில், தொழில் நுட்ப உதவியுடன் டெல்டா மாவட்டங்களில் ஆற்று பாசனத்தை மேம்படுத்த தமிழக அரசால் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடல் நீர் உட்புகுவதை தடுப்பதற்காக டெல்டா மாவட்டங்களில் கடைமடை பகுதிகளில் நீர் தேக்கங்கள் அமைக்கப்படும்.

**2.4.13 மானாவாரி பண்ணை முறை**

நீடித்த மானாவாரி பண்ணை விவசாயத்தை மேம்படுத்த ரூ.802.90 கோடி விவசாய துறையின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு பெருங்குழுவிற்கு 1000 ஹெக்டேர் வீதம், 1000 பெருங்குழுக்கள் அமைக்கப்பட்டு, நீடித்த மானாவாரி பண்ணை முறைகள் செயல்படுத்தப்படுகின்றன.

### 2.4.14 சிறப்பான மறுசீரமைப்பு

சிறப்பான மறுசீரமைப்பு என்பது பேரிடர் மறுவாழ்வு பணிகளுக்கு மட்டும் அல்லாது நீண்ட கால துயர் தணிக்கும் முயற்சிகளுக்கும் அரசின் மிக முக்கிய கொள்கையாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பேரிடர்களை எதிர்கொள்ளும் சமுதாயத்தின் மீள்திறனை மேம்படுத்தும் வகையிலும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பேரிடர் அபாயத்தினை குறைத்து மனித உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட சிறப்பான மறுசீரமைப்பு கொள்கை அடங்கிய பேரிடர் நடவடிக்கைகள் பற்றி பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:-

**அட்டவணை 2.10**

| வ. எண். | திட்டங்கள் | தொகை (ரூ- கோடியில்) |
|---|---|---|
| 1 | உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர கால மறுவாழ்வுத் திட்டம் (ETRP) | 1,852 |
| 2 | ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர கால உதவி திட்டம் (TEAP) | 629 |
| 3 | சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதி உதவியுடன் சுனாமி பிந்தைய நிலையான வாழ்வாதார திட்டம் (PTSLP) | 129 |
| 4 | உலக வங்கி நிதி உதவியுடன் கடலோர சமூக ஆபத்து குறைப்பு திட்டம் (VRCC) | 1,959 |

### 2.4.15 மாநில பேரிடர் நிவாரண நிதி (SDRF)

2015-2016-ஆம் ஆண்டு முதல் 2019-2020-ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டங்களுக்கு 14-வது நிதிக்குழுவால் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகையின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.11**

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூ- கோடியில்) |
|---|---|
| 2015-2016 | 679.00 |
| 2016-2017 | 713.00 |
| 2017-2018 | 748.00 |
| 2018-2019 | 786.00 |
| 2019-2020 | 825.00 |
| **மொத்தம்** | 3,751.00 |

### 2.5 கஜாபுயல் நவம்பர் 2018

கஜா புயல் 16.11.2018 அன்று சுமார் 130-145 கி.மீ. வேகத்தில், நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் இடையே கரையை கடந்தது. புயல் கரையை கடந்த போது குடிசைகள், ஓட்டுவீடுகள், கான்கிரீட் வீடுகள், விவசாய மற்றும் தோட்டக்கலை பயிர்கள், கால்நடைகள்,

கோழி பண்ணைகள் மற்றும் மின்கட்டமைப்புகள் பெரும் சேதமடைந்தன. நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் அனைத்துப்பகுதிகளும், திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டன, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, கடலூர், கரூர், மதுரை, தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரு சில பகுதிகள் பாதிக்கப்பட்டன.

### 2.5.1 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- கஜா புயல் 15.11.2018 அன்று மாலை/ இரவு நாகப்பட்டினம் அருகில் கரையைக் கடக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையத்தினால் முன்னறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.11.2018 அன்று கஜா புயல் தொடர்பாக கூட்டம் நடத்தப்பட்டு, பாதிப்பிற்குள்ளாக கூடிய மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணிக்கும் படி மாண்புமிகு மூத்த அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.
- கஜா புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் நிலை குறித்து பேரிடர் தணிப்பு தொடர்புடைய, பல்வேறு துறைகளின் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள், கடலோர பாதுகாப்புப்படை,

கடற்படை மற்றும் விமானப்படையைச் சார்ந்த உயர் அதிகாரிகளுடன், தலைமைச்செயலாளர் அவர்களால் 12.11.2018 அன்று சிறப்புக்கூட்டம் நடத்தப்பட்டு, பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

- 1) வடகிழக்குப்பருவ மழை 2) புயல் தொடர்பான ஆயத்த நடவடிக்கைகள் மற்றும் 3) சரிபார்ப்பு பட்டியல் தொடர்பான சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட கஜா புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் நிலை குறித்து, அனைத்து கடலோர மாவட்ட ஆட்சியர்களுடன் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களால் 12.11.2018 அன்று சிறப்பு காணொலி காட்சி கூட்டம் நடத்தப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.
- மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் மற்றும் முதன்மைச்செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆகியோர் 13.11.2018 அன்று முதல் மாநில அவசரக்கட்டுப்பாட்டு அறையில் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டனர்.

- கஜா புயல் நாகப்பட்டினம் அருகில் 15.11.2018 அன்று இரவு கரையைக் கடக்கும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் முன்னறிவிப்பின் பேரில் தமிழக அரசால் வழங்கப்பட்ட அறிவுரையின்படி இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டனர். நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் புயலால் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளிலிருந்து சுமார் 82,000 நபர்கள் வெளியேற்றப்பட்டு அரசு கட்டடங்கள் மற்றும் பல்நோக்கு பாதுகாப்பு கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.
- கடலோர மாவட்டங்கள் மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விடுமுறை அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து அறிவுரை/ எச்சரிக்கை வழங்கப்பட்டதால் மீனவர்களுக்கு எந்தவிதமான உயிரிழப்பும் இல்லாமல் பாதுகாப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கடலோர மாவட்டங்களில் 15.11.2018 அன்று மாலை 6.00 மணிமுதல் 16.11.2018 அன்று காலை 6.00 மணிவரை சாலை போக்குவரத்து நிறுத்தம் செய்யப்பட்டது. இரயில் போக்குவரத்து நிறுத்தம்

செய்யப்பட்டது. மேலும், உயிரிழப்பினை தவிர்ப்பதற்காக மின்விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டது.

- இத்தகைய பல்வேறு ஆயத்த மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் பெருமளவு உயிர்சேதம் குறைக்கப்பட்டது. மேற்கண்ட, அரசின் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மக்கள் வெகுவாக பாராட்டினர்.

### 2.5.2 உடனடி நடவடிக்கை

- தமிழக அரசு, வீடுகளை இழந்த 1,22,754 குடும்பங்களை 828 தற்காலிக மீட்பு மையங்களில் தங்க வைத்து, அவர்களுக்கு தேவையான உணவு, பால் மற்றும் அத்தியாவசிய பொருட்களை வழங்கியது.
- நிவாரண முகாம்களில் நிலையான மற்றும் நடமாடும் மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டு சுத்தம் மற்றும் சுகாதாரம் மேம்படுத்தப்பட்டு, தொற்றுநோய் பரவாமல் இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தயார்நிலையிலிருந்த பேரிடர் தணிப்பு தொடர்பான பலதுறைகளை சார்ந்த பணியாளர்கள் உடனடியாக செயல்பட்டு இணைப்பு சாலைகள், மாநில

நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் போன்றவைகள் சரிசெய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. தமிழ்நாடு மின் பகிர்மான கழக மற்றும் பிற மாநில மின்வாரிய பணியாளர்களை ஈடுபடுத்தி பாதிப்படைந்த மின்னமைப்புகள் சரிசெய்யப்பட்டது.

### 2.5.3 மாண்புமிகு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட நிவாரண உதவிகள்

தமிழக அரசால் 19.11.2018 அன்று அறிவிக்கப்பட்ட நிவாரணங்கள் பின்வருமாறு:-

- புயலினால் இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தலா ரூ.10 இலட்சம்.
- கொடுங்காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம்.
- காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.25,000.
- இறந்துபோன பசு/எருமை ஒன்றுக்கு ரூ.30,000.
- இறந்துபோன காளை ஒன்றுக்கு ரூ.25,000.
- இறந்துபோன ஆடு ஒன்றுக்கு ரூ.3,000.
- முழுமையான சேதமடைந்த குடிசைக்கு ரூ.10,000.
- பகுதி சேதமடைந்த குடிசைக்கு ரூ.4,100.
- மேலும், பாதிப்படைந்தவர்களுக்கு 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, 1 லிட்டர் மண்ணெண்ணெய் (மாநில பேரிடர் நிவாரண நிதி விதிகளுக்குட்பட்டு) வழங்கப்பட்டது.

கூடுதலாக, முகாம்களில் தங்கியிருந்தவர்களுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 4 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

- பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் உடனடி நிதியுதவியாக ரூ.5,000 வழங்கப்பட்டது. முழுமையாக/ பகுதியாக குடிசை வீடுகள் சேதமடைந்தவர்களுக்கும் முகாம்களில் தங்கவைக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் கட்டுமரம்/ வல்லம் சேதமடைந்த மீனவர்களுக்கும் ரூ.3,800 மதிப்புள்ள 27 விதமான நிவாரணப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு (Relief Kits) (10 கிலோ அரிசி, 2 கிலோ துவரம்பருப்பு, கால் கிலோ புளி, ஒரு கிலோ பால் பவுடர், 2 கிலோ சர்க்கரை, ஒரு கிலோ உப்பு, 200 கிராம் டீத்தூள், 100 கிராம் சாம்பார் பொடி, 2 கிலோ ரவை, 4 பிஸ்கெட் பாக்கெட்டுகள், ஒரு பாய் அல்லது ஜமுக்காளம், 2 லிட்டர் சமையல் எண்ணெய், 2 வேட்டிகள், 2 சேலைகள், 2துண்டுகள், ஒரு நைட்டி, ஒரு கைலி, ஒரு போர்வை, 50 கிராம் தேங்காய் எண்ணெய், 2 குளியல் சோப்பு, 2 துணி துவைக்கும் சோப்பு, ஒரு பாக்கெட்டு கொசுவர்த்தி சுருள், 2 பாக்கெட்டு சானிட்டரி நாப்கின்கள், பிளாஸ்டிக் வாளி,

பிளாஸ்டிக் கோப்பை, ஒரு குடை மற்றும் 2 தீப்பெட்டிகள்) முதன்முறையாக வழங்கப்பட்டது.

- முகாம்களிலிருந்த பெரியவர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர்களுக்கு ஆவின் பால் வழங்கப்பட்டது.
- பாதிக்கப்பட்ட பகுதிவாழ் குடும்பங்களுக்கு டிசம்பர் மாதம் வழங்கப்பட வேண்டிய மண்ணெண்ணெய் ஒதுக்கீடு முன்னதாக நவம்பர் மாதத்திலேயே வழங்கப்பட்டது.
- பாதிக்கப்பட்ட வேளாண்மை/ தோட்டக்கலை பயிர் விவசாயிகளுக்கு தமிழக அரசால் சிறப்பு நிவாரணம் அறிவிக்கப்பட்டது. கஜா புயலினால் தென்னைமரங்கள் பெருத்த சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட தென்னை மரம் ஒன்றுக்கு ரூ.1100/- (சேதமடைந்த மரத்தினை வெட்டுவதற்கு ரூ.500-ம், அகற்றுவதற்கு ரூ.600-ம்) வழங்கப்பட்டது. மேலும், தேசிய பேரிடர் நிவாரண நிதி (NDRF) விதிமுறையின்கீழ் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அதிகபட்ச அளவீடான 2 ஹெக்டேர் என்ற விதியை தளர்த்தி ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் ரூ.7.75 இலட்சம் (அதிகபட்சமாக பாதிப்புக்குள்ளாகிய 700 தென்னை மரங்கள் வரை) நிர்ணயம் செய்து நிதியுதவி வழங்கப்பட்டது. அதேபோன்று சேதமடைந்த முந்திரி

மரத்தினை வெட்டவும், அகற்றிடவும் மரம் ஒன்றுக்கு ரூ.500 வீதம், உச்சவரம்பாக ரூ.4 இலட்சம் (அதிகபட்சமாக பாதிப்புக்குள்ளாகிய 800 முந்திரிமரங்கள் வரை) மாநில பேரிடர் நிவாரண நிதி விதிகளுக்குட்பட்டு நிவாரணம், ஈடுபொருள் மானியத்துடன் கூடுதலாக வழங்கப்பட்டது.

- சொட்டுநீர் பாசனத்திட்டத்தின் கீழ் சிறு, குறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு 100% மானியமாக ஹெக்டேர் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரையும், மற்ற விவசாயிகளுக்கு 75% மானியத்தில் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.75,000 தென்னை மர வளர்ப்புக்காக வழங்கப்பட்டது.
- பாதிப்படைந்த நெற்பயிரிட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 வழங்கப்பட்டது.
- பாதிப்படைந்த கரும்பு/ வாழை/ காய்கறிகள்/ பூக்கள் பயிரிட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 வழங்கப்பட்டது.
- கஜா புயலினால் முழுமையாக சேதமடைந்த கட்டுமரம்/ மீன்பிடி வலை மீனவர்களுக்கு தலா ரூ.42,000 மற்றும் பகுதியாக சேதமடைந்த கட்டுமரம்/ மீன்பிடி வலை மீனவர்களுக்கு தலா ரூ.20,000 வழங்கப்பட்டது.

- கஜா புயலினால் முழுவதும் சேதமடைந்த மீன்பிடி வலையுடன்கூடிய F.R.P. படகு ஒன்றுக்கு ரூ.85,000 மற்றும் பகுதியாக சேதமடைந்த F.R.P. படகு ஒன்றுக்கு ரூ.30,000 இழப்பீடாக மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.
- கஜா புயலினால் முழுவதும் சேதமடைந்த விசைப்படகு ஒன்றுக்கு ரூ.5,00,000 மற்றும் பகுதியாக சேதமடைந்த விசைப்படகு ஒன்றுக்கு ரூ.3,00,000 இழப்பீடாக வழங்கப்பட்டது.-
- மீன்பிடி வலை பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூ.10,000 இழப்பீடாக வழங்கப்பட்டது.
- விசைப்படகு இயந்திரம் (என்ஜின்) சேதமடைந்த மீனவர்களுக்கு அதனை சரிசெய்ய ரூ.5,000 இழப்பீடாக வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.01.2019 அன்று, கஜாபுயலினால் முழுவதும் சேதமடைந்த மீன்பிடி வலையுடன்கூடிய F.R.P. படகு ஒன்றுக்கு ஏற்கனவே அறிவித்த நிவாரணமான 85,000 ரூபாயை, 1,50,000 ரூபாயாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள்.

### 2.5.4 பாதிக்கப்பட்ட கட்டமைப்புகளை தற்காலிகமாக சீரமைத்தல்

- மூத்த அமைச்சர்கள் குழு மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முகாமிட்டு மீட்பு, நிவாரணப்பொருட்கள் வழங்குதல் மற்றும் புனரமைப்பு தொடர்பான பணிகளை கண்காணித்தனர்.
- கடும் சூறைக்காற்றினால் பாதிக்கப்பட்டு வேருடன் சாய்ந்த மரங்களை அகற்ற ஏற்கனவே தயார்நிலையில் இருந்த 1,650 மின்மர அறுவை இயந்திரம் மற்றும் 1,151 JCB இயந்திரம் உபயோகப்படுத்தப்பட்டது.
- வேரோடு சாய்ந்த 14,69,625 மரங்கள் அனைத்தும் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.
- மின்கட்டமைப்பை சீர்செய்ய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் மற்றும் முதன்மை மேலாண்மை இயக்குநர், மின்பகிர்மானம் மற்றும் மின்விநியோக கழகம், அவர்களின் கண்காணிப்பில் 28,644 பணியாளர்களை ஈடுபடுத்தி, அபாயங்களை பொருட்படுத்தாமல் முழுவீச்சாக செயல்பட்டு மின்விநியோகம் சீரமைக்கப்பட்டது. மேலும், ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஆகிய மின்பகிர்மான அமைப்புகளிலிருந்து

பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு 6,28,025 மின் இணைப்புகள் சீரமைக்கப்பட்டது.

- கஜா புயலின் போது மின்விநியோகம் பாதிக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்க இயலாத 184 நகராட்சி குடியிருப்பு பகுதிகள், 270 பேரூராட்சி வார்டுகள் மற்றும் 9048 ஊரக பகுதிகளில் குடிநீர் வழங்க 1,334 ஜெனரேட்டர்கள் மற்றும் 325 டேங்கர் லாரிகள் பயன்படுத்தப்பட்டது.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சிகள்துறை, நகராட்சி நிர்வாகத்துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களின் உயர்அதிகாரிகள் கொண்ட குழுவினரின் மேற்பார்வையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது.
- பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பகுதிகளை சுத்தம் செய்ய 3000 சுகதார பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், 1647 மருத்துவ குழுக்கள், 22047 நடமாடும் மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் 11,66,000 நபர்கள் பயனடைந்தனர். தமிழக அரசின் இப்பெரும் முயற்சியினால் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கப்பட்டது.
- கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிவாழ்மக்களுக்கு ரூ.12.85 கோடி மதிப்புள்ள 11,35,814 எண்ணிக்கையிலான ஆடை நீக்கிய பால் பவுடர் பாக்கெட் வழங்கப்பட்டது.

### 2.5.5 அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்கள்

அரசால் நிவாரணப்பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி குறித்த விவரம் பின்வருமாறு-

**அட்டவணை 2.12**

| வ. எண். | விவரம் | அரசாணை எண் மற்றும் தேதி | ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | இழப்பிற்கான நிவாரணம் (மனித உயிரிழப்பு, கால்நடை இழப்பு, வாழ்வாதார இழப்பு, துணிகள் மற்றும் பாத்திரங்கள்) | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 591.66 |
| | | அரசாணை (1டி) எண்.662, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.22.11.2018 | |
| | | அரசாணை (நிலை) எண்.472, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.30.11.2018 | |
| | | அரசாணை (நிலை) எண்.476, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.04.12.2018 | |
| | | அரசாணை (1டி) எண்.681, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.05.12.2018 | |
| | | அரசாணை (நிலை) எண்.487, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.14.12.2018 | |
| | | அரசாணை (நிலை) எண்.494, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.12.2018 | |
| | | அரசாணை (நிலை) எண்.15, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.08.01.2019 | |
| 2 | வீடு சேதம் | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 401.49 |
| | | அரசாணை (நிலை) எண்.464, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.27.11.2018 | |

| வ. எண். | விவரம் | அரசாணை எண் மற்றும் தேதி | ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| | | அரசாணை (நிலை) எண்.15, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.08.01.2019 | |
| 3 | பயிர்சேதம் | | |
| | வேளாண்மை | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 709.51 |
| | | அரசாணை (நிலை) எண்.09, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.04.01.2019 | |
| | | அரசாணை (நிலை) எண்.19, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.10.01.2019 | |
| | | அரசாணை (நிலை) எண்.113, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.28.05.2019 | |
| | தோட்டக்கலை | அரசாணை (நிலை) எண்.09, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.04.01.2019 | 65.80 |
| | | அரசாணை (நிலை) எண்.10, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.04.01.2019 | |
| | | அரசாணை (நிலை) எண்.113, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.28.05.2019 | |
| | வேளாண்மை பொறியியல் துறை | அரசாணை (நிலை) எண்.113, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.28.05.2019 | 0.11 |
| 4 | கட்டமைப்பு | | |
| | நெடுஞ்சாலைத் துறை | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 25.00 |
| | பேரூராட்சிகளின் இயக்ககம் | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 5.00 |

| வ. எண். | விவரம் | அரசாணை எண் மற்றும் தேதி | ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| | ஊரக வளர்ச்சித்துறை இயக்ககம் | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 25.00 |
| | பொதுப்பணித்துறை | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 10.00 |
| | குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018<br>அரசாணை (நிலை) எண்.113, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.28.05.2019 | 19.26 |
| | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 5.00 |
| 5 | மீன்வளத்துறை | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018<br>அரசாணை (நிலை) எண்.113, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.28.05.2019 | 46.88 |
| 6 | மின்பகிர்மான மற்றும் மின்விநியோகக் கழகம் (TANGEDCO) | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 200.00 |
| | | அரசாணை (நிலை) எண்.493, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.12.2018 | 250.00 |
| 7 | பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் | அரசாணை (நிலை) எண்.458, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.20.11.2018 | 27.50 |
| 8 | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்ககம் | அரசாணை (நிலை) எண்.116, வ.(ம) பே.மே.துறை, பே.மே-II அலகு, நாள்.28.05.2019 | 13.08 |
| | | **மொத்தம்** | **2395.29** |

**2.5.6 கஜா புயல் மறு கட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டம் (GRRRP)**

கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைக்கவும் பாதிக்கப்பட்ட விவசாயம், தோட்டக்கலை, மீன்வளம் போன்ற தொழில்களை புனரமைக்கவும் இதன்மூலம் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, சென்னையை தலைமையிடமாகக் கொண்டு கஜா புயல் மறுகட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் மாநில திட்ட அலகு, மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரி நிலையில், திட்ட இயக்குநர் தலைமையின் கீழும், நாகப்பட்டினம் (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்) மற்றும் தஞ்சாவூரை (தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) தலைமையிடமாகக் கொண்டு இரு களஅலகுகள் (Field Units) இந்திய ஆட்சிப்பணி அதிகாரி நிலையில், கூடுதல் திட்ட இயக்குநர்கள் கீழும், உருவாக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது.

## 3. நில நிருவாகம்

நில நிருவாகமானது, வருவாய் நிருவாகத்தின் முக்கியமான அங்கங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. நில நிருவாக ஆணையரகம், முன்னாள் வருவாய் வாரியத்தால் கவனிக்கப்பட்டு வந்த, நிலம் தொடர்பான பல்வேறு பணிகளைக் கவனிப்பதற்காக, 1980-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்த ஆணையரகம், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களையும் நிர்வகிப்பதுடன், கீழ்க்காணும் பொருண்மைகளையும் கையாள்கிறது-

- விவசாய நில ஒப்படை, வீட்டுமனை ஒப்படை,
- ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நில மாற்றம்,
- மாநில அரசிடமிருந்து மத்திய அரசுக்கு நில மாற்றம்.
- மத்திய/ மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள்/ வாரியங்களுக்கு நில உரிமை மாற்றம்,
- அரசு நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்,
- ஆக்கிரமணங்களை அகற்றுதல்,
- எஸ்டேட் ஒழிப்புச் சட்டம்,
- பொது நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும் நில எடுப்பு,

- ஆயக்கட்டுகளை மேம்படுத்துதல், தண்ணீர் கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்கள் நிர்ணயம்,
- விட்டோடிகள் சொத்துச் சட்டம் , 1950,
- தமிழ்நாடு திரையரங்கு ஒழுங்கு முறைச் சட்டம், 1955-இன் கீழ் மேல்முறையீடு,
- பத்திரப்பதிவு மாற்ற நிகழ்வுகள் (பட்டா மாற்றம்)
- நத்தம் நிலவரித் திட்டம் மற்றும் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான முறையீடு மற்றும்
- தொழில் நோக்கங்களுக்காக, பாசன நீரைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தும் பணியுடன், சிறு பாசனக் கணக்கெடுப்பு ஒருங்கிணைப்பு ஆணையரகமாகவும் செயல்பட்டு வருகிறது.

மூன்று இணை ஆணையர்கள், ஆறு உதவி ஆணையர்கள் மற்றும் ஒரு தலைமைக் கணக்கு அலுவலர் ஆகியோர் மேற்காணும் பணிகளை நிறைவேற்ற கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிருவாக ஆணையருக்குத் துணை புரிகின்றனர்.

### 3.1 பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் சேவை, பொது மக்களைச் சென்றடைவதை இந்த ஆணையரகம் கூர்ந்து கண்காணிக்கின்றது. இந்தச் சேவையானது இணையதளம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இணையதள வழியிலான பட்டா மாறுதல் திட்டம் சீரிய முறையில் செயல்படுகிறதா என்பதை உறுதி செய்யும் வகையில் காலவாரியாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1.1. இணையதள வழியிலான பட்டா மாறுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் 10.6.2011 நாளைய சட்டமன்றப் பேரவை அறிவிப்பிற்கிணங்க, கிராம நிருவாக அலுவலர்கள் பட்டா மாறுதல் விண்ணப்பங்களைப் பெறுவதற்கு ஏதுவாக, வருவாய் நிலை ஆணை எண் 31(8)-இல் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 209, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8.7.2011-இல் வெளியிடப்பட்டது. பட்டா மாறுதல் குறித்த விண்ணப்பங்களைக் குறித்த காலத்தில், முறையாகப் பரிசீலனை செய்து விரைவாக முடிவு செய்ய, அரசாணை (நிலை) எண் 210,


வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8.7.2011-இல் விரைவுப் பட்டா மாறுதல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பட்டு வந்தது.

மேலும், பட்டா மாறுதல் குறித்த சேவைகள் பொது மக்களை நேரடியாகச் சென்றடைவதற்கு ஏதுவாக அரசாணை (நிலை) எண் 209, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8.7.2011 மற்றும் அரசாணை (நிலை) எண் 210, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8.7.2011-இல் கண்டுள்ள முறைகளை மேலும் மேம்படுத்தி, இணையதள வழியிலான பட்டா மாறுதல் முறையைச் செயல்படுத்தும் வகையில், அரசாணை (நிலை) எண் 303, வருவாய்த் [நி.அ.II (2)] துறை, நாள் 27.12.2016 வெளியிடப்பட்டது. இந்த முறையின்கீழ், மனுதாரர்கள் தங்களுக்கு அருகிலுள்ள பொது சேவை மையத்தில், இணையதளத்தில், பட்டா மாறுதல் சேவைக்காக விண்ணப்பித்துக் கொள்ளலாம், அவர்களுக்கு உடனடியாக ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக, இந்தப் பட்டா மாறுதல் கோரும் மனு மீது work flow based system-இன் கீழ் இணையதள வழியாகத் தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது, குறுஞ்செய்தி (SMS) மூலமாக மனுதாரருக்கு அனுப்பப்படுகின்றது. இந்தக் கூடுதல் தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி, மனுதாரர் சிட்டா நகலையும்,

அ" பதிவேடு நகலையும் இணையதளம் வழியாக "எந்த நேரத்திலும் எங்கிருந்து வேண்டுமாயினும் "(anytime anywhere) என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு எடுக்கப்படும் நகல்களில், இணையவழி கையொப்பம் மற்றும் சிறப்புக் குறியீடு (Quick Response - QR code) இணைக்கப்பட்டு இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது, மாநிலத்தில் 303 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு வட்டங்களில் (கொல்லிமலை வட்டம் - நாமக்கல் மாவட்டம்/ வால்பாறை வட்டம் - கோயம்புத்தூர் மாவட்டம்) இத்திட்டத்தினை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, பொது மக்களுக்கு பட்டா மாறுதல் வழங்கும் சேவையில் மிகுந்த வெளிப்படைத் தன்மையையும், நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதுடன், உடனுக்குடன் பட்டா வழங்கிடவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1.4.2018 முதல் 31.3.2019 வரையிலான காலத்தில், இந்த திட்டத்தின் கீழ், 32 மாவட்டங்களிலும், மொத்தம் 27,26,630 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 11,95,353 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**இணையவழி பட்டா மாற்றம்**

**1.4.2018 முதல் 31.3.2019 வரை**




**3.1.2 பத்திரப் பதிவுத்துறையுடன் பட்டா மாற்றம் குறித்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்**

பத்திரப் பதிவுத்துறையில், மேற்கொள்ளப்படும், சொத்துப் பரிமாற்றங்கள் குறித்தான பதிவுகள்அனைத்தும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆவணங்களில் பிரதிபலித்தால் மட்டுமே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் பதிவுகள் நாளது தேதி வரையிலான விவரங்களைக் கொண்டனவாக அமையும். இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் விதமாக, சார்-பதிவாளர் அலுவலகங்கள் மூலமாகவும் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. நிலம் தொடர்பான அனைத்துப் பதிவுகளும், ஒவ்வொரு வாரமும், வட்டாட்சியர்

அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, இணையதள வழியாக வருவாய்ப் பதிவுகளில் (இணையதள Tamilnilam land records database) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம், நில உரிமையாளர்கள் பட்டா மாறுதல் கோரி மீண்டும் மனு செய்வது தவிர்க்கப்படுகின்றது. மேலும், இணையவழி பட்டா மாறுதல் தொடர்பாக சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குமான ஒருங்கிணைப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2 அரசு நில விவர வங்கி

நில மாற்றம், நிலக் குத்தகை மற்றும் நில ஒப்படை ஆகியவற்றை சீரிய முறையில் செயல்படுத்தும் வகையில், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்கள் குறித்த ஒருங்கிணைந்த தகவல் தொகுப்பு, சென்னையிலுள்ள மாநிலத் தகவல் தொகுப்பு மையத்தில் உருவாக்கப்பட்டு, பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்குத் தேவையான விவரங்கள், மேற்படி தகவல் தொகுப்பிலுள்ள விவரங்களைச் சரிபார்த்து, அரசுத் துறைகளுக்கான நில மாற்றம் மற்றும் அரசு நிறுவனங்களுக்கான நில உரிமை மாற்றம் மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. தேசியத் தகவல் மையம் இத்திட்டத்திற்கான தொழில்நுட்ப உதவியினை வழங்கி

வருகின்றது. இத்தகவல் தொகுப்பின் அடிப்படையில், அரசு நில விவரப் பதிவேடு" அச்சிடப்பட்டு, சீரிய முறையில் அரசு நிலங்களைப் பார்வையிடவும், பாதுகாக்கவும் அனைத்து கிராம நிருவாக அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அரசு நிலங்களின் நிலை குறித்து, கிராம நிருவாக அலுவலர்களால் நேரடி கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பதிவேட்டில் தற்போதைய நிலை குறித்து பதியப்படும் விவரங்கள், மத்திய தகவல் தொகுப்பில் உள்ள அரசு நிலங்கள் குறித்த தற்போதைய தகவல்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமையும்.

## 3.3 தொன்மையான நில ஆவணங்களைக் கணினி மயமாக்குதல்

தொன்மையான நில ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்ட அலுவலகங்களில் உள்ள தொன்மை வாய்ந்த மதிப்புமிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவற்றை எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பாதுகாக்கும் பொருட்டு, முதன் முதலாக கணினிமயமாக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, இத்திட்டமானது ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் பாதுகாக்கப்பட்டு வரும், அசல் நிலவரித் திட்டப் பதிவேடுகள் (Original Settlement Registers), திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள தொன்மை வாய்ந்த மதிப்பு மிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவை கணினிமயமாக்க

தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தில் 3,56,244 பக்கங்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 4,62,445 பக்கங்களும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3,69,777 பக்கங்களும் கொண்ட பழைய கோப்புகள் மற்றும் ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த, 1,01,361 பக்கங்கள் கொண்ட மறு நில அளவைப் பதிவேடுகள் (Re-Settlement Register (RSR) இத்திட்டத்தின்கீழ் 2017-2018-ஆம் ஆண்டில் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆவணங்களை நடப்பு ஆண்டில் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.4 வீட்டுமனை ஒப்படை

தமிழகத்தில் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை வழங்கப்படுகிறது. வீடற்ற ஏழை மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்பதே அரசின் நோக்கமாகும். கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து, தகுதிவாய்ந்த, வீடற்ற ஏழை மக்களுக்கு வருவாய் நிலை ஆணை எண் 21-இன்கீழ் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு கிராம நத்தம் நிலங்கள் போதுமானதாக இல்லாத நேர்வுகளில் வருவாய் நிலை ஆணை எண் 21(6)-இன்கீழ் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி ஆட்சேபகரமற்ற பிற அரசு புறம்போக்கு நிலங்களை நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து, தகுதியுள்ள வீடில்லா ஏழைகளுக்கு வீட்டு மனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.

வீட்டுமனை ஒப்படையைப் பொறுத்த வரையில், கிராமப் புறங்களில், ஆண்டு வருமானம் ரூ.30,000/-க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையில் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குக் குறைவாகவும் உள்ள வீடில்லா ஏழைக் குடும்பத்தினர் இலவசமாக வீட்டுமனை பெறத் தகுதியுடையவராவர். வீட்டுமனைகள், குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே ஒப்படை செய்யப்படுகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி, கிராமபுறங்களில் மூன்று சென்ட் நிலம், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் நிலம், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் நிலம் என்ற அளவில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.

2018-2019-ஆம் ஆண்டில், 3,00,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இலக்கையும் விஞ்சி, 3,00,146 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 248, வருவாய்த் துறை, நாள் 28.7.2009-இன்கீழ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பல்வேறு அலுவலர்களுக்கு, வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு, வழங்கப்பட்டுள்ள நிதி அதிகார வரம்பு (ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு) கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1**

**வீட்டுமனை ஒப்படைக்கான நிதி அதிகார உச்சவரம்பு**

| வ. எண் | அலுவலர்கள் | நிதி அதிகார உச்ச வரம்பு (நில மதிப்பு - ரூபாயில்) |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | 30,000/- |
| 2 | கோட்டாட்சியர் | 50,000/- |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | 1,00,000/- |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் | 4,00,000/- |
| 5 | நில நிருவாக ஆணையர் | 5,00,000/- |
| 6 | அரசு | 5,00,000/-க்கு மேல் |

வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு, தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதுடன், 2011-2012-ஆம் நிதியாண்டு முதல் 2018-2019-ஆம் நிதியாண்டு வரையில், 20,50,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும், இலக்கினை விஞ்சி மொத்தம் 23,00,922 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் கீழ்கண்டுள்ள விபரப்படி இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன

**அட்டவணை 3.2**

**இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட விவரம்**

| ஆண்டு | இலக்கு | வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் |
|---|---|---|
| 2011-2012 | 1,00,000 | 1,21,804 |
| 2012-2013 | 1,00,000 | 1,31,299 |
| 2013-2014 | 2,00,000 | 2,17,723 |
| 2014-2015 | 3,00,000 | 3,81,708 |
| 2015-2016 | 3,50,000 | 4,05,111 |
| 2016-2017 | 3,50,000 | 3,54,745 |
| 2017-2018 | 3,50,000 | 3,88,386 |
| 2018-2019 | 3,00,000 | 3,00,146 |
| **மொத்தம்** | **20,50,000** | **23,00,922** |

ஊரகப் பகுதிகளிலுள்ள நீர்நிலை போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள நீண்டகால குடியிருப்பு ஆக்ரமணங்களை அகற்றி, அதனை உரிய செயல்பாட்டிற்கு உட்படுத்தும் வகையிலும், ஏழைக் குடும்பங்களுக்கு மாற்று இடம் தேர்வு செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஒரு சிறப்பு வரன்முறை திட்டம் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.465, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 27.11.2018-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு மூலம் ஆக்ரமணம் செய்துள்ளவர்களை அப்புறப்படுத்தி மாற்று இடம் தேர்வு செய்து, அவர்களின் தகுதியின் அடிப்படையில் உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. நீர் நிலைகளைத் தவிர்த்து, ஆட்சேபனைக்குரிய பறம்போக்கு நிலங்களில் குடியிருப்புகளாக உள்ள ஆக்ரமணங்களைக் கணக்கிடப்பட்டதன் அடிப்படையில், அதே கிராமத்தில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் மாற்று இடம் தேர்வு செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்கள் இல்லாத நிலையில், தனியார் பட்டா நிலங்களை கையகப்படுத்தி/ நேரடி பேச்சு வார்த்தை மூலம் விலைக்குப் பெற்று

ஆக்கிரமணதாரர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் நபர்களுக்கு ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் வீடுகட்ட வசதி செய்திடப்படும். மாற்றுப் புலத்தில் 3 சென்ட் அளவிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு, பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமான வரம்பாக ரூபாய் ஒரு இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு லட்சத்திற்கு அதிகமாக உள்ள பயனாளிகளுக்கு நிலக்கிரையம் வசூல் செய்து கொண்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும். இச்சிறப்பு வரன்முறைத் திட்டம் 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். இத்திட்டமானது மாநிலத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள நீண்ட காலக் குடியிருப்புகளாக உள்ள ஆக்ரமணங்களை வரன்முறைப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண்.496, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 24.12.2018-இல் சிறப்பு வரன்முறைத் திட்டத்தைச் செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நேர்வில், சுமார் 1,26,066 குடியிருப்பு ஆக்கிரமணங்கள் கண்டறியப்பட்டு,

சிறப்பு வரன்முறைத் திட்டத்தின் கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.5 நில மாற்றம்

வருவாய் நிலை ஆணை எண் 23-இன்கீழ், மத்திய அரசுத் துறைகளுக்கு நிலக்கிரையத்தை வசூலித்துக்கொண்டும், வருவாய் நிலை ஆணை எண். 23ஏ-இன்கீழ் மாநில அரசுத் துறைகளுக்கு நிலக்கிரையமின்றியும் அரசு நிலங்கள் நில மாற்றம் செய்யப்படுகின்றன.

மத்திய/ மாநில அரசுத் துறைகளுக்கு அரசு நிலங்கள் தேவைப்பட்டால், கேட்புத் துறையானது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், கேட்புத் துறையின் தேவை மற்றும் இருப்பிலுள்ள தகுதியுடைய அரசு நிலங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், உத்தேச நில மதிப்பினை நிர்ணயம் செய்தும், உரிய முன்மொழிவினை, நில நிருவாக ஆணையரின் பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பப்பட்டு, கேட்புத்துறைக்கு நில மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டு வருகிறது.

சுகாதாரம், கல்வி, காவல் போன்ற சில மாநில அரசுத்துறைகளைப் பொறுத்தமட்டில், அத்துறைகளின்

அத்தியாவசியத் தேவைக்கேற்ப, ஆட்சேபணையற்ற அரசு நிலங்கள் நில மதிப்பு வரம்பின்றி, குறைந்தபட்ச நிலப்பரப்பினை அரசாணை (நிலை) எண். 503, வருவாய்த்துறை, நாள் 21.9.1999-இன்படி நிலமாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நில மாற்றம் செய்யும்பொழுது, ஆட்சேபனையுள்ள நிலங்களான - நீர்நிலை, மயானம், பாதை போன்றவை தவிர்க்கப்படுகின்றன.


நிலமாற்ற நேர்வுகளுக்கு, மந்தைவெளி மற்றும் மேய்க்கால் வகைபாடுடைய அரசு புறம்போக்கு நிலங்கள் உட்படுகையில், நிலமாற்ற புலத்திற்குச் சமமான அளவுள்ள மாற்றுப்புலம் வருவாய் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களின் கூட்டுப்புலத்தணிக்கையில் கண்டறியப்பட வேண்டும். மேலும், கேட்புத்துறையான மாற்று நிலத்தின் மேம்பாட்டுப் பணிக்கான தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.6,000/- அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ.15,000/- என்ற வீதத்தில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடம் செலுத்தப்பட வேண்டும். மாற்று நிலம் உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்புவிக்கப்பட்டு, அதன் உரிமை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையிடம் இருக்கும்.

நில மாற்றம் பெற்ற அரசுத்துறை, அவ்வாறு நில மாற்றம் பெற்ற நிலங்களை முறையாக அவை எந்த நோக்கங்களுக்காக நிலமாற்றம் செய்யப்பட்டதோ, அந்தப் பயன்பாட்டில் பரிபாலனம் செய்யப்படுவதை உறுதி செய்யப்படல் வேண்டும். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அனைத்து அரசு நிலங்களுக்கும் பாதுகாவலராக உள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, அரசுத் துறைகள், தாங்கள் நிலமாற்றம் மூலம் பெற்ற நிலங்களை சரிவர பயன்படுத்தாத பட்சத்தில், அத்துறையிடமிருந்து மேற்படி நிலங்களை மீளப்பெற்று, தகுதி மற்றும் தேவையுள்ள பிறிதொரு துறைக்கு நிலமாற்றம் செய்யும் உரிமையைத் தக்க வைத்துள்ளது.

2011-ஆம் ஆண்டு முதல் 31.3.2019 வரையில், 4,396 ஏக்கர் அரசு நிலங்கள், கல்வி, நீதி, போக்குவரத்து, காவல், சுகாதாரம், நெடுஞ்சாலை, பொதுப்பணி, தொழில் மற்றும் வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மீன்வளம், அணுசக்தி, எல்லைப்பாதுகாப்புப்படை மற்றும் இராணுவம் போன்ற பல்வேறு மாநில/ மைய அரசுத்துறைகளுக்கு 543 இனங்களில் நில மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 1.4.2018 முதல் 31.3.2019 வரையில் 186 ஏக்கர் அரசு நிலங்கள் 46 இனங்களில் நில மாற்றம் செய்து அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**நிலமாற்றம் – ஏக்கரில்**

**01.04.2018 முதல் 31.03.2019 வரை**




| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்ட அரசாணைகளின் எண்ணிக்கை | : | 46 |
| பிரேரணைகளின் மொத்த எண்ணிக்கை | : | 46 |
| நில மாற்றம் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம் | : | 186 ஏக்கர் |

## 3.6 நில உரிமை மாற்றம்

மாநில அரசு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், அதாவது சிட்கோ, சிப்காட், டான்ஜெட்கோ, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியன மற்றும் மத்திய அரசு

மற்றும் அரசு நிறுவனங்கள் முறையே இரயில்வே, விமான நிலைய விரிவாக்கம், நெய்வேலி லிக்னைட் கழகம் ஆகியவை அரசு புறம்போக்கு நிலங்களை வழங்கக்கோரி அளிக்கும் கேட்புப் படிவத்தின்படி, வருவாய் நிலை ஆணை எண் 24-இன்கீழ், மேற்படி நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கும், பொதுப் பயன்பாட்டிற்கும் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றைப்போல், இந்த வருவாய் நிலையாணைப்படி அரசு நிலங்கள் தனியார் நிறுவனங்களுக்கும், அவர்தம் கோரிக்கைகள் உண்மையாகவும், அரசு நிலங்களின் தேவைக்கேற்றாற்போல் குறிப்பிட்ட அளவிற்குட்பட்டு வழங்கப்படும். நில உரிமை மாற்றம் செய்யப்படும் இனங்களில், வணிக நோக்கமில்லா இனங்களுக்கு, நிலத்திற்கான தொகையாக ஒரு மடங்கு சந்தை மதிப்பும் வணிக நோக்கமுடைய இனங்களுக்கு, நிலத்திற்கான தொகையாக, இரு மடங்கு சந்தை மதிப்பும் வசூலிக்கப்படும். நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட இனங்களில், நிலங்கள் எந்த நோக்கத்திற்கு உரிமை மாற்றம் மேற்கொள்ளப்பட்டதோ, அந்த நோக்கத்திற்கல்லாமல், வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டால், அரசால் நில உரிமை மாற்றம் மேற்கொள்ளப்பட்ட நிலம் எவ்வித ஈட்டுத்தொகையும் வழங்காமல் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

பொது மக்களின் நலன்கருதி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, குடிநீர் வழங்கும் திட்டம், கழிவுநீர் அகற்றல் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவைகளின் செயல்பாடுகளுக்கு, நிலக்கிரையமின்றி, இலவசமாகவே, சிறப்பு நேர்வாக, நில உரிமை மாற்றம் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்றே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்த அடுக்குமாடி குடியிருப்பு கட்டவும், நிலங்கள் அரசால் இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

அரசாணை (நிலை) எண். 426, வருவாய்த் (நி.மு. 4) துறை, நாள் 29.9.2014-இன் வாயிலாக நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் குறித்த முன்மொழிவுகளின் ஆய்வு மேற்கொள்ளுதலின் தரம் தொடர்பாக எவ்வித சமாதானமுமின்றி உரிய நடவடிக்கையினைத் துரிதமாக மேற்கொள்ள ஏதுவாக, தலைமைச் செயலக அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர் தலைவராகவும், நில நிருவாக ஆணையர் கூட்டத்தை ஒருங்கிணைத்து நடத்துபவராகவும்/ உறுப்பினர் செயலராகவும் மற்றும் அதிக அளவில் நிலமாற்றம்/ நில

உரிமை மாற்ற முன்மொழிவுகளுக்கு அரசின் இசைவு/ ஒப்புதல் பெறப்பட வேண்டிய துறைகளான பொதுப்பணி, கால்நடைப் பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகராட்சி நிருவாகம் ஆகிய துறைத்தலைவர்கள் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றார்கள்.


அரசாணை (நிலை) எண். 632, வருவாய்த் [நி.மு.5(1)] துறை, நாள் 7.11.2008-இல் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, டான்ஜெட்கோ (TANGEDCO)-விற்கு எவ்வித நிதி வரம்புமின்றி, ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் முன்நுழைவு அனுமதியினை வழங்குவதற்கு ஏதுவாக, அரசாணை (நிலை) எண். 344, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.மு.5(1)] துறை, நாள் 19.9.2018 பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆட்சேபகரமான புறம்போக்கு நேர்வுகளில், சம்பந்தப்பட்ட துறைகளின் ஆட்சேபனையின்மைச் சான்று பெறப்பட்டவுடன், அரசின் ஒத்திசைவிற்காகக் காத்திராமல் அவற்றை உரிய மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பி, முன்நுழைவு அனுமதியினை அரசாணை (நிலை) எண். 632, வருவாய்த்துறை, நாள் 7.11.2008-இல் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2011-ஆம் ஆண்டு முதல் 31.3.2019 வரையில், மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள்

ஆகியவைகளிடமிருந்து பெறப்பட்ட 441 இனங்களில் 5,052 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்கள், பொது நோக்கங்களுக்காக நில உரிமை மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 01.04.2018 முதல் 31.03.2019 வரையில், 1,564 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்கள் 82 இனங்களில், நில உரிமை மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளன.

**நில உரிமை மாற்றம் – ஏக்கரில்**

**01.04.2018 முதல் 31.03.2019 வரை**




| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்ட அரசாணைகளின் எண்ணிக்கை | : | 82 |
| பிரேரணைகளின் மொத்த எண்ணிக்கை | : | 82 |
| நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம் | : | 1,564 ஏக்கர் |

## 3.7 நிலக் குத்தகை

வருவாய் நிலை ஆணை எண்.24ஏ-இன்கீழ் உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்காக அரசு புறம்போக்கு நிலங்கள்/ கட்டடங்கள்/ நிலத்துடன் கூடிய கட்டடங்கள் தற்காலிகமாக குத்தகை அடிப்படையில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகின்றன. பொது நலன் மற்றும் சமூக மேம்பாட்டு அடிப்படையில் செயல்படும் அமைப்புகளுக்கு அவசியம் என கருதும் பட்சத்தில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகைக்கு வழங்கப்படுகிறது.

(அ) குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை வேறு நபருக்கு உள் குத்தகைக்கோ/ வாடகைக்கோ /குத்தகை உரிமையை கிரையம் செய்யவோ அனுமதி கிடையாது.

(ஆ) குத்தகை நிபந்தனை மீறப்படின், நடைமுறையிலுள்ள விதிமுறைகளை பின்பற்றி நிலக்குத்தகை இரத்து

செய்யப்பட்டு, எவ்வித இழப்பீடுமின்றி, குத்தகை நிலம் அரசு வசம் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

(இ) குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம் எந்தப் பயன்பாட்டிற்காக வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

(ஈ) குத்தகையைப் புதுப்பித்தல் மற்றும் குத்தகைத் தொகை மறு நிர்ணயம் செய்தல் தொடர்பான முன்மொழிவுகள் இறுதி ஆணையினை எதிர்நோக்கி, பரிசீலனையில் உள்ள நேர்வுகளில், குத்தகைத் தொகை அதிகமாவதை தவிர்க்கும் பொருட்டு, ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குத்தகைத் தொகையில் ஆண்டிற்கு 12% கருத்தியலான (Notional) உயர்வு அளித்து உத்தேச குத்தகைத் தொகை வசூல் செய்யப்பட வேண்டும்.

குத்தகைக்கு வழங்கப்படும் அரசு நிலங்களுக்கு குத்தகைத் தொகை நிர்ணயம் செய்ய, மாதிரி நிலம் தேர்வு செய்யப்பட்டு அதன் விற்பனை மதிப்பு மற்றும் வழிகாட்டி மதிப்பீட்டின் மதிப்பு இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் சந்தை நில மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி, வணிகமற்ற நோக்கங்களுக்கு, நில மதிப்பில் 7 விழுக்காடும், (தலவரி, தலமேல்வரி உட்பட) வணிக நோக்கங்களுக்கு நில மதிப்பில் 14 விழுக்காடும் (தலவரி, தலமேல்வரி உட்பட) ஆண்டுக் குத்தகைத் தொகையாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

நீண்டகாலக் குத்தகை இனங்களில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அப்போது நிலவும் சந்தை மதிப்பின் அடிப்படையில், மாவட்ட நிர்வாகத்தால், குத்தகைத் தொகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. பொது நலன், சமூக மேம்பாடு மற்றும் வணிக நோக்கமற்ற அமைப்புகளுக்கு குத்தகை அனுமதிக்கப்பட்ட இனங்களில், சிறப்பு நேர்வுகளில் குறைந்தபட்ச குத்தகைத் தொகை அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது.

குத்தகை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் இனங்களில் நில மதிப்பின்படி, வருவாய்த் துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு, அரசாணை (நிலை) எண்.527, வருவாய்த் (நி.மு.2(1)) துறை, நாள்.28.11.2014-ன்படியும், மற்றும் அரசாணை (நிலை) எண். 55, வருவாய்த் (நி.மு.2(1)) துறை நாள் 24.2.2017 இன்படியும் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.3**

| அலுவலர்கள் | நிதி அதிகார வரம்பு (நில மதிப்பில்) | |
|---|---|---|
| | **நிலக் குத்தகை (புதிய இனங்களுக்கு) (ரூபாய்)** | **குத்தகையைப் புதுப்பித்தல் (ரூபாய்)** |
| வட்டாட்சியர் | ஏதுமில்லை | ஏதுமில்லை |
| வருவாய் கோட்டாட்சியர் | 50,000/- வரை | ஏதுமில்லை |
| மாவட்ட வருவாய் அலுவலர் | 1,00,000/- வரை | ஏதுமில்லை |
| மாவட்ட ஆட்சித் தலைவர் | 4,00,000/-வரை | 10,00,000/-வரை |
| நில நிருவாக ஆணையர் | 5,00,000/- வரை | 25,00,000/-வரை |
| அரசு | 5,00,000/-க்கு மேல் | 25,00,000/-க்கு மேல் |

2018-2019-ஆம் நிதியாண்டில் குத்தகைத் தொகையாக ரூ.73,90,43,439/- வசூல் செய்யப்பட்டு அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 3.8 உப்பள நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

தமிழகக் கடற்கரைப் பகுதியில் உள்ள அரசு நிலங்களில் உப்பு மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு வருவாய் நிலை ஆணை எண்.24A-இன்கீழ் உப்பளக் குத்தகை அடிப்படையில் தற்காலிகமாக குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்படுகின்றன.

உப்பளக் குத்தகை வழங்கப்படும் நிலங்களுக்குக் குத்தகைத் தொகை மற்றும் உரிமத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது:-

**அட்டவணை 3.4**

| | | |
|---|---|---|
| 1. | குத்தகைத் தொகை | ரூ.5/-வீதம் ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| 2. | உரிமத் தொகை | உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/- வீதம் குறைந்த பட்சமாக ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு ரூ.100/- |
| 3. | தலவரி 100% | ரூ.5/- ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| 4. | தலமேல்வரி 500% | ரூ.25/- ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |
| | மொத்தம் | ரூ.135/- ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |

உப்பு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, உப்பளக் குத்தகைத் தொகை மற்றும் உரிமத்தொகை தமிழகத்தில் குறைவானதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**3.9 அரசு நிலங்களில் குழாய் மற்றும் கண்ணாடி இழைக்கம்பி பதிப்பதற்கு அனுமதி**

வருவாய் நிலை ஆணை எண் 24A-இன் கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் குழாய் மற்றும் கண்ணாடி இழைக்கம்பி பதித்து, வணிகம் மற்றும் வணிகமற்ற நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு, தனி நபர், தனியார் அமைப்பு, நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, தட வாடகை நிர்ணயம் செய்து அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், விவசாயப் பயன்பாட்டிற்காக அரசு நிலங்களில் குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்லப்படும் இனங்களில் தடவாடகை அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளது.

**3.10 நில மாற்றம்/ நில உரிமை மாற்றம்/ குத்தகை– கண்காணிக்கும் முறை**

கணினி வழியாக, நில மாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை தொடர்பான இனங்களில், மாநிலம் முழுவதிலுமிருந்து பெறப்படும் முன்மொழிவுகள் நில நிருவாக ஆணையரகத்தால் கண்காணிக்கப்பட்டு, மாவட்ட அலுவலர்களின் நடவடிக்கையினைத் துரிதப்படுத்தி, நிலம் தொடர்பான முன்மொழிவுகளைத் துரிதமாக முடிவு செய்து, திட்டப்

பணிகளுக்கான அரசு நிலங்களை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.11 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களைப் பாதுகாப்பதும், ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் கண்காணிப்பதும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் முதன்மையான பணியாகும்.

அரசு நிலங்களைப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகள் கண்டறியப்படின், அவற்றை அகற்றவும் கீழ்க்காணும் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளன:-

1. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905,
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920,
3. தமிழ்நாடுபொது வளாகங்கள் (ஆக்கிரமிப்பாளர்களை) வெளியேற்றுதல் சட்டம், 1975,
4. தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1994,
5. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 மற்றும்
6. தமிழ்நாடு நீர்நிலைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007.

அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20.1.1987-இல், நீர்நிலை ஆதாரங்களான, குளம், குட்டை,

ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் வகையில், மேற்கண்ட நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளைப் பொதுப் பயன்பாட்டிற்கோ, வீட்டுமனை வழங்குவதற்கோ தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20.01.1987-யை வலியுறுத்தியும், அதனைத் தவறாது கடைப்பிடிக்குமாறும், அரசாணை (நிலை) எண். 186, வருவாய்த் துறை, நாள் 29.4.2003-இல் மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண் 20186/2000-இல் வெளியிட்ட தீர்ப்பில், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் உள்ள சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றிடவும், நீர்நிலைகளைப் பாதுகாத்து, அவற்றை, அவற்றின் பழைய நிலைக்குக் கொண்டு வரவும் உத்தரவிட்டுள்ளது.

எனவே, நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு,

பொதுப்பணித் துறை/ நீர்வள ஆதாரத் துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு உச்சநீதிமன்ற சிறப்பு விடுப்பு மனு எண் 3109/2011 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண் 1132/2011 ஆகியவற்றின் மீது வழங்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில், கிராமப் பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்புவிக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுவதற்கு, அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்து, அதன்படி ஆக்கிரமணங்களை அகற்றி, அந்நிலங்களைச் சமுதாய பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண் 26722/2013 மற்றும் பல்வகை மனு எண் 1/2013-இன்மீது, 11.8.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் "பாதிக்கப்பட்ட நபர்கள் புகார் அளிக்கவும் மற்றும் தீர்வு நடவடிக்கைகளைத் தவறாது மேற்கொள்ளவும் மாநில அரசு வழிவகை செய்ய வேண்டும்" என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண் 26722/2013-இன்மீது 8.10.2014 அன்று

வழங்கப்பட்ட உத்தரவின்படி, அரசாணை (நிலை) எண் 540, வருவாய்த் (நி.மு6(2)) துறை, நாள் 4.12.2014 பிறப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில், பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களில் தெரிவிக்கப்படும் குறைகளை தீர்வு காண வட்ட, கோட்ட மற்றும் மாவட்ட நிலைகளில் மூன்று வெவ்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும் மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட வருவாய் நிர்வாகக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரால் கண்காணிக்கப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண். 4614/2015-இன்மீது 31.3.2015 அன்று வழங்கிய தீர்ப்புரையில், அரசின் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை, தமிழ்நாடு நீர்நிலைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007-இன்கீழ் அரசின் இதர புறம்போக்குகளில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பாக நடைமுறையில் இருப்பதுபோல, நீர்நிலைப் புறம்போக்குகளைக் கையாள்வதிலும் செயல்திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டுமென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறை/ நீர்வள ஆதாரத் துறை அலுவலர்களையும் மேற்படி குழுக்களில் உறுப்பினர்களாகச்

சேர்த்து, அரசாணை (நிலை)எண் 148, வருவாய்த் (நி.மு.6(2))துறை, நாள் 24.03.2016 வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.12821/2015 நாள் 19.6.2015-இல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905 மிகவும் பழமையானது என்றும், 110 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது என்றும், தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சிக்கலான தன்மையைக் கருத்தில் கொண்டும், மீள ஆய்வு செய்ய வேண்டுமென்றும், விதிகள் பலப்படுத்தப்பட வேண்டுமென்றும், அதன்படி தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்திற்கான பொருத்தமான வரைவுத் திருத்தங்கள் கொண்டுவரப் பரிசீலனை செய்யத் தெரிவித்துள்ளது. அதன்படி, அரசாணை (நிலை) எண் 269, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 23.8.2017-இல், அரசு செயலாளர்கள் நிலையிலான குழு ஒன்று அமைக்க உத்தரவிடப்பட்டு, வருவாய்த் துறை செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சட்டத்துறை செயலர்கள் உறுப்பினர்களாகவும், நில நிருவாக ஆணையர் அவர்கள் ஒருங்கிணைப்பாளர்/ உறுப்பினர்-செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்திற்கான வரைவுத் திருத்தங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 3.12 நில எடுப்பு

பொது நோக்கத்திற்காக, மத்திய, மாநில அரசுகளின் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு, வேண்டுகோளின்பேரில், தனியார் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. 31.12.2013 வரை, மத்திய நில எடுப்புச் சட்டம், 1894 (மத்தியச் சட்டம் 1/ 1894)-இன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இச்சட்டத்தைத் தவிர, மாநில அரசு, சமூகத்தில் பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு வீட்டுமனை மற்றும் பிற தேவைகளுக்கு நிலம் வழங்கவும், மேலும் தொழிற்சாலைகள் மற்றும் நெடுஞ்சாலை உட்கட்டமைப்பிற்காகவும், பின்வரும் மூன்று நில எடுப்புச் சட்டங்களை நிறைவேற்றியுள்ளது :-

1. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடுஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31 / 1978),
2. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10 / 1999) மற்றும்
3. 2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம்(தமிழ்நாடு சட்டம் 34 / 2002)

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த, மத்திய நில எடுப்புச் சட்டம், 1894-ஐ இரத்து செய்து, புதிய நில எடுப்புச் சட்டமான “நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு

மறைவின்மை, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம், 2013 (மத்திய சட்டம் 30/ 2013 " (The Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013)-ஐ மத்திய அரசு இயற்றி உள்ளது. இச்சட்டம் 1.1.2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தப் புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு போன்றவை நிலம் கையகப்படுத்தும் நடைமுறையில் (Process) ஒருங்கிணைந்த பகுதியாகியுள்ளது.

மேற்கண்ட மாநில அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களின்கீழ், நில எடுப்பு நடவடிக்கையைத் தொடர்ந்திடும் வகையில், மாநில அரசு, புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு, தமிழ்நாடு திருத்தச் சட்டம், 1/2015-ஐ நிறைவேற்றியது. இத்திருத்தச் சட்டத்தின்கீழ், புதிய நில எடுப்புச் சட்டத்தில், 4-ஆம் அட்டவணையில் உள்ள 13 மத்திய நில எடுப்புச் சட்டங்கள், சரியீடு, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு பயன்கள் நீங்கலாக, புதிய சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதைப் போன்று, மேற்கண்ட மாநில அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களுக்கும் விலக்களிக்கும் வகையில், பிரிவு 105-ஏ சேர்க்கப்பட்டு, அதன்கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 5-ஆம் அட்டவணையில் இம்மாநிலச்

சட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இத்திருத்த மசோதாவுக்கு, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

நிலம் கையகப்படுத்துதல் நடைமுறைகளில் தற்போது உள்ள கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, அரசாணை எண். 23, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 19.3.2018-இல், கீழ்க்கண்டவற்றை அரசு சிறப்பு முயற்சியாக அறிவித்துள்ளது .

"பெரிய அளவிலான திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நிலப் பராதீனம் நடைமுறைகளை நெறிப்படுத்துதல் (நடைமுறையில் உள்ள சட்டரீதியான தேவைகளை உள்ளடக்கி, தற்போது உள்ள கால அளவை குறைக்கும் பொருட்டு)".

இது தொடர்பாக, பல்வேறு மையப்பொருள் தொடர்பான பரிந்துரைகளை வழங்க பணிக்குழு அமைக்கப்பட்டு, அப்பணிக் குழுவினால், அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

ஏற்கனவே மத்திய நில எடுப்புச் சட்டம், 1894-இன்கீழ் நடவடிக்கை தொடரப்பட்ட இனங்களில், மத்திய நில எடுப்புச் சட்டம், 1894-இன்கீழ் இடைக்கால சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கிடவும், புதிய மத்திய நில எடுப்புச் சட்டத்தின்கீழ்,

கூடுதல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கிட உரிய வழிமுறைகள், அரசாணை (நிலை) எண் 88, வருவாய்த் துறை, நாள் 21.2.2014-இல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மாநில அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களின்கீழ் நில எடுப்பு தொடரப்பட்ட இனங்களிலும், இதேபோல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்ய, சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையால் ஆணைகள் வெளியிடப்பட்டு, மாநில அரசு விதிகள் முடிவு செய்யும் வரை இடைக்கால சரியீடு வழங்கப்பட்டு வந்தது.

நிலம் கையகப்படுத்துவதில், நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டத்தினை (**RFCTLARR Act, 2013**) அமல்படுத்துவதற்கு ஏதுவாக, இச்சட்டத்திற்கான மாநில அரசின் விதிகள் இயற்றப்பட்டு, தமிழக அரசின் அரசாணை (நிலை) எண் 298, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 20.9.2017-இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய நில எடுப்புச் சட்டம், 2013, அட்டவணை 1-இல் குறிப்பிட்டுள்ளபடி, நில மதிப்பிற்கான பெருக்கல் காரணி (Multiplier Factor) நிர்ணயம் செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 300, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 20.9.2017-இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தமிழ்நாடு மாநில விதிகள், 2017

மற்றும் பெருக்கல் காரணிகள் (Multiplier Factor) குறித்த அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழ் எண் 300, நாள் 21.9.2017-இல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ்நாடு அரசு விதிகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பெருக்கல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு அரசால், அரசாணை (நிலை) எண் 13, தொழில் (சிப்காட்-நி.எ.) துறை, நாள் 21.2.2018 மற்றும் அரசாணை (நிலை) எண் 27, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 5.3.2018-இல் பிறப்பிக்கப்பட்டு, இடைக்கால சரியீடு வழங்கப்பட்ட இனங்களுக்கு, தற்பொழுது முழுமையான சரியீடு கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பொதுக் காரியங்களுக்காக, தனியார் நிலங்களை நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் அரசு விரைவாகக் கையகம் செய்வதற்கு, ஏற்கனவே இருந்த அரசாணை (நிலை) எண் 103, வருவாய்த் (நி.எ.1 (1)) துறை, நாள் 28.2.2011-இல் நிர்ணயிக்கப்பட்ட நிதி வரம்பினை, புதிய நில எடுப்புச் சட்டத்தின்படியான சரியீட்டிற்கு ஈடாகப் பெறும் வகையில் உயர்த்தி, அரசாணை (நிலை) எண் 281, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நி.எ.1 (1)) துறை, நாள் 7.9.2017-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளன.உயர்த்தி வழங்கப்பட்டுள்ள நிதி வரம்பின் விவரம் கீழ்க்கண்டவாறு :-

| அரசாணை (நிலை) எண். 103, வருவாய்த் [நி.எ.1(1)] துறை, நாள் 28.2.2011 | | | அரசாணை (நிலை) எண். 281, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 7.9.2017 | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்ட அளவிலான நேரடி பேச்சு வார்த்தை குழு | மாநில அளவிலான நேரடி பேச்சு வார்த்தை குழு | அரசு | | மாவட்ட அளவிலான நேரடி பேச்சு வார்த்தை குழு | மாநில அளவிலான நேரடி பேச்சு வார்த்தை குழு | அரசு |
| ச.ம. / வ.ம. எது குறைவோ அதன் 150% நில மதிப்பு ரூ.1.00 கோடிக்கு மிகாமல் | ச.ம. / வ.ம. எது குறைவோ அதன் 150% நில மதிப்பு ரூ.1.00 கோடிக்கு மிகாமல் | ச.ம. / வ.ம. எது குறைவோ அதன் 150% மேல் | நகர்ப்புறம் | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 225% நில மதிப்பு ரூ.2.00 கோடிக்கு மிகாமல் | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 225% நில மதிப்பு ரூ.2.00 கோடிக்கு மேல் | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 225% க்கு மேல் |
| | | | கிராமப்புறம் நகர்ப்புற எல்லையில் இருந்து 30 கி.மீ. வரை | நில மதிப்பு ரூ.2.00 கோடிக்கு மிகாமல் ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 275% | நில மதிப்பு ரூ.2.00 கோடிக்கு மேல் ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 275% | ச.ம / வ.ம.எது அதிகமோ அதன் 275% மேல் |
| | | | நகர்ப்புற எல்லையில் இருந்து 30 கி.மீ. முதல் 50 கி.மீ. வரை | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 325% | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 325% | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 325% மேல் |
| | | | நகர்ப்புற எல்லையில் இருந்து 50 கி.மீ. மேல் | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 425% | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 425% | ச.ம / வ.ம. எது அதிகமோ அதன் 425% மேல் |

ச.ம . – சந்தை மதிப்பு / வ.ம. வழிகாட்டி மதிப்பு

இதன்படி, நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்யப்படும் நேர்வுகளில் சரியீடு வழங்கப்பட்டு வருகிறது.

## 3.13 சிறுபாசனப் புள்ளி விவரப் பகுத்தாய்வு (RMIS)

சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன், மத்திய அரசின் நிதியுதவியுடன், சிறுபாசனப் பிரிவின் விரிவான தகவல்களை ஒருங்கிணைக்க, சிறுபாசனப் புள்ளி விவரப் பகுத்தாய்வுத் திட்டம் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டத்தினை நடத்துவதற்கு, நில நிருவாக ஆணையர் மாநில சிறுபாசனக் கணக்கெடுப்பு ஆணையராகச் செயல்படுகிறார்.

சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது:-

1. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, சிறுபாசனக் கணக்கெடுப்பு நடத்தி, அதன்மூலம் தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சிறுபாசனத் திட்டங்களையும் கணக்கெடுத்தல்.

2. சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரத் தொகுப்பினைப் பகுத்தாய்வு செய்து, காலாண்டு மற்றும் ஆண்டறிக்கைகள் தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்புதல்.

### 3.13.1 ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு

5-வது சிறுபாசனக் கணக்கெடுப்பு, 2013-14-ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு கணக்கெடுக்கப்பட்டு முடிவடைந்துள்ளது.

**அட்டவணை 3.6**

**5-வது சிறுபாசனக் கணக்கெடுப்பு முடிவுகள் பின்வருமாறு:-**

**(மேற்கோள் ஆண்டு 2013-14)**

| வ. எண் | திட்டத்தின் வகை | | திட்டங்களின் எண்ணிக்கை | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | நிலத்தடி நீர்த்திட்டம் | தோண்டப்பட்ட கிணறு | 15,82,718 | 76.37 |
| | | ஆழம் குறைவான கிணறு | 1,45,248 | 7.01 |
| | | நடுத்தர குழாய் கிணறு | 73,622 | 3.55 |
| | | ஆழ்துளைக் குழாய் கிணறு | 2,23,978 | 10.81 |
| 2 | மேற்பரப்பு நீர்ப்பாசனத் திட்டம் | மேற்பரப்பு நீர்ப்பாசனத் திட்டம் | 44,772 | 2.16 |
| | | நீரேற்று பாசனத் திட்டம் | 2,179 | 0.10 |
| | | **மொத்தம்** | 20,72,517 | 100.00 |

## 6-வது சிறுபாசன கணக்கெடுப்பு மற்றும் நீர்நிலைகள் கணக்கெடுப்பு (மேற்கோள் ஆண்டு 2017-2018)

தற்பொழுது, 6-வது சிறுபாசனக் கணக்கெடுப்புப் பணியானது, 2017-2018-ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு நடத்தப்படுகிறது. அதனுடன் முதன் முதலாக நீர் நிலைகளின் கணக்கெடுப்பும் சேர்த்து நடத்தப்படுகிறது. இந்தக் கணக்கெடுப்பில், கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள அனைத்து நீர்நிலைகளும், அவை எவ்வித உபயோகமாக இருந்தாலும் கணக்கெடுக்கப்படுகின்றன. இக்கணக்கெடுப்பின் மூலமாக, நீர்நிலைகள் குறித்த விரிவான தரவுகள் கைப்பேசிச் செயலி மூலம் சேகரிக்கப்பட்டு, அவை வலுவான திட்டமிடலுக்கும், கொள்கைகளை வரையறை செய்வதற்கும் உதவியாக அமையும். மாநிலம் முழுவதும் அனைத்து மேற்பார்வையாளர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, தற்போது களப்பணி மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது.

## 4. நிலச்சீர்திருத்தம்

நிலச்சீர்திருத்தத் துறையால் விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்புச் சட்டம், குத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச்சட்டம், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்கும் அவர்களது குடும்ப நபர்களுக்கும் முழுமையான சமூக பாதுகாப்பு வழங்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வேளாண்மை வருமான வரி தொடர்பான எஞ்சிய பணிகள் முதலியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பூமிதான சட்டமும் 2006 முதல் ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.1 நிருவாகக் கட்டமைப்பு

நிலச்சீர்திருத்த ஆணையர், ஆணையரகத்தின் தலைவராகவும், அவருக்கு உதவியாக தலைமையிடத்தில், நிலச்சீர்திருத்த இயக்குநர், இணை இயக்குநர், உதவி ஆணையர்கள் மற்றும் நிதி ஆலோசகர்/ முதன்மைக் கணக்கு அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை எளிதில் அணுகி பயன்பெறும் வகையில், 2015-ஆம் ஆண்டில், நிலச்சீர்திருத்தத் துறை அரசால் மறுசீரமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் மூலம் மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளில் செயல்பட்டு வந்த 6 நிலச்சீர்திருத்த உதவி ஆணையர்கள் அலுவலகங்களுக்குப் பதிலாக, சென்னை நீங்கலாக 31 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் ஒரு நிலச்சீர்திருத்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இத்துறை மறுசீரமைக்கப்பட்டதின் படி, நிலச்சீர்திருத்தச் சட்டம் மற்றும் விதிகளில் உள்ள அதிகாரங்களின் அடிப்படையில் "அதிகாரம் பெற்ற அலுவலர்" மற்றும் "ஒப்படை வழங்கும் அலுவலர்" அதிகாரங்கள் சார் ஆட்சியர்/ வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மாவட்ட அளவில், பணி முன்னேற்றம், நிருவாக ரீதியில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் நிலச்சீர்திருத்தப் பிரிவு பணியாளர்களின் உதவியோடு மாவட்ட ஆட்சியரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், மாவட்டங்களில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வேளாண்மை வருமான வரி சம்மந்தமான பணிகள் மற்றும் பூமிதான சட்டம் ஆகியவை மாவட்ட நிருவாகம் மூலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் தனித்துணை ஆட்சியர்கள் (துணை ஆட்சியர்) தலைமையில் 10 வருவாய் நீதிமன்றங்கள் பல்வேறு குத்தகைச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

நிலச்சீர்திருத்தத் துறைக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு :-

**அட்டவணை – 4.1**

**நிலச்சீர்திருத்தத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள்**

| வ. எண் | பணியிடங்கள் வகை | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிலச்சீர்திருத்த ஆணையர் | 1 |
| 2. | நிலச்சீர்திருத்த இயக்குநர் | 1 |
| 3. | இணை இயக்குநர் | 1 |
| 4. | நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் | 1 |
| 5. | உதவி ஆணையர்கள் / துணை ஆட்சியர்கள்/ தனித்துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) உட்பட | 13 |
| 6. | கண்காணிப்பாளர்கள் / துணை வட்டாட்சியர்கள் | 21 |
| 7. | நிரலர் (Programmer) | 1 |
| 8. | உதவி நிரலர் (Assistant Programmer) | 1 |
| 9. | உதவியாளர், உதவியாளர் நிலை தனி வருவாய் ஆய்வாளர்கள் | 43 |
| 10. | சுருக்கெழுத்து தட்டச்சர் / தட்டச்சர் | 35 |
| 11. | இளநிலை உதவியாளர் | 21 |
| 12. | இதர பணியாளர்கள் | 75 |
| | **மொத்தம்** | **214** |

## 4.2 நில உச்சவரம்பு கொள்கை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நிலங்கள் ஒரு முக்கிய ஆதாரமாகும். தமிழ்நாடு நிலச்சீர்திருத்த

(நிலஉச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961 (தமிழ்நாடு சட்டம் 58/1961) மற்றும் திருத்தச் சட்டங்கள், விவசாய நிலங்கள் சிலரது வசம் மட்டுமே இருப்பதன் மூலம், விவசாய நில உடைமைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் வகையில், விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை கையகப்படுத்தி, அதனை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து வழங்கும் பொருட்டு இயற்றப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.2.1 நடைமுறையில் உள்ள உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், 1961 மற்றும் திருத்தச் சட்டத்தின்படி 15.2.1970 முதல் நிலஉச்சவரம்பு கீழ்க்கண்டவாறு நடைமுறையில் உள்ளது:-

**அட்டவணை – 4.2**
**நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ள உச்சவரம்பு**

| வ. எண் | வகைபாடு | அனுமதிக் கப்பட்ட பரப்பு |
|---|---|---|
| (i) | தனிநபர், நிறுவனம், சங்கம், தனியார் அறக்கட்டளை, கம்பெனி | 15 தர ஏக்கர் |
| (ii) | 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம்<br>(ஐந்து நபருக்கு மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் 5 தர ஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது)<br>ஒரு குடும்பத்திற்கான அதிகபட்ச உச்சவரம்பு | 15 தர ஏக்கர்<br><br>30 தர ஏக்கர் |
| (iii) | ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் 15.2.1970 அன்று நிலங்கள் அவபது பெயரில் இருந்தால் சீதனமாக அனுமதிக்கப்படும் பரப்பு | 10 தர ஏக்கர் |
| (iv) | 1.3.1972 தேதியில் இருந்த மதசார்பான பொது அறக்கட்டளை (Public Trust of Religious nature) | சட்டத்திற்குள் வராது |

| வ. எண் | வகைபாடு | அனுமதிக் கப்பட்ட பரப்பு |
|---|---|---|
| (v) | 1.3.1972 தேதியில் இருந்த தர்ம ஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature) | 5 தரஏக்கர் |
| (vi) | 1.3.1972 தேதிக்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட பொது அறக்கட்டளைகளுக்கான உச்சவரம்பு (ஆனால் திருத்தப்பட்ட 29/87 சட்டத்தின்படி ஒரு பொது அறக்கட்டளை கல்வி மற்றும் மருத்துவமனைப் பயன்பாட்டிற்கு நிலங்கள் வைத்துக் கொள்ள அரசால் அனுமதிக்கப்படுகிறது) | இல்லை |

இதுவரையில், 2,08,657 ஏக்கர் நிலங்கள் உபரியாக அறிவிக்கப்பட்டு, 1,90,722 ஏக்கர் நிலங்கள் 1,51,044 பயனாளிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

### 4.2.2 தர ஏக்கர்

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 3 (40) –இன்படி தர ஏக்கர் என்பது சம்பந்தப்பட்ட புன்செய்/ நன்செய் நிலத்தீர்வையினை (Assessment) அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது:-

**அட்டவணை 4.3**

**சாதாரண ஏக்கரிலிருந்து தர ஏக்கராக கணக்கீடு செய்தல்**

**புன்செய் நிலத்திற்கு**

| தீர்வை (Assessment) ஏக்கருக்கு | சாதாரண ஏக்கர் | தர ஏக்கர் |
|---|---|---|
| ரூ.1.25க்கு கீழ் | 4.00 | 1 |
| ரூ.1.25 - 2.00 | 3.00 | 1 |
| ரூ.2.00-க்கு மேல் | 2.50 | 1 |

**நன்செய் நிலத்திற்கு**

| தீர்வை (Assessment) ஏக்கருக்கு | சாதாரண ஏக்கர் | தர ஏக்கர் |
|---|---|---|
| ரூ.4.00-க்கு கீழ் | 2.00 | 1 |
| ரூ.4.00 - 6.00 | 1.75 | 1 |
| ரூ.6.00 - 8.00 | 1.60 | 1 |
| ரூ.8.00 – 10.00 | 1.20 | 1 |
| ரூ.10.00 – 15.00 | 1.00 | 1 |
| ரூ.15.00-க்கு மேல் | 0.80 | 1 |

### 4.2.3 தொழில்/ வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-A மற்றும் விதிகளின்படி, அரசு தொழில் அல்லது வணிக நிறுவனங்கள், 15.000 தர ஏக்கர் உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள நிலங்களை, தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காக வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. திருத்திய சட்டம் 2018-இன்படி, ரூபாய் 20 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் புஞ்சை நிலம் மட்டும் வைத்திருக்கும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உச்சவரம்பு 30.000 தர ஏக்கராக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய

நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

2011-ஆம் ஆண்டு முதல் 31.3.2019 வரை தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வேளாண் சார்ந்த தொழில், ஆட்டோமொபைல், சூரிய மின் சக்தி, காற்றாலை மற்றும் பலவற்றுக்காக தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-A இன் கீழ் 6388 ஏக்கர் நிலங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.4 பொது அறக்கட்டளைக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-B மற்றும் விதிகளின்படி, பொது அறக்கட்டளைகள், கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.

இதற்கு, பொது அறக்கட்டளைகள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

2011-ஆம் ஆண்டு முதல் 31.3.2019 வரை மொத்தம் 39 பொது அறக்கட்டளைகளுக்கு 760.38 ஏக்கர் நிலங்கள் கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 4.3 வருவாய் நீதிமன்றங்கள்

நில உடைமையாளருக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை, குத்தகைச் சட்டங்களின் கீழ் முடிவு செய்வதற்காக, மாநிலத்தில் முன்பு 6 வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன. நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 2012-2013-ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 4 கூடுதல் வருவாய் நீதிமன்றங்கள் தோற்றுவிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, புதிதாக 4 வருவாய் நீதிமன்றங்கள் திருநெல்வேலி, நாகப்பட்டினம், லால்குடி, மன்னார்குடி ஆகிய இடங்களில் 2013-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டன.

மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், தற்போது மாநிலத்தில் கீழ்க்கண்ட பத்து வருவாய் நீதிமன்றங்கள் நீதிமுறைச் சார்புடைய அதிகாரத்துடன் தனித்துணை ஆட்சியர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன:-

| | | | |
|---|---|---|---|
| 1. | கடலூர் | 6. | திருச்சிராப்பள்ளி |
| 2. | மயிலாடுதுறை | 7. | லால்குடி |
| 3. | திருவாரூர் | 8. | நாகப்பட்டினம் |
| 4. | தஞ்சாவூர் | 9. | மதுரை |
| 5. | மன்னார்குடி | 10. | திருநெல்வேலி |

### 4.3.1 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

**1.6.2011 முதல் 31.3.2019 வரை**

| | | |
|---|---|---|
| 1. | 31.5.2011 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள் | 9,806 |
| 2. | 1.6.2011 முதல் 31.3.2019 வரை வரப்பெற்ற வழக்குகள் | 43,520 |
| 3. | முடிவு செய்யப்பட்டவை | 51,338 |
| 4. | 31.3.2019 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள் | 1,988 |

**1.4.2018 முதல் 31.3.2019 வரை**

| | | |
|---|---|---|
| 1. | 31.3.2018 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள் | 2,915 |
| 2. | 1.4.2018 முதல் 31.3.2019 வரை வரப்பெற்ற வழக்குகள் | 3,988 |
| 3. | முடிவு செய்யப்பட்டவை | 4,915 |
| 4. | 31.3.2019 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள் | 1,988 |

வருவாய் நீதிமன்றப் பணிகள், கணினிமயமாக்கப்பட்டு முன்னேற்ற அறிக்கைகள் இணைய தளம் மூலம் பெறப்பட்டு தலைமையகத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**4.3.2 குத்தகைச் சட்டங்கள்**

**கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-**

(i) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)**

நில உடமையாளருக்கு குத்தகைத் தொகைக் கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத பிற காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

(ii) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)**

இச்சட்டம் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நில உரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட

வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ அல்லது விளை பொருளாகவோ செலுத்தலாம். பயிரிடும் குத்தகைதாரர்கள் பயிரிடுவதற்கான செலவுகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நில உரிமையாளர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் பொறுப்பாவார்கள்.

(iii) **தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)**

தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின்படி, பொது அறக்கட்டளைகளின் நிருவாகத்தினை வரைமுறைப்படுத்தி வேளாண் நிலங்களை சொந்த சாகுபடி செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு, அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை பிறருக்கு குத்தகைக்குவிட வேண்டும். இச்சட்டம் பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன்முறைப்படுத்தவும், அவர்களிடையே ஏற்படும் தகராறுகளை வருவாய் நீதிமன்றங்கள் மூலம் தீர்வு செய்யவும் வழிவகை செய்கிறது.

(iv) **தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தில், பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன் மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ், வட்டாட்சியர் குத்தகை உரிமையினைப் பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார்.

(v) **தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 திருத்தியவாறு**

இச்சட்டத்தில், குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, 1.4.1990 தேதியில் அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 4.3.3 விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தல்

மாநிலம் முழுவதும் (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் தவிர) விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறு விவசாயப் பணிகளுக்காக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய குறைந்தபட்ச ஊதியச்சட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டு

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்கீழ் குறைந்தபட்ச ஊதியம் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்படுகிறது.

நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4.4 பூமிதான வாரியம்**

ஸ்ரீ ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்ட பூமிதான இயக்கத்திற்கு நிலங்கள் தானமாகப் பெறப்பட்டன. அவ்வாறு தானமாகப் பெறப்பட்ட நிலங்கள் "தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம், 1958" (Tamil Nadu Bhoodan Yagna Act, 1958) மற்றும் "தமிழ்நாடு பூமிதான யக்ஞ விதிகள், 1959" (Tamil Nadu Bhoodan Yagna Rules, 1959) - இன்படி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பூமிதான நிலங்கள் பூமிதான வாரியத்தின் மூலம் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு, 28,050 ஏக்கர் நிலங்கள் பூமிதான வாரியத்திற்கு தானமாக பெறப்பட்டுள்ளன.

நிலச்சீர்திருத்தத்துறை மறுசீரமைப்பு செய்யப்பட்ட பிறகு, இதுவரை பட்டா மாற்றம் செய்யப்படாமல் இருந்த 1439.84 ஏக்கர்

நிலங்கள் பூமிதான வாரியத்தின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 88.59 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

மாவட்டங்களிலிருந்து பூமிதான பணிகளின் முன்னேற்ற அறிக்கை இணையதளம் மூலம் பெறப்பட்டு தலைமையிடத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பூமிதான நிலங்களின் முறைகேடான விற்பனையை தடுத்து பூமிதான நிலங்களை பாதுகாக்கும் பொருட்டு, பதிவுத்துறை புள்ளி விவரங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, பூமிதான நிலங்களின் வழிகாட்டி மதிப்பு '0' (பூஜ்யம்) ஆக மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் பூமிதான நிலங்களின் முறைகேடான விற்பனை நூறு சதவீதம் தடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதல்முறையாக இத்தகைய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.5 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், 2011

- விவசாயிகள் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் பொருட்டு, முதலமைச்சரின்

உழவர் பாதுகாப்புத் திட்டம் 10.9.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின் கீழ் கிராம அளவில் உறுப்பினர்களைக் கணக்கெடுக்கும் பணி கிராம நிருவாக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு, கணக்கெடுப்புப் பதிவேடுகள் கிராம நிருவாக அலுவலர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**4.5.1 தகுதிகள்**

18 வயது முதல் 65 வயது வரையுள்ள விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள், 2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5.00 ஏக்கர் புன்செய் அளவிற்குட்பட்ட நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அதில் நேரடியாக பயிர் செய்யும் குறு/ சிறு விவசாயிகள் மற்றும் பயிரிடு குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின் கீழ் மூல உறுப்பினர்களாகவும், அவர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்கள் சார்ந்து வாழும் உறுப்பினர்களாகவும் பதிவு செய்யப்படுவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:-

**அட்டவணை-4.4**

**மூலஉறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | மூல உறுப்பினர்கள் | 1,47,11,782 |
| 2. | சார்ந்து வாழும் உறுப்பினர்கள் | 1,35,66,785 |
| | மொத்தம் | 2,82,78,567 |

- இத்திட்டத்தின் கீழ் தகுதியின் அடிப்படையில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும், இறப்பு போன்ற காரணங்களுக்காக நீக்குதலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- இரட்டைப் பதிவினை தவிர்க்கும் பொருட்டு, உறுப்பினர்களின் விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டு, ஆதார் எண்களுடன் இணைக்கும் பணி தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் நடைபெற்று வருகிறது. மேலும், புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல் மற்றும் நிதியுதவி வழங்குதல் ஆகிய சேவைகளை, பொது சேவை மையத்தின் மூலம் வழங்குவதற்கான பணிகள் தமிழ் நாடு மின் ஆளுமை முகமை மற்றும் தேசிய தகவல் மையம் மூலம் நடைபெற்று வருகிறது.
- இத்திட்டத்தின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிப்பட்டு வருகிறது.

**4.5.2 நிதி உதவி**

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:-

## அட்டவணை – 4.5

## மூல உறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளின் விவரம்

| மூல உறுப்பினர்களுக்காக | சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக |
|---|---|
| 1. திருமண உதவித்தொகை | 1. கல்வி உதவித்தொகை |
| 2. முதியோர் ஓய்வூதியம் | 2. திருமண உதவித்தொகை |
| 3. உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி | 3. எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித்தொகை. |
| i. காசநோய் | 4. ஈமச்சடங்கு செலவு |
| ii. புற்றுநோய் | |
| iii. எச்.ஐ.வி / எய்ட்ஸ் | |
| iv. இடைச்சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis) | |
| v. கை, கால் முறிவு மற்றும் நிலைகுலைவு | |
| vi. நரம்பு சம்பந்தமான நோய் | |
| vii. முதுகு தண்டுவடம் பாதிப்பு | |
| viii. இதய நோய் | |
| ix. பார்வை இழத்தல் | |
| x. கல்லீரல் நோய் | |
| xi. சிறுநீரக நோய் | |
| xii. மனநிலைபாதிப்பு | |
| xiii. அரிவாள் செல் ரத்த சோகை | |
| xiv. ரத்த அழிவு சோகை | |
| xv. ரத்த உறையா நோய் | |
| 4. விபத்து நிவாரணம் | |
| 5. இயற்கை மரண உதவித்தொகை | |
| 6. ஈமச் சடங்கு செலவு | |

### 4.5.3 இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- அரசின் வேறு எந்த திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெற்றிருந்தாலும், கல்விக்கான உதவித் தொகை இத்திட்டத்தின் கீழும் பெறலாம்.
- காசநோய், புற்றுநோய் முதலிய கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மூல உறுப்பினர்களுக்கு தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது.
- எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியடையும் வரை மாத உதவித் தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது.
- மூல உறுப்பினரின் இறப்புக்குப் பின்னரும் அவரைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான கல்வி மற்றும் திருமண உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- 24.4.2017 முதல் இயற்கை மரணத்திற்கான நிவாரணத் தொகை ரூ.10,000/- லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
- உறுப்பினர் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர் இறப்பின், ஈமச் சடங்குக்கான உதவித் தொகை ரூ.2,500/- இறப்புச் சான்றிதழை சமர்ப்பிக்க வலியுறுத்தாமலேயே வழங்கப்படுகிறது.

4.5.4 **உதவித் தொகை மற்றும் செலவு விவரம்**

**அ) மூல உறுப்பினர்களுக்காக**

(1) **திருமண உதவி**

மூல உறுப்பினரின் திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ.8,000/-மும் பெண்களுக்கு ரூ.10,000/-மும் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 10.9.2011 முதல் 31.3.2019 வரை 45,561 பயனாளிகளுக்கு ரூ.38.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019-ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 6,961 பயனாளிகளுக்கு ரூ.5.88 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(2) **முதியோர் ஓய்வூதியம்**

60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக மாதம் ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

(3) **தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை**

காசநோய், புற்றுநோய் போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள மூல உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

2012-13 முதல் 31.3.2019 வரை 1,98,285 பயனாளிகளுக்கு ரூ.149.72 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-19 -ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 39,886 பயனாளிகளுக்கு ரூ.41.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(4) விபத்து நிவாரணம்**

விபத்தினால் உயிரிழந்த மூல உறுப்பினர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி மூலம் துயர்துடைக்கும் வகையில் விபத்து நிவாரணமாக ரூ.1,00,000/-மும், ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.2,500/-ம் வழங்கப்படுகிறது. மேலும், விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு விபத்து நிவாரணம் வழங்கப்படுகிறது:-

**அட்டவணை- 4.6**

**விபத்து காயங்களுக்கான உதவி**

| வ. எண் | காயங்களின் விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| (i) | இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் இழத்தல் | 1,00,000 |
| (ii) | ஒரு கை மற்றும் ஒரு கால் இழத்தல் | |
| (iii) | இரண்டு கண்களிலும் பார்வை முழுவதுமாக இழத்தல் | |
| (iv) | ஒரு கை அல்லது ஒரு கால் இழத்தல் | 50,000 |
| (v) | பக்கவாதம் | 50,000 |
| (vi) | மேலே குறிப்பிட்ட உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல் | 20,000 |

10.9.2011 முதல் 31.3.2019 வரை 25,825 பயனாளிகளுக்கு ரூ.254.55 கோடி விபத்து நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

2018-2019-ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை, 2,883 பயனாளிகளுக்கு ரூ.28.82 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(5) இயற்கை மரணத்திற்கான உதவி**

மூல உறுப்பினர் இயற்கையாக மரணமடைந்தால், அவரது குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ.20,000/- மற்றும் ஈமச் சடங்கு செலவுக்காக ரூ.2,500/- வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை 24.4.2017 முதல் ரூ.10,000/- லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

10.9.2011 முதல் 31.3.2019 வரை 3,92,811 பயனாளிகளுக்கு ரூ.542.07 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019-ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 54,736 பயனாளிகளுக்கு ரூ.114.47 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக**

**(1) கல்வி உதவி**

இத்திட்டத்தின் கீழ், மூல உறுப்பிரைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களின் உயர் கல்வியினை தொடரும் பொருட்டு கீழ்க்கண்டவாறு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது:-

## அட்டவணை- 4.7

## கல்வி உதவித் தொகை

| வ. எண். | கல்வி விவரம் | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்குவோர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் (ரூ) | பெண் (ரூ) | ஆண் (ரூ) | பெண் (ரூ) |
| 1. | தொழிற் பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 2. | கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 3. | இளங்கலைப் பட்டப்படிப்பு (Bachelor Degree ) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing)(ஆண்டொன்றுக்கு) | 1750 | 2250 | 2000 | 2500 |
| 4. | முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு, (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 3250 | 3750 |
| 5. | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses)(ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 4250 | 4750 |
| 6. | முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 4250 | 4750 | 6250 | 6750 |

இந்த உதவித்தொகை ஆண்டுதோறும் படிப்பினை முடிக்கும் வரை வழங்கப்படுகிறது. படிப்பு இடைநிறுத்தப்பட்டால் இவ்வுதவித் தொகை நிறுத்தப்படும்.

10.9.2011 முதல் 31.3.2019 வரை 17,29,460 மாணவ மாணவிகளுக்கு ரூ.417.51 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 1,97,510 மாணவ மாணவிகளுக்கு ரூ.49.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(2) திருமண உதவி**

இத்திட்டத்தின் கீழ், மூல உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களின் திருமணத்திற்காக ஆண்களுக்கு ரூ.8000/-மும் பெண்களுக்கு ரூ.10,000/- வழங்கப்படுகிறது.

10.09.2011 முதல் 31.3.2019 வரை 3,44,035 பயனாளிகளுக்கு ரூ.299.47 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 32,109 பயனாளிகளுக்கு ரூ.27.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(3) எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித்தொகை**

மூல உறுப்பினர் எச்.ஐ.வி/ எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு, பெற்றோரை (ஒருவர்/ இருவரையும்) இழந்த

0-18 வயது வரை உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாதம் ரூ.1,000/- வழங்கப்படுகிறது.

2013-2014 முதல் 31.3.2019 வரை 5,105 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.4.28 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் 1.4.2018 முதல் 31.3.2019 வரை 727 பயனாளிகளுக்கு ரூ.0.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 4.5.5 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் நிதியுதவி

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு மூல உறுப்பினருக்கு திருமணம், தற்காலிக உடல் திறனற்ற காலம், முதியோர் ஓய்வூதியம், விபத்து அல்லது இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவு ஆகியவற்றுக்காக அவரது குடும்பத்திற்கு மொத்தம் ரூ. 32,500 முதல் ரூ. 1,14,500 வரை நிதியுதவி கிடைக்க வழிவகை உள்ளது.

மேலும், மூல உறுப்பினரைச் சார்ந்து வாழும் உறுப்பினருக்கு கல்வி, திருமணம், ஈமச்சடங்கு செலவு ஆகியவற்றுக்காக அவரது குடும்பத்திற்கு மொத்தம் ரூ.11,750 முதல் ரூ. 19,250 வரை நிதியுதவி கிடைக்க வழிவகை உள்ளது.

### 4.5.6 செயலாக்கம் (Performance)

1. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 10.9.2011 முதல் 31.3.2019 வரை 27,41,082 பயனாளிகளுக்கு ரூ. 1706.05 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2. 2018-2019 ஆம் ஆண்டில் (31.3.2019 வரை) 3,34,812 பயனாளிகளுக்கு ரூ.268.65 கோடி கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:-


**அட்டவணை - 4.8**

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2018-2019 ம் ஆண்டில் (31.3.2019 வரை) வழங்கப்பட்ட உதவி விவரம்**

| வ. எண் | உதவி விவரம் | தொகை (கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கல்வி | 49.17 | 1,97,510 |
| 2. | உறுப்பினர்களின் திருமணம் | 5.88 | 6,961 |
| 3. | உறுப்பினரைச் சார்ந்தவர்களின் திருமணம் | 27.46 | 32,109 |
| 4. | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 114.47 | 54,736 |
| 5. | விபத்து நிவாரணம் | 28.82 | 2,883 |
| 6. | தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை | 41.99 | 39,886 |
| 7. | எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மாதாந்திர உதவித் தொகை | 0.86 | 727 |
| | **மொத்தம்** | **268.65** | **3,34,812** |


**வரைபடம் 4.1**

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011-ன் கீழ் 2011-12 முதல் 2018-19 (31.3.2019 வரை) பயனாளிகளின் வகைப்பாட்டினை காட்டும் விளக்கப்படம்**




**வரைபடம் 4.2**

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011-ன் கீழ் 2011 – 12 முதல் 2018 – 19 (31.3.2019 வரை) பயனாளிகளின் வகைப்பாட்டினை காட்டும் விளக்கப்படம்**



## 5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி துறையின் நோக்கங்கள்

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறையானது (i) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 / நீக்கறவுச் சட்டம், 1999 மற்றும் (ii) தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச்சட்டம், 1966/ திருத்தச்சட்டம், 1991 ஆகிய இரு சட்டக்கூறுகளின் அடிப்படையில் இயங்கி வருகிறது. இவ்விரு சட்டங்களுள் முதலாவதாக கூறப்பட்டுள்ள முதன்மைச்சட்டம், தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999-இன்படி 16.06.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டுவிட்டது; இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள சட்டம் இன்றளவும் நடைமுறையில் இருந்து வருகிறது.

மேற்கூறப்பட்டுள்ள இரு சட்டங்களின் முக்கிய நோக்கங்களாவன: -

(i) அனைத்து நகர்ப்புற நிலங்களையும் வரிவிதிப்புக்குட்படுத்துதல் மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவது, மற்றும்

(ii) நகர்ப்புற நிலங்கள் மிகச் சில நபர்கள் கைவசம் மட்டுமே குவிந்துக் கிடப்பதையும், அந்நபர்கள் இலாபம் ஈட்டும்

நோக்குடன் செயல்படுவதையும் தடுத்து, அனைவருக்கும் சமமான முறையில் நிலப்பங்கீடு செய்து கொடுப்பது.

## 5.1 நிர்வாக அமைப்பு

1980-ஆம் ஆண்டு வருவாய் வாரியம் கலைக்கப்பட்டது முதல் மாநிலத்தின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் இயங்கி வரும் 5 துறைத் தலைமை அலுவலகங்களுள் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகமும் ஒன்றாகும்.

இவ்வாணையரகம் தற்போது முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இவ்வாணையரகத்தில் தலைமையிடத்து உதவி ஆணையர் உட்பட 8 உதவி ஆணையர்கள் பணியாற்றி வருகின்றனர். தலைமையிடத்து உதவி ஆணையர் ஆணையரகத்தில் துறைத் தலைவரின் கீழ் இரண்டாம் நிலை அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். மீதமுள்ள 7 உதவி ஆணையர்களும் 'தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978/ தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 1999 தொடர்பான பணிகள் அனைத்தையும்

தங்கள் நகரக் கூட்டுப்பகுதியிலும், 'தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966/ திருத்தச் சட்டம் 1991'- இன் கீழ் வரிவிதிப்புப் பணிகளைத் சென்னை பெருநகரம், சென்னை புறநகர்ப் பகுதிகள் மற்றும் மாநிலத்தின் ஏனைய 21 மாவட்டங்களில் இச்சட்டப்பிரிவு நீட்டிக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் மேற்கொண்டுச் செயலாற்றி வருகின்றனர்.

**5.2 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978/ தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999**

**முதன்மைச்சட்டம் இயற்றம்/ நடைமுறைப்படுத்துதல்**

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக் கூறுகள் 39(பி) மற்றும் (சி) - இல் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளை பாதுகாக்கும் பொருட்டு, மாநில அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்தவே, இச்சட்டம் 03.08.1976 முதல் இயற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இம் மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

முதன்மைச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட நாளான 03.08.1976 முதல் எந்தவொரு நகரக்கூட்டுப்பகுதியிலும் அமைந்துள்ள (வேளாண் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாத)

நிலங்கள் 'நகர்ப்புற நிலங்களாக' வரையறுக்கப்பட்டன. ஒவ்வொரு நகரக் கூட்டுப்பகுதியிலும் தனிப்பட்ட நபர்/ ஒரு குடும்பம்/ தொழில் நிறுவனம் ஆகியவற்றிற்குத் தகுதியான/ அனுமதிக்கப்பட்ட மிகை வெற்று நிலங்கள் உச்சவரம்பு குறித்த விவரம் பின்வருமாறு:-

**அட்டவணை -5.1**

**பிரிவு (5)-இன் கீழ் மிகை வெற்று நிலத்தின் உச்சவரம்பு**

| வ. எண் | நகரக் கூட்டுப்பகுதியின் பெயர் | வகைப்பாடு | தனிநபர் (ச.மீ) | குடும்பம் (4 நபர்கள் கொண்டது) (ச.மீ) | தொழில் நிறுவனம் (ச.மீ) |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | I | 500 | 2000 | 2000 |
| 2. | மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் | II | 1500 | 3000 | 3000 |
| 3. | திருநெல்வேலி | III | 2000 | 4000 | 4000 |

## 5.3 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 1999, 16.06.1999 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. நீக்கறவுச் சட்டம்

நடைமுறைப்படுத்தப்பட்ட நாளுக்கு முன்னரே முதன்மைச் சட்டப் பிரிவுகளின் கீழ் உடைமை எடுக்கப்பட்டு அரசு வசம் உள்ள மிகை வெற்று நிலங்களுக்கு நீக்கறவுச் சட்டப் பிரிவு 3(1)(எ)-இன் கீழ் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.2**

**கையகப்படுத்திய நிலங்களின் நிலை**


| வ. எண் | விவரம் | பரப்பளவு சதுர மீட்டரில் |
|---|---|---|
| 1. | சட்டத்தின் கீழ் கையகப்படுத்திய பரப்பு | 1,89,79,446 |
| 2. | அரசுத் துறை/ அரசுத் துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பரப்பளவு | 44,21,058 |
| 3. | நில உடைமைதாரர்கள்/ அறியாமல் கிரயம் பெற்றவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுக்களின் கீழ் கவரப்படும் பரப்பளவு | 33,07,489 |
| 4. | அறியாமல் கிரயம் பெற்றோர் திட்டத்தின் கீழ் வரன்முறை செய்யப்பட்ட பரப்பளவு | 7,85,778 |
| 5. | நில உடைமைதாரர்கள்/ மற்றவர்களால் ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ள பரப்பளவு | 93,93,706 |
| 6. | ஆக்கிரமணமில்லா நிலங்களின் பரப்பளவு | 10,71,415 |


## 5.4 அறியாமல் பெற்ற கிரயத்தை வரன்முறை செய்யும் திட்டம்

முதன்மைச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான 03.08.1976 முதல் இச்சட்டப் பிரிவுகளின் கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்கள் வீட்டு மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டு பல்வேறு தனி நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டன.

ஒன்றுமறியாத பொதுமக்களில் பெரும்பாலானோர் சட்டப்பிரிவு 6-க்கு முரணாக கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களின் ஒரு பகுதி மனை/ மனைகளை விலைக்கு வாங்கியுள்ளனர். எனவே 03.08.1976 முதல் 31.12.1994 வரை நடைபெற்ற இத்தகைய அறியாக் கிரயங்களை ஒழுங்குபடுத்தும் பொருட்டு 1998-ஆம் ஆண்டு தமிழக அரசு "அறியாமல் கிரயம் பெற்ற நபர்களின் கிரயத்தை வரன்முறைப்படுத்துதல்" திட்டத்தை அறிமுகப்படுத்தியது. முன்னதாகப் பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண். 649, வருவாய்த் துறை, நாள் 29.07.1998-இல் வழங்கப்பட்ட நெறிமுறைகளின்படி குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் கிரயம் செய்யப்பட்ட 1 ½ கிரவுண்டுகளுக்கு மிகாத நிலங்களை மட்டும் உரிய நிலமதிப்புத் தொகையை வசூலிப்பதின் பேரில் வரன்முறை செய்ய ஆணையிடப்பட்டது. ஒவ்வொரு நகரக் கூட்டுப்பகுதியின் மண்டல மதிப்பின் அடிப்படையில் நிலமதிப்புத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. எனினும், இவ்வரசாணை அறியாமல் கிரயம் பெற்ற பலதரப்பட்ட நபர்களுக்கும் பொருந்தாத காரணத்தினால் இவ்வரசாணைக்குப் பதிலாக மற்றுமொரு அரசாணை (நிலை) எண். 565, வருவாய்த் துறை, நாள் 26.09.2008 பிறப்பிக்கப்பட்டது. இவ்வரசாணையில் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட நெறிமுறைகளின்படி 03.08.1976 முதல் 26.09.2008

வரை பதிவு செய்து கிரயம் பெறப்பட்ட குடியிருப்பு நோக்கம் மட்டுமல்லாது பிற நோக்கங்களுக்காகவும் கிரயம் செய்யப்பட்ட நிலங்கள் அனைத்தும் வரன்முறை செய்யப்படும். அரசிடமிருந்து வரன்முறை செய்ய இசைவு பெறப்பட்டதும், கிரயதாரர்கள் தாங்கள் அறியாமல் கிரயம் பெற்றுள்ள மொத்த பரப்பளவிற்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் ஒருமடங்கு/ இருமடங்கு/ மும்மடங்கு நிலமதிப்புத் தொகையை அரசுக் கணக்கில் செலுத்துவதின் பேரில் வரன்முறை செய்யப்படும். இத்திட்டத்தை மேலும் செம்மையாக நடைமுறைப்படுத்தும் வகையில் அரசாணை (நிலை) எண் 34, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நநிஉ I(2]த்துறை, நாள் 04.02.2019-இன்படி சில தெளிவுரைகள் வழங்கப்பட்டன. 01.04.2018 முதல் 31.03.2019 வரை 253 இனங்களில் கவரப்படும் மொத்தம் 58,287 சதுர மீட்டர் நிலங்கள் வரன்முறை செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இக்காலக்கட்டத்தில் அரசுக் கணக்கில் ரூ.3.66 கோடி நிலமதிப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.




### 5.5 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 / திருத்தச் சட்டம், 1991

**தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 இயற்றப்பட்டதன் நோக்கங்கள்**

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966 (i) அனைத்து நகர்ப்புற நிலங்களையும் வரிவிதிப்புக்குட்படுத்துதல் மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டித் தருவது, (ii) நகர்ப்புற நிலங்கள் மிகச் சில நபர்கள் கைவசம் மட்டுமே குவிந்து கிடப்பதையும், அந்நபர்கள்

இலாபம் ஈட்டும் நோக்குடன் செயல்படுவதையும் தடுத்து, அனைவருக்கும் சமமான முறையில் நிலப்பங்கீடு செய்து கொடுப்பது ஆகிய இரு முக்கிய நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு இயற்றப்பட்டது. இச்சட்டம் (பிரிவு 19, 47 மற்றும் 48 தவிர) சென்னை நகரத்தில் 01.07.1963 அன்று முதல் முன்மேவு பலன் அளிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

**திருத்தச் சட்டங்கள்: இச்சட்டம் அவ்வப்போது பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டது**

| | |
|---|---|
| திருத்தச் சட்டம் 1971 | 01.07.1971 முதல் சேலம், கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நகராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| திருத்தச் சட்டம் 1975 | 01.07.1975 முதல் முதன்மைச் சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருந்துவந்த பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டு, மேலும் சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. |
| திருத்தச் சட்டம் 1986 | வருவாய் வாரியம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு பிரிவுகளின் கீழ் இயங்கி வந்த அலுவலர்களின் பதவிப் பெயர்கள் திருத்தம் செய்யப்பட்டன. |
| திருத்தச் சட்டம் 1991 | 01.07.1991 முதல் ஏற்கனவே சட்டம் நடைமுறையில் இருந்து வந்த பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டு, மேலும் 21 சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை நகராட்சிகள் மற்றும் 2 நகரியங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |

இதற்கிடையில் நகர்ப்புற நிலவரிச் சட்டம், நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்துடன் சம எல்லையுடையதாக ஆக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966-இன் சட்டக்கூறுகள் திருநெல்வேலி நகரக் கூட்டுப்பகுதி மற்றும் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுப்பகுதிகளின் புற எல்லைப் பகுதிகளுக்கு பசலி 1391 முதல் நீட்டிக்கப்பட்டன.

**சந்தை மதிப்பு நிர்ணயம்**

முதன்மைச் சட்டம் மற்றும் திருத்தச் சட்டங்களின் படி சந்தை மதிப்பு நிர்ணயம் பின்வருமாறு :-

| சட்டத்தின் பெயர் | சந்தை மதிப்பு பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை நாள் |
|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி முதன்மைச் சட்டம் 1966 | 01.07.1963 |
| தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் 1975 | 01.07.1971 |
| தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் 1991 | 01.07.1981 |

## 5.6 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரித் திருத்தச்சட்டம், 1991-இன் அறிமுகம்

இத்திருத்தச் சட்டத்தின் சட்டக் கூறுகள் மாநிலத்தின், ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், உதகமண்டலம், திண்டுக்கல், கரூர், நாகர்கோவில், கும்பகோணம், கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், விழுப்புரம், மயிலாடுதுறை, உடுமலைப்பேட்டை, பழனி, காரைக்குடி, இராஜபாளையம் மற்றும்

நாமக்கல் ஆகிய 21 சிறப்பு நிலை / தேர்வு நிலை நகராட்சிகளுக்கும் கொடைக்கானல் மற்றும் மேட்டூர் ஆகிய 2 நகரியங்களுக்கும் நீட்டிக்கப்பட்டன.

**வரி விகிதம்**

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாள் முதல் வரி வீதமும் அவ்வப்போது சில திருத்தங்களுக்கு உட்பட்டு வந்தது. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் 1975-இன் கீழ் கடைசியாக பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டது.

**அட்டவணை 5.3**
**வரி விகிதம் அரசாணை (நிலை) எண். 2625**
**வருவாய்த் துறை, நாள் 27.12.1976-இன்படி)**

| **சென்னை புறநகர்ப்பகுதி தவிர ஏனைய நகர்ப்புற நிலங்கள்** | | **சென்னை புறநகர்ப்பகுதி நகர்ப்புற நிலங்கள் மட்டும்** | |
|---|---|---|---|
| **நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு** | **வரி விகிதம்** | **நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு** | **வரி விகிதம்** |
| முதல் 2 கிரவுண்டுகள் வரை | வரி இல்லை | முதல் 3 கிரவுண்டுகள் வரை | வரி இல்லை |
| மொத்தப் பரப்பளவு 2 கிரவுண்டுகளுக்கு மேல் 5 கிரவுண்டுகளுக்கு மிகாமல் | 0.7% | மொத்தப் பரப்பளவு 3 கிரவுண்டுகளுக்கு மேல் 7 கிரவுண்டுகளுக்கு மிகாமல் | 0.7% |
| மொத்தப் பரப்பளவு 5 கிரவுண்டுகளுக்கு மேல் 10 கிரவுண்டுகளுக்கு மிகாமல் | 1% | மொத்தப் பரப்பளவு 7 கிரவுண்டுகளுக்கு மேல் 10 கிரவுண்டுகளுக்கு மிகாமல் | 1% |

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர ஏனைய நகர்ப்புற நிலங்கள் | | சென்னை புறநகர்ப்பகுதி நகர்ப்புற நிலங்கள் மட்டும் | |
|---|---|---|---|
| **நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு** | **வரி விகிதம்** | **நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு** | **வரி விகிதம்** |
| மொத்தப் பரப்பளவு 10 கிரவுண்டுகளுக்கு மேல் 20 கிரவுண்டுகளுக்கு மிகாமல் | 1.5% | மொத்தப் பரப்பளவு 10 கிரவுண்டுகளுக்கு மேல் 20 கிரவுண்டுகளுக்கு மிகாமல் | 1.5% |
| மொத்தப் பரப்பளவு 20 கிரவுண்டுகளுக்கு மேல் | 2% | மொத்தப் பரப்பளவு 20 கிரவுண்டுகளுக்கு மேல் | 2% |

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966, திருத்தச் சட்டம் 1991-இன் கீழ் மாநிலத்தில் 24 மாவட்டங்களில் நகர்ப்புற நிலங்களாக அறிவிக்கை செய்யப்பட்டப் பகுதிகளில் இதுவரை 1.5 இலட்சம் வரிவிதிப்புதாரர்கள் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. நடப்புப் பசலி ஆண்டான 1428-இல் நகர்ப்புற நிலவரி கேட்புத் தொகையாக ரூ. 19.17 கோடி நிர்ணயம் செய்யப்பட்டது.

**5.7 1991-இன் திருத்தச் சட்டப்பிரிவு 29-இன் கீழ் பின்வரும் இனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து சட்டபடியான விலக்களிக்கப்பட்டுள்ளது.**

1. மாநில/ மத்திய அரசுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள்.
2. சென்னை மாநகராட்சி/ நகராட்சி அவை/ நகரியக் குழு/ ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய அவை ஆகியவற்றிற்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள்.

3. மதச்சார்பு அமைப்புகளுக்குச் சொந்தமான, பொதுமக்கள் வழிபாட்டுக்கென ஒதுக்கப்பட்ட நகர்ப்புற நிலம்.
4. அரசு மருத்துவமனை/ அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அமைப்பின் கீழ் இயங்கி வரும் மருத்துவமனை/ மாநில அல்லது மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற்று தனியார் அமைப்பின் கீழ் இயங்கி வரும் மருத்துவமனை அமைந்துள்ள நகர்ப்புற நிலங்கள்.
5. இடுகாடு/ சுடுகாடு பயன்பாட்டில் உள்ள நகர்ப்புற நிலங்கள்.
6. பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சாலைகள் அமைந்துள்ள நகர்ப்புற நிலங்கள்.
7. வாடகை/ கட்டணம் மூலம் வருவாய் ஈட்டாத பொது நோக்கத்திற்காகப் பயன்பாட்டில் உள்ள நகர்ப்புற நிலங்கள்.
8. மாநில அரசு/ பல்கலைக்கழகம்/ மத்திய கல்வி இடைநிலைக் கல்வி வாரியம், புது தில்லி/ இந்திய இடைநிலைக் கல்விக் குழுமம், புதுதில்லி இவற்றால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பள்ளிகள்/ கல்லூரிகள்/ கல்வி நோக்கத்துடன் நேரடியாகத் தொடர்பு உள்ள கல்வி நிறுவனங்கள் இயங்கி வரும் நகர்ப்புற நிலங்கள்.
9. பொதுப் பூங்காக்கள், பொது நூலகங்கள் மற்றும் அரசு அருங்காட்சியகங்கள் பயன்பாட்டில் உள்ள நகர்ப்புற நிலங்கள்.
10. ஆதரவற்ற நபர்கள்/ விலங்குகள்/ அனாதைகள்/ காது கேட்காத மற்றும் வாய் பேச இயலாதவர்களுக்கான இல்லங்கள் மற்றும் நலிந்தவர்கள்/ நோயாளிகள்/

முதியோர்/ பெண்கள் ஆகியோருக்கு அடைக்கலம் அளிக்கும் தொண்டு அமைப்புகளின் பயன்பாட்டில் உள்ள நகர்ப்புற நிலங்கள்.

5.8 **அரசால் பின்வரும் இனங்களுக்கு நகர்ப்புற நிலவரி விதிப்பில் சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.**

(1) நில உரிமையாளர் குடியிருந்து வரும் கட்டடம் அமைந்துள்ள நகர்ப்புற நிலத்திற்கு 50% வரிச்சலுகை

(2) அனைத்து இசை மற்றும் நாடக மன்றங்களுக்கு 50% வரிச்சலுகை

(3) சிறிய திரையரங்குகளுக்கு 10% வரிச்சலுகை

(4) நில உரிமையாளர் குடியிருந்து வரும் நகர்ப்புற நிலத்தில் உரிமையாளருக்குச் சொந்தமான தொழில் நிறுவனம் இயங்கி வந்தால், சிறு-தொழில் நிறுவனத்திற்கான உரியச் சான்று பெறப்பட்டிருப்பின் 25% வரிச்சலுகை மற்றத் தொழில் நிறுவனங்களுக்கு 10% வரிச்சலுகை,

(5) சென்னை நகரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சட்டப்பிரிவு 3(b)-இன் கீழ் குடிசைப்பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களுக்கு முழு வரிவிலக்கு

## 5.9 பிரிவு 27(1)-இன் கீழ் வரிவிலக்களிக்க அரசு மற்றும் நிலச்சீர்த்திருத்த ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம்

அறக்கட்டளையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட குழுமங்கள்/ மதச்சார்பு அமைப்புகள்/ மனித நேயத்துடன் தொண்டு புரியும் அமைப்புகள் வருமான வரித்துறை பிரிவு 12-இன் கீழ் விலக்கு பெற்றிருப்பின், நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் இடர்ப்பாடு ஏதும் நேரிடின் பிரிவு 27(1)-இன் கீழ் விலக்களிப்பு கோரி விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பங்கள் அரசால் அமைக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவால் உரிய சட்டவிதிகளின்படியும், நெறிமுறைகளின் படியும் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, அரசின் பரிசீலனைக்கு பரிந்துரைகள் செய்யப்படுகின்றன. இந்த முன்மொழிவுகள் அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, பிரிவு 27(1)-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இறுதியாக அரசாணை பிறப்பிக்கப்படுகிறது.

நிலச்சீர்த்திருத்த ஆணையருக்கு பின்வரும் இனங்களுக்கு வரிவிலக்களிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை/ ஆர்ச் டயோசிஸ்/ தென்னிந்திய திருச்சபை மற்றும் வக்பு வாரியம் ஆகியவற்றிற்குச் சொந்தமான நிலங்கள்

ஆ) மாநில அரசு/ இந்திய பல்கலைக்கழகம்/ மத்திய அரசு அல்லது+ மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், புதுடெல்லி ஆகியவற்றால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொந்தமான நிலங்கள்

**5.10 பிரிவு 20-இன் கீழ் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் மேல்முறையீடு:**

உதவி ஆணையர் (நகர்ப்புற நிலவரி) அவர்களால் விதிக்கப்படும் வரிவிதிப்பு குறித்து ஆட்சேபணை ஏதுமிருப்பின் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் யாதொரு வரி செலுத்துவோரும் மேல்முறையீடு செய்யலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாவட்ட வருவாய் அலுவலரே தீர்ப்பாயத்தின் தலைவர் ஆவார்.

**5.11 பிரிவு 30-இன் கீழ் நிலச்சீர்த்திருத்த ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ள சீராய்வு அதிகாரம்**

கூடுதல் தலைமைச் செயலர்/ நிலச்சீர்த்திருத்த ஆணையரே தற்போதைய சீராய்வு ஆணை பிறப்பிக்கும் அதிகாரி ஆவார். 2019-2020 ஆம் ஆண்டில் 25 சீராய்வு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

## 6. நில அளவை மற்றும் நிலவரித்திட்டம்

### 6.1. நில அளவை வரலாறு

நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம் 1858-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 160 ஆண்டுகளை கடந்து பொதுசேவையில் தமிழக அரசின் மிகவும் பழமையான துறைகளில் ஒன்றாக இருக்கிறது.

இவ்வியக்குநரகம் முன்னாட்களில் மேற்கொள்ளப்பட்ட நிலஅளவை முறைகளுக்குப் பதிலாக தற்போது டிஜிட்டல் முறை நில அளவை நவீன கருவிகளான மின்னணு நிலஅளவைக்கருவி, பூகோள நிலைக்கலன் கருவி, வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் தொடர்ச்சியான இயக்கக் குறிப்பு நிலையங்கள் உள்ளிட்ட கருவிகளுடன் நிலஅளவைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

நிலம் என்பது மனித இனத்திற்கு பெருமதிப்புள்ள ஆதாரமாகும். மனிதர்கள் எப்பொழுதும் தன் வசமிருந்த நிலத்தின் எல்லையை நிர்ணயம் செய்திட தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வந்துள்ளனர்.

துவக்கத்தில், பெருமுக்கோண நிலஅளவைமுறை (Great Trigonometrical Survey) ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தில்

துவக்கப்பட்டது. கர்னல் வில்லியம் லேம்ப்டன் என்பவர் தற்போதைய சென்னையின் புனித தாமஸ் மலை என்னும் பரங்கி மலையிலிருந்து சோழிங்கநல்லூர் வட்டத்தின் பெரும்பாக்கம் வரையிலான 12 கி.மீ. தூரத்தை அடிக்கோடாகக் கொண்டு, இப்பணியை மேற்கொண்டார். கி.பி. 1802-ஆம் ஆண்டில் இப்பணிக்காக இவர் கோணமானியைப் பயன்படுத்தினார்.

இவ்வியக்குநரகம், கீழ்க்கண்டுள்ள பல்வேறு வகையான நில அளவைப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்துள்ளது என்பதுடன், நவீன கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணிகளை மேற்கொண்டும் வருகிறது.

**அட்டவணை 6.1**

**பல்வேறு வகையான நில அளவைப் பணிகள்**


| வ. எண் | நில அளவை வகை | ஆண்டு |
|---|---|---|
| 1. | துவக்க நிலஅளவை | 1826 |
| 2. | ரயத்துவாரி முதல் நிலஅளவை | 1858 |
| 3. | மலைக்கிராம நிலஅளவை | 1883 |
| 4. | நகர நில அளவையில் பிளாக் வரைபடங்கள் | 1891-1894 |
| 5. | மறு நில அளவை | 1905-1926 |
| 6. | நில உடைமை மேம்பாட்டுத் திட்டம் | 1979-1987 |
| 7. | நத்தம் நில அளவை | 1989-1992 |
| 8. | துணை நகர நில அளவை | 1989-1997 |
| 9. | நவீன நகர நிலஅளவை | 2002 முதல் நாளதுவரை |
| 10. | நவீன மறு நில அளவை | 2016 முதல் நாளதுவரை |

## 6.2 துறையின் அமைப்பு நிலை

நில அளவை இல்லத்தில் இயங்கிவரும் இவ்வியக்ககம், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வியக்ககத்தின் மூலம், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் சார்ந்த அனைத்துத் திட்டங்கள் மற்றும் அவை தொடர்பான இதரப்பணிகள், வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தி மற்றும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மத்திய நில அளவை அலுவலகம் இவ்வியக்ககத்தின் தொழில்நுட்பப் பிரிவாக விளங்குவதுடன், இது வரைபடங்களை தயாரிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் செய்கிறது. மாவட்ட அளவிலான நில அளவை நடவடிக்கைகள் உதவி இயக்குநர்களின் தலைமையில் அமையப்பெற்ற மாவட்ட அலுவலகங்கள் மூலம் நில அளவர்கள், வரைவாளர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களால் மேற்கொள்ளப் படுகின்றன.

மேலும், வட்டாட்சியர் அலுவலகங்களில் நிலஅளவை துணை ஆய்வாளர்கள் தலைமையில் நிலஅளவைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. நிலப்பரிவர்த்தனையின்போது ஏற்படும் நிலஉரிமை குறித்த தேவையான மாற்றங்களை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல் உள்ளிட்டவை நிலஅளவை துணை ஆய்வாளர்களின் முக்கிய கடமைகளில் சிலவாகும்.

## இயக்ககத்தின் அமைப்பு விளக்கப்படம்



**அட்டவணை 6.2.1**

**நில அளவைப் பிரிவிற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை**

| வ. எண் | பிரிவு | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | புலப் பிரிவு | 5,548 |
| 2. | தொழில்நுட்பப்பிரிவு | 2,094 |
| 3. | அமைச்சுப்பிரிவு | 1,079 |
| 4. | இதர வகை | 19 |
| | **மொத்தம்** | **8,740** |

### 6.2.2 வட்ட அலுவலகத்தில் நிலஅளவைப் பராமரிப்புப் பணி

பட்டா மாறுதல்கள் கோரி, பொது மக்களிடமிருந்து 'இ'சேவை மையங்கள் மூலமாகவும், பத்திரப் பதிவுத்துறையின் மூலமாகவும் பெறப்படும் விண்ணப்பங்கள் வட்ட அலுவலக நில அளவைப் பிரிவில் பதிவு செய்யப்பட்டு தொடர்புடைய குறுவட்ட அளவர்களுக்கு இணையம் வழியாக (Firka Surveyor Dashboard) அனுப்பப்படுகின்றன. தொடர்ந்து, அவ்விண்ணப்பங்களின் மீதான புலத்தணிக்கைகளை முடித்து, குறுவட்ட அளவர்களால் உட்பிரிவு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. பின்னர், அவற்றை வட்ட

அலுவலக நிலஅளவை அலுவலர்கள் கூராய்வு செய்து அவ்வறிக்கையை வட்டாட்சியர்களின் ஆணைகளுக்காக முன்வைக்கின்றனர். அவற்றின்மீது வட்டாட்சியரால் தக்கவாறு ஆணைகள் வழங்கப்படுகின்றன.

## 6.3. நிலஅளவை திட்டங்கள்

### 6.3.1. நில உடமை மேலாண்மை திட்டம், நத்தம் நிலஅளவை மலைக்கிராமங்கள் அளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள்

1979-ஆம் ஆண்டில், நிலஉடமை பதிவு மேம்பாட்டு திட்டம் தொடங்கப்பட்டு, விவசாயம் சார்ந்த அனைத்து பகுதிகளிலும் ஏற்பட்டிருந்த நிலப்பரிவர்த்தனைகள் புலத்தணிக்கை செய்யப்பட்டு, வருவாய் ஆவணங்களில் மேம்படுத்தப்பட்டன. பொதுமக்கள் தமது வாழ்விடங்களாகப் பயன்படுத்தி வரும் அரசுக்கு சொந்தமான 'நத்தம்' என்னும் நிலவகைப்பாட்டின் கீழான நிலங்களில் நிலஅளவை செய்து பட்டா வழங்கப்படுகின்றன. இதற்காக, நத்தம் நிலஅளவைத் திட்டப்பணி 1989-இல் தொடங்கி நடைபெற்றுள்ளன. தமிழகத்தில் 6 மாவட்டங்களைச்சார்ந்த 67 மலைக்கிராமங்களில் நிலஅளவைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நத்தம் அளவைப்பணி முடிந்து, அதனடிப்படையில் நிலவரித்திட்டப்பணிகள் நடைபெற்று பொதுமக்களுக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.3.2 நகர அளவை

கடாஸ்ட்ரல் நிலஅளவை முறை கிராமப்புறங்களிலும் நகர நிலஅளவை முறை நகரப்பகுதிகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகர நில அளவை முறையில் தெருக்களுடன், பிளாக் வாரியாக நிலஅளவை செய்யப்படுவதுடன், அவை குறித்த விவரங்கள் வார்டு வரைபடம், பிளாக் வரைபடம், நகர நில அளவைப் பதிவேடு மற்றும் சிட்டா எனப் பராமரிக்கப்படுகிறது. மேலும், புதிய பகுதிகள் நகராட்சிகளாகவும், மாநகராட்சிகளாகவும் அறிவிக்கப்படும் போது நகர அளவை முறைகளைக் கொண்டு, அப்பகுதிகள் புதிதாக அளவை செய்யப்படுகின்றன. தற்போது, தமிழ்நாட்டில், புதிதாக அறிவிக்கப்பட்ட ஆவடி மாநகராட்சி நீங்கலாக இதர 12 மாநகராட்சிகளில் பழைய எல்லைகளின்படி மரபு சார்ந்த முறை மூலம் நகர நிலஅளவைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 3 மாநகராட்சிகள் மற்றும் அவற்றின் விரிவாக்கப் பகுதிகளில் நவீன நில அளவைக்

கருவிகளைக்கொண்டு நகர நில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 9 மாநகராட்சிகளில் நவீன நில அளவை கருவிகள் மூலம் நகரளவைப் பணிகள் துவங்கப்படவுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள 124 நகராட்சிகளில், 93 நகராட்சிகளில் மரபு சார்ந்த முறைகளின்படி நகர நிலஅளவை பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 31 நகராட்சிகளில் சென்னை மாநகராட்சி எல்லைக்குள் சேர்க்கப்பட்டுள்ள 3 நகரங்களில் நில அளவைப் பணி நடைபெற்று வருகிறது. அவை தவிர 2 நகரங்களில் நீதிமன்ற வழக்குகள் காரணமாக நகரளவைப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. எஞ்சிய 26 நகரங்களில் நகரளவைப் பணியை துவக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.3.3 நவீன கருவிகளைக் கொண்டு நகர நில அளவைப் பணிகள்

நவீன நிலஅளவைக் கருவிகளைக் கொண்டு நகர நில அளவை செய்வது மில்லி மீட்டர் (மி.மீ) நிலையிலான துல்லியத் தன்மையை தருகிறது. இங்கு பிளாக் வாரியாக நிலங்கள் பகுக்கப்பட்டு, தெருக்களுடன் கூடிய கிராம எல்லைகள் மீது ட்ராவர்ஸ் அளக்கப்படுகிறது. இதனடிப்படையில் வார்டு

வரைபடங்கள், பிளாக் வரைபடங்கள், நகர நிலப்பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவை தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

கணினிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் (வரை படங்கள்) பூகோள தகவல் அமைப்பு வெளியில் பதிவிடப்படுகின்றன. இலக்க முறைப்படுத்தப்பட்ட வரைபடங்களின் மீது செயற்கைகோள் வரைபடங்களை மேலடுக்குவதால் அரசு மற்றும் பொதுத் துறை நிலங்கள் ஆட்சேபணைக்குரிய வகையில் பயன்படுத்தப்படுவது எளிதாக கண்டறியப்படும் என்பதுடன் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இயலும்.

### 6.3.4 மறுநில அளவை

தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டம், நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் மறுநிலஅளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளில் வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவிகள்–ஆர்.டி.கே (Differential Global Positioning System- Real Time Kinematic) முறை பயன்படுத்தப்படுகிறது.

மாநிலம் முழுவதிலுமுள்ள நிலப்பகுதிகளை 74 முக்கோணங்களாகப் பிரித்து அவற்றில் 70 இடங்களில் தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையங்கள் (Continuously

Operating Reference Stations) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 4 இடங்களில் இம்மையங்களை அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்விடங்களில், வட்ட அலுவலக / மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்களின் உச்சியில், 6 முதல் 8 அடிகள் உயரத்தில், வட்ட வடிவ தூண்கள் பொதுப்பணித் துறையினரால் கட்டிமுடிக்கப்பட்டு அவற்றில் தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவற்றிற்குத் தேவையான தடையற்ற மின்சாரம் வழங்கும் கருவிகள்/ மின்தாங்கிகள் உள்ளிட்ட கருவிகள் வழங்குதல் மற்றும் வலையமைப்பு ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக இவ்வியக்ககத்தில் தேவையான வலையமைப்புடன் கட்டுப்பாட்டு மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு, நிறுவப்பட்டுள்ள தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையத்துடன் வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி- RTK முறையில் மேற்கொள்ளப்படும் நிலஅளவைப்பணி மிக விரைவானதாகவும், மில்லி மீட்டர் (மி.மீ) அளவிலான துல்லியத்தன்மை கொண்டதாகவும் இருக்கும்.

**6.3.5 டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் (Digital India Land Records Modernization Programme)**

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த இரண்டு மத்திய அரசு திட்டங்களான நில ஆவணங்களை கணினிப்படுத்துதல் மற்றும் வருவாய் நிருவாகத்தை வலிமைப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் (CLR, SRA and ULR **திட்டங்கள்**) ஆகியவற்றை ஒருங்கிணைத்து மத்திய அரசு, தேசிய நில ஆவணங்கள் நவீனமயமாக்கும் திட்டத்தினை (NLRMP) துவக்கியது. தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் 01.04.2016 முதல் "டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்" (DILRMP) என மறு உருவாக்கம் செய்யப்பட்டு அதற்கான 100 விழுக்காடு நிதி மத்திய அரசால் வழங்கப்படும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

இத்திட்டம் நில ஆவணங்களை நவீனப்படுத்தி பொதுமக்களுக்கு கூடுதல் சேவைகளை வழங்குவது, நிலம் சார்ந்த சொத்துக்களில் ஏற்படும் தகராறுகளைக் குறைப்பது, நில ஆவணங்களைப் பராமரிப்பதில் வெளிப்படைத் தன்மைகளை கூடுதலாக்குவது, போன்றவற்றிற்கும் இலக்கமுறை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நில உரிமையின் உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவதற்கும் சிறப்பான கண்காணிப்பை மேற்கொள்வதற்கும் பயன்படுகிறது.

**6.4 மாநிலத்தில் தற்போது உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நில ஆவணங்களின் வகைப்பாடுகள் கீழ்க்கண்டவாறு:-**

**6.4.1 ஊரகப் பகுதிகள்**

- 'அ' பதிவேடு
- சிட்டா
- புலப்பட புத்தகம் (FMB)
- அடங்கல்
- கிராம வரைபடங்கள்

**6.4.2 நகரப் பகுதிகள்**

- நகர நில அளவைப் பதிவேடு (TSLR)
- பிளாக் வரைபடம்

**6.5 நில ஆவணங்களை கணினிமயமாக்கல்**

நில ஆவணங்களை கணினிப்படுத்துவதற்கும் அவற்றினை இணையம் மூலமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கவும், தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன், கீழ்க்கண்ட தேவையான மென்பொருள் செயலிகள் மற்றும் தரவு தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:-

- தமிழ்நிலம் (ஊரகம்)
- கொலாப்லேண்ட்
- இணையவழி தமிழ்நிலம் (நகர்ப்புறம்)

மாநிலத்திலுள்ள 305 வட்டங்களில் இதுவரையில் 289 ஊரக வட்டங்கள் மற்றும் 14 நகர்ப்புற வட்டங்கள் சார்ந்த நில ஆவணங்கள் தமிழ்நிலம் மென்பொருள் மூலம் இணையவழிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2 ஊரக வட்டங்கள் இணையவழிக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 6.5.1 நத்தம் நில ஆவணங்கள்

மொத்தமுள்ள 1.42 கோடி நத்தம் நில ஆவணங்களும் கணினிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றினை இணைய வழியில் வெளியிடுவதற்காக கணினிப்படுத்தப்பட்ட நத்தம் ஆவணங்களை ஒப்பிட்டுச் சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக பெரம்பலூர் வட்டம் முன்மாதிரி வட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### 6.5.2 நகர நில ஆவணங்கள்

மொத்தமுள்ள 37.87 இலட்சம் நகர நிலஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. புதிதாக அறிவிக்கப்பட்ட ஆவடி மாநகராட்சியைத் தவிர இதர 12 மாநகராட்சிகள் மற்றும் மொத்தமுள்ள 124 நகராட்சிகளில் 92 நகராட்சிகளின் ஆவணங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள நகர நிலஆவணங்களை இணையவழிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது வரையில், 36 நகரங்கள் 3 மாநகராட்சிகள் மற்றும் சென்னை மாவட்டத்தைச் சார்ந்த 10 வட்டங்களின் நகர நில ஆவணங்களும் இணையவழிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இதர நகர்ப்புற வட்டங்களும், மாநிலத்திலுள்ள இதர நகர்ப்புற பகுதிகளான மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் சார்ந்த பகுதிகளும் விரைவில் இணையவழிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 6.5.3 புலப்படங்களை கணினிப்படுத்துதல்

மொத்தமுள்ள 55.25 இலட்சம் புலப்படங்களில் இதுவரையில் 54.67 இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 97% புலப்படங்கள் (mosaiced) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 3% புலப்படங்களை ஒருங்கிணைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு நில ஆவணங்களை கணினிமயமாக்கி அவற்றை இணையவழியில் வெளியிடுவதால்,

அவை பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைவதோடு நில அளவையில் இது ஒரு மைல் கல்லாகவும், அரசின் மிகப்பெரிய சாதனையாகவும் திகழ்கிறது.

### 6.5.4 நில ஆவண மேலாண்மை மையங்கள்

தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கையினால் வரைந்து தயாரிக்கப்பட்ட நில ஆவணங்களை பாதுகாப்பதற்கும், அவற்றை கணினிப்படுத்தி மின்நகலாக்கி (Digital) பாதுகாத்து பராமரிப்பதற்கும், அவற்றின் நகல்களை பொதுமக்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப வழங்குவதற்கும் ஏதுவாக அனைத்து வட்டங்களிலும் நில ஆவண மேலாண்மை மையங்கள்/ நவீன பதிவறைகள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நடைமுறைப் படுத்திவரும் அனைத்துச் சேவைகளையும் பொதுமக்களுக்கு வழங்கிட இம்மையங்கள் பயன்படுத்தப்படும். தற்போது, மாநிலத்திலுள்ள 305 வட்டங்களில் இதுவரையில் 89 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து விடப்பட்டுள்ளன என்பதுடன் 203 வட்டங்களில் இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 6.6 தமிழில் வரைபடங்கள் தயாரித்தல் / கிராமம்-வட்டம்-மாவட்டம்

அனைத்து மாவட்ட மற்றும் வட்ட வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. கிராம வரைபடங்களை கணினிப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மேலும், மாவட்ட மற்றும் வட்ட வரைபடங்களை தமிழில் தயாரிக்கும் பணி சென்னை, மத்திய நில அளவை அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்ற பின்னர், கணினிமயமாக்கப்பட்ட மாவட்ட, வட்ட மற்றும் கிராம வரைபடங்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கிடைக்க வசதிகள் செய்யப்படும். தமிழ் மொழியில் தயாரிக்கப்படும் இந்த வரைபடங்கள் கிராம மக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும். அரசின் அனைத்துத் துறைகளும் இணையம் மூலமாக வரைபடங்களை பதிவிறக்கம் செய்து அவர்களுடைய தேவைகளுக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

### 6.6.1 துறையின் உள்கட்டுமான வளர்ச்சி

இத்துறை நவீனப்படுத்தப்பட்ட பொழுது, 1601 அலுவலர்களுக்கு இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினைச் செயல்படுத்த ஏதுவாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

314 உயர் அலுவலர்களுக்கும், குறுவட்ட அளவர்களுக்கும் 3ஜி தரவு அட்டைகள் இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினைக் கண்காணிக்கவும், செயல்படுத்தவும் வழங்கப்பட்டது.

உதவி இயக்குநர், மண்டல துணை இயக்குநர், மத்திய நிலஅளவை அலுவலகம் மற்றும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட அலுவலகங்களை வலுப்படுத்துவதற்காக கணினிகள், யு.பி.எஸ். பிளாட்டர்ஸ், ஸ்கேனர் மற்றும் தேவையான பாகங்கள் 2018-19-ம் நிதியாண்டில் ரூ.2.31 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

## 6.7 நில ஆவணங்களின் இணையவழி அமைப்பும் அதன் பயன்களும்

நில ஆவணங்கள் இணையவழியில் பராமரிக்கப்பட்டு வருவது பொதுமக்களுக்கு அவர்களுடைய நிலங்களின் விவரங்களை அறிந்துகொள்ள மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

### (அ) பொதுமக்களுக்கான பயன்கள்

- வட்ட அலுவலகங்களுக்கு செல்வதற்கு பதிலாக பொதுமக்கள் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகில் அமைந்துள்ள பொதுச்சேவை மையத்தின் (Common

Service Centre) மூலம் இணையவழியில் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

- கணினி மூலம் அச்சிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக வழங்கப்படுவதுடன் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- பெறப்படும் விண்ணப்பங்கள் தக்க நடவடிக்கைக்காக உடனுக்குடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாற்றப்படுவதுடன் பொதுமக்கள் அவை குறித்த தற்போதைய நிலையினை http://eservices.tn.gov.in என்ற இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம்.
- விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுடைய விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கையின் விவரங்கள் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்திகளாக அனுப்பப்பட்டு வருகின்றன.
- டிஜிட்டல் கையொப்பமிடப்பட்ட பட்டாவை வட்ட அலுவலகங்களுக்கு செல்லாமலேயே இணையம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

(ஆ) **துறைக்கான பயன்கள்**

- நிலஆவணங்களின் இணையவழி மேலாண்மை அறிமுகப்படுத்தப்பட்டதால் அலுவலர்களின் பணிப்பளு வெகுவாக குறைந்துள்ளது.
- அலுவலர்களின் வேறுபட்ட நிலையிலான பணித்திறன் உயர் அலுவலர்களால் இலகுவாக கண்காணிக்கப்படுவதால் புலத்தில் அவர்களுடைய பணியின் திறன் சிறப்பானதாக உள்ளது.
- இணையவழியில் விண்ணப்பங்கள் பெறப்படுவதால் ஆவணங்கள் எவ்வித விடுதலுமின்றி சிறந்த முறையில் நிருவகிக்கப்படுகிறது.

**6.7.1 தமிழ்நிலம் மற்றும் பதிவுத்துறை தரவு தளத்தை இணைத்தல்**

நில ஆவணங்கள் கணினிமயப்படுத்தப்பட்டு இணையத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. பதிவுத்துறை அலுவலகங்களில் நடைபெறும் நிலப் பரிவர்த்தனைகளின்போது வலைத் தளத்தில் கிடைக்கப்பெறுகிற நில உரிமை குறித்த தகவல்களை நில ஆவணங்களுடன் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே, நிலப் பரிவர்த்தனைகளை பத்திர பதிவுத்துறை

அலுவலர்கள் அனுமதிக்கின்றனர். இது தவறான நிலப்பரிவர்த்தனைகள் நடைபெறுவதைத் தவிர்க்க உதவுகிறது.

சார்பதிவகங்களில் பத்திரப்பதிவு நடவடிக்கைகள் முடிவுற்றதும் உடனடியாக பட்டா மாறுதல் ஆணைகளை வெளியிட ஏதுவாக தமிழ்நிலம் தரவுதளத்துடன் பத்திரப்பதிவு தரவுதளம் இணைக்கப்பட்டுள்ளது. 12.02.2018 அன்று ஏற்படுத்தப்பட்ட, இவ்வசதியின் மூலம் புதிய விண்ணப்பங்கள் ஏதும் கோரப்படாமல் உடனடியாக பட்டா மாறுதல் ஆணைகளை வழங்கிட இயலும்.

## 6.8 இயக்ககத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

### 6.8.1 குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்.

பொதுமக்களுக்கு எளிதாக சேவை புரியும் வண்ணம் 100 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ரூ.7.68 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து 60 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகளுக்கான கட்டுமானப்பணிகள் ரூ.9.30 கோடி செலவில் நடைபெற்று

வருகிறது. அவற்றில் கட்டி முடிக்கப்பட்டிருந்த 11 குடியிருப்புகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.02.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் 2018-2019-ஆம் நிதி ஆண்டில் ரூ.17.26 கோடி மதிப்பீட்டில் மேலும், 100 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டட அரசாணை (நிலை) எண்.358, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 26.09.2018-இன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, பொதுப்பணித்துறையின் மூலம் துவக்க கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

### 6.8.2 காலிப்பணியிடங்கள் நிரப்புதல்

இத்துறையில் காலியாக உள்ள நிலஅளவர், வரைவாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படை நியமனம் மூலமாக நிரப்பப்படுகின்றன. அதனடிப்படையில் பின்வருமாறு பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன:-

| வ. எண் | பதவியின் பெயர் | நிரப்பப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | தேர்வுமுறை | |
|---|---|---|---|---|
| | | | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | கருணை அடிப்படை நியமனம் |
| 1. | நிலஅளவர் | 107 | 101 | 6 |
| 2. | வரைவாளர் | 159 | 157 | 2 |
| 3. | இளநிலை உதவியாளர் | 43 | 41 | 2 |
| 4. | தட்டச்சர் | 23 | 23 | -- |

### 6.8.3. போட்டோ சின்கோ அச்சகத்தை நவீனப்படுத்துதல்

சென்னை, மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள மிகப்பழமையான போட்டோ சின்கோ அச்சகம், ஒரு கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில், ரூ.60.94 இலட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், ரூ.12.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுமான மற்றும் சிறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். புனரமைக்கப்பட்ட அச்சகம் தனது அச்சுப் பணிகளைத் தொடங்கியுள்ளது. நவீன மயமாக்கப்பட்ட போட்டோ சின்கோ அச்சகத்தில் மாவட்ட, வட்ட, கிராம வரைபடங்கள் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்டப் படிவங்கள் அச்சடிக்கப்பட்டு அனைத்து நிலவரித்திட்ட பிரிவுகளுக்கும் மற்றும் மாவட்ட நிலஅளவை அலுவலகங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

### 6.8.4. AMMA கைப்பேசி செயலி

பொதுமக்கள் நில ஆவணங்கள் தொடர்பான சேவைகளை எளிதில் கையாளும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

அவர்கள் 01.03.2018 அன்று 'AMMA கைப்பேசி செயலி' ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இந்த சேவையின் வாயிலாக பொதுமக்கள் தங்களது கைப்பேசி திரையினை மென்மையாகத் தொடுவதின் மூலம் தேவையான விவரங்களை காண இயலும்.



கோயம்புத்தூர் மாவட்டம் - காங்கேயம் வட்டம்
தொடர் இயக்க குறிப்பு நிலையம் (CORS)




**DGPS மற்றும் RTK தொழில்நுட்பத்தைக் கொண்டு நவீன மறுநிலஅளவை பணிகள் - பெரம்பலுரர் மாவட்டம்**



**DGPS மற்றும் RTK தொழில்நுட்பத்தைக் கொண்டு நவீன மறுநிலஅளவை பணிகள் - பெரம்பலுரர் மாவட்டம்**



குறுவட்ட அளவர் அலுவலகம் (ம) குடியிருப்பு ,கொடுவிலார்பட்டி (குறுவட்டம்).,
தேனி வட்டம், தேனி மாவட்டம்.



**குறுவட்ட அளவர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு**

**சூளகிரி குறுவட்டம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்**

## நிலவரித்திட்டம்

நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை, நில வரியாக வருவாய்த் துறை வசூலித்து வருகிறது. நிலவரி நிர்ணயிப்பதற்காக கடைப்பிடிக்கப்படும் முறை நில வருவாய் நிலவரித்திட்டம் எனப்படுகிறது. பாசன ஆதாரம், மண்ணின் தன்மை மற்றும் அதன் விளைச்சல் திறன் ஆகியவைகளின் அடிப்படையில் மண் வகைபாடு செய்து, தரம் பிரிக்கப்பட்டு, அதனடிப்படையில் நிலவரி நிர்ணயிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில், மண் வகைப்பாடு செய்யப்படாமல் நிலவரி வசூலிக்கப்பட்டு வந்த முறையான நிலையான நிலவரித்திட்ட முறையை ரத்து செய்து, பாய்ச்சல் ஆதாரம் மற்றும் மண் வகைபாடு ஆகியவைகளின் அடிப்படையில் நிலவரி நிர்ணயம் செய்யும் முறையான 'இரயத்துவாரி நிலவரித்திட்டம்' 1879-1880-ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், ஜமீன்தார்கள்/ இனாம்தார்கள் ஆகியோர்களிடமிருந்து நில உடமைகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தப்படாமல் அவ்வுடமைகளில் நிலையான நிலவரித்திட்ட முறையிலேயே நிலவரி வசூலிக்கப்படுவது தொடரப்பட்டது. சுதந்திரத்தின்போது ஜமீன்தார்கள் இனாம்தாரர்கள் தொடர்ந்து, ரயத்துகளிடமிருந்து வரிவசூல் செய்து, அரசுக்கு செலுத்தி வந்த ஜமீன் எஸ்டேட் மற்றும் இனாம்

பகுதிகளைத் தவிர தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ரயத்துவாரி நிலவரித்திட்ட முறை நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது. எனவே, சுதந்திரம் பெற்ற பின்பு, இரயத்துகளுக்கிருந்த சுமையைக் குறைப்பதற்காகவும், நில உடமையாளர்கள் என்ற பிரிவினரை மொத்தமாக நீக்குவதற்காகவும், பல்வேறு நில உடமையாளர்கள் ஒழிப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளில், பெரும்பாலான சட்டங்களின் கீழ் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பின்வரும் சட்டங்களின் கீழ் நிலவரித்திட்டப் பணிகள்/ மேல்முறையீடுகள் நிலுவையிலுள்ளன:-

I. தமிழ்நாடு எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948 (தமிழ்நாடு சட்டம் XXVI/1948)

II. தமிழ்நாடு இனாம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

III. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

IV. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

எஸ்டேட்ஸ் இனாம் மற்றும் மைனர் இனாம் ஒழிப்புச் சட்டங்களின் கீழ் நில உடமையாளர்கள் நீக்கப்பட்டு, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இன்றைய நிலையில், சில கிராமங்களைத் தவிர இதர பகுதிகளில் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**(அ) தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)**

தமிழ்நாட்டில் உள்ள இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த கிராமங்களில், நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட பின்வரும் கிராமங்களைத் தவிர, இதர அனைத்து கிராமங்களிலும் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டுவிட்டன.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 1 | அரையபுரம் தட்டிமால் படுகை | பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 2 | இராமச்சந்திரன் கோயில்பத்து | தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 3 | கழனிவாய்ப்பட்டி | பொன்னமராவதி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் |
| 4 | சென்னசந்திரம் | ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 5 | திம்மசந்திரம் | |
| 6 | உளியாளம் | |

**(ஆ) தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)**

தமிழ்நாட்டில் உள்ள சிறு இனாம்தாரர்களின் உரிமையை அரசு கைப்பற்றவும் அவற்றில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழி வகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இனாம் கிராமங்களில், நீதிமன்ற வழக்குக்கு உட்பட்ட பின்வரும் கிராமங்களைத் தவிர இதர அனைத்து கிராமங்களிலும்/நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 1. | காரணப்பட்டி | பொன்னமராவதி வட்டம்,<br>புதுக்கோட்டை மாவட்டம் |
| 2. | கோதண்டராமபுரம் | இலுப்பூர் வட்டம்,<br>புதுக்கோட்டை மாவட்டம் |
| 3. | நிலையப்பட்டி | இலுப்பூர் வட்டம்,<br>புதுக்கோட்டை மாவட்டம் |
| 4. | அகஸ்தியம்பள்ளி | வேதாரண்யம் வட்டம்,<br>நாகப்பட்டினம் மாவட்டம் |
| 5. | தாரிக்கொம்பன் | இளையான்குடி வட்டம்,<br>சிவகங்கை மாவட்டம் |
| 6. | பைரசந்திரம் | ஒசூர் வட்டம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 7. | இளையசந்திரம் | |
| 8. | மாரசந்திரம் | |
| 9. | சூரியநாராயணபுரம் | பட்டுக்கோட்டை வட்டம்,<br>தஞ்சாவூர் மாவட்டம் |

இக்கிராமங்களை பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட நில உடமையாளர்களால் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்குகள் காரணமாக நிலவரித்திட்டப் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. இன்றைய நிலையில், இராமச்சந்திரன் கோயில் பத்து கிராமத்தை தவிர இதர அனைத்து நீதிமன்ற வழக்குகளும் முடிக்கப்பட்டு, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

(இ) **தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/69)**

நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில், ஜென்மம் எஸ்டேட்களில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை எடுத்துக்கொள்ளவும் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறையை அறிமுகப்படுத்தவும் இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் தொரப்பட்டன. உயர்நீதிமன்றத்திலும் அதன் பின் உச்சநீதிமன்றத்திலும் சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிக்களால் இச்சட்டத்தை முழுமையாக அரசியலமைப்பு சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து பல வழக்குகள் தொடரப்பட்டிருந்ததால், நிலவரித்திட்டப் பணிகளை முடிக்க இயலவில்லை. தமிழ்நாடு சட்டம் 24/69-ஐ அரசியலமைப்பு

சட்டத்தின் 9-ஆம் அட்டவணையில் முழுமையாக சேர்க்கப்பட்டதை, இறுதியாக உச்சநீதிமன்றம் ஏற்று தீர்ப்பளித்துள்ளதால், நிலவரித்திட்டப் பணிகளை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 80,087.74 ஏக்கர் ஜென்மம் நிலங்களில் 45,101.46 ஏக்கர் பரப்பில் இதுவரை நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, 34,986.28 ஏக்கர் பரப்பு நிலவரித்திட்டப் பணிக்காக மீதமுள்ளது.

இதுவரையில் பணி முடிக்கப்பட்ட பரப்பின் விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | விவரங்கள் | விஸ்தீரணம் (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மொத்த ஜென்மம் நிலங்கள் | 80,087.74 |
| 2. | நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட மொத்த பரப்பு | 45,101.46 |
| 3. | நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட பரப்பில் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டது | 17,014.43 |
| 4. | நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு [(1)-(2)] | 34,986.28 |

நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக மீதமுள்ள 34,986.28 ஏக்கர் பரப்பை பொறுத்தவரையில், மேற்படி சட்டப் பிரிவு 8,9,10-களின் கீழ் பெறப்பட்ட மனுக்களை முடிவு செய்யுமாறு நிலவரித்திட்ட அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலரை

உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இன்றைய நிலையில் மனுக்களின் நிலை பின்வருமாறு:-

| | |
|---|---|
| பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | 566 |
| முடிக்கப்பட்ட மனுக்கள் | 562 |
| நிலவரித்திட்ட அலுவலரிடம் நிலுவையிலுள்ளவை | 4 |

கூடலூர் ஜென்மம் நிலங்களில் நிலவரித்திட்டப் பணிகள் நிலுவையிலுள்ள 34,986.28 ஏக்கர் பரப்பில் குத்தகை காலம் முடிவுற்ற நிலங்களை திரும்ப எடுத்தல் மற்றும் அப்புலங்களில் நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்துதல் தொடர்பாக நில நிர்வாக ஆணையர் அளவில் குழு ஒன்றினை அமைத்து குத்தகை காலம் முடிவுற்ற குத்தகைகளையும், ஆக்கிரமிப்பு இனங்களையும் முடிவு செய்வது தொடர்பாக கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது:-

I. மாவட்ட அளவில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது:-

(அ) உதவி இயக்குநர், நிலஅளவை பதிவேடுகள் துறை, நீலகிரி.

(ஆ) நிலவரித்திட்ட அலுவலர்கள் - I & II (ஜென்மம் நிலங்கள்)

(இ) வருவாய் கோட்டாட்சியர், கூடலூர்.

(ஈ) மாவட்ட வன அலுவலர், கூடலூர்.

(உ) வன நிலவரித்திட்ட அலுவலர், நீலகிரி.

(ஊ) வட்டாட்சியர் - கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்கள்.

II. மாவட்ட அளவிலான இக்குழு மாதம் ஒருமுறை, கூடி நிலவரித்திட்ட அலுவலர்கள் I & II மேற்கொள்ளவேண்டிய பணிகள், குத்தகை காலம் முடிவுற்ற இனங்களை பரிசீலிக்க மாதாந்திர குறியீடு நிர்ணயம் செய்தல் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக பரிசீலித்து அதன் விவரங்களை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர்/ நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

III. மாநில அளவிலான ஒரு குழு, கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில நிருவாக ஆணையர் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது:-

(அ) அரசு சிறப்புச் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, தலைமைச்செயலகம், சென்னை

(ஆ) நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர், சென்னை.

(இ) இணை ஆணையர் (சினிமா & பாசனம்), நில நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை.

மாநில அளவிலான இக்குழுவால் மாவட்ட குழுவின் பரிந்துரைகளை பரிசீலனை செய்து தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

IV இதைத் தவிர ஜென்மம் நிலங்களில் நிலுவையிலுள்ள நிலவரித்திட்டப் பணிகளை விரைந்து முடிக்கவும், இதிலுள்ள ஆக்கிரமிப்புகளை முடிவு செய்வது குறித்த பரிசீலனைக்காகவும் அரசாணை எண்.73, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (FR-14), நாள் 19.3.2018-இல் மூன்று நபர்கள் அடங்கிய குழு ஒன்றினையும் அரசு நியமித்துள்ளது.

இக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து அரசால் தக்க முடிவெடுக்கப்படும்.

**திட்டங்கள்**

**(அ) நத்தம் நிலவரித்திட்டம்**

அரசாணை (பல்வகை) எண்.1971, வருவாய்த் துறை, நாள் 14.10.1988-ல் சென்னை பழைய நகரம் நீங்கலாக, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்களின் நத்தம் வீட்டு மனைகளிலும், விவசாயமில்லாத பிற பயன்பாட்டிலுள்ள விவசாய நிலங்களிலும் நிலவரித்திட்ட பணி மேற்கொள்ள அறிவிக்கை வெளியிட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் நத்தம் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மலைக் கிராமங்களில் நிலவரித்திட்டப் பணி**

மலைக் கிராம நிலஅளவைப் பணிகள் முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலத்திலுள்ள 67 மலைக் கிராமங்களில், நிலவரித்திட்டப் பணி தொடங்க உத்தரவிடப்பட்டது. இப்பணி 61 மலைக் கிராமங்களில் முடிக்கப்பட்டு 6 கிராமங்களில் முன்னேற்றத்திலுள்ளது.

**(இ) நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நிலவரித்திட்டப் பணி**

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் (சென்னை பழைய நகரம் தவிர) வருவாய் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும், நில உடமைதாரர்களுக்கு பட்டா வழங்கவும் வருவாய் நிருவாக பணிகளுக்காக நில ஆவணங்களை தயாரித்து அளிக்கவும் நிலவரித்திட்டப் பணி தொடங்க அரசால் உத்தரவிடப்பட்டது.

இதன்படி, மாநிலத்திலுள்ள 12 மாநகராட்சிகள் மற்றும் 150 நகராட்சிகளில் இப்பணி 24 நகராட்சிகளில் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளன. இப்பணி 6 மாநகராட்சிகளிலும் 63 நகராட்சிகளிலும், 78 தனி வட்டாட்சியர் அலகுகளின் மூலம் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள நகராட்சிகள்/ மாநகராட்சிகளை பொறுத்தவரையில், தற்போது பணி நடைபெற்று வரும் அலகுகளின் பணி முடிக்கப்பட்டவுடன், அவ்வலகு, பணி

தொடங்கவேண்டிய புதிய நகரத்தில் மறு அமர்வு செய்யப்பட்டு பலகட்டங்களாக பணி தொடங்கப்படும்.

நகர நிலவரித்திட்டத்தின் மூலம் 2011 முதல் பிப்ரவரி 2019 வரை 14,21,174 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**வக்ஃப் சொத்து கணக்கெடுப்புப் பணி**

வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் வக்ஃப் கூடுதல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களால் அவர்களது ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு பணி மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இப்பணி இதுவரை 25 மாவட்டங்களில் முடிக்கப்பட்டு மீதமுள்ள இதர மாவட்டங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**ஆர்.பி. உதயகுமார்**
**வருவாய் மற்றும் பேரிடர்**
**மேலாண்மைத்துறை அமைச்சர்**